ஜ | உ

ஜாதகத்தில்
[illegible]கள் எதிர்கா[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Collection of Suthumalai P.Sabaratnam
Ret.Cooporative Inspector
Donated by
Snr.Prof.N.Shanmugalingan Family

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே. ச. சுப்பையா
ஔடதப் பகுதி,
அரசினர்
ஆயுர்வேத வைத்தியசாலை,
கொழும்பு-8.

# ஜாதகத்தில்
# உங்கள் எதிர்காலம்

●

வே. தாமோதரம் பிள்ளை,

●

லக்கினவாரியாக திசா புத்தி பலன்கள்
ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JATHAKATHTHIL UNGAL ETHIRKAALAM

Written by:
V. THAMOTHARAM PILLAI

*COPYRIGHTS*
RESERVED WITH THE PUBLISHERS

Published by
VIRAKESARI
P. O. Box 160, COLOMBO.

Sole Distributors:
*Express Newspapers (Ceylon) Ltd.*
185, GRANDPASS ROAD,
COLOMBO-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஜோதிட சாஸ்திரம் மிகப் பழமை வாய்ந்த ஒரு கலை. கி. மு. 3500 ஆண்டுகட்கு முன்னிருந்த நைல், யூபிரட்டீஸ், டைகிறிஸ், இந்து நதி நாகரிகங்கள் தோன்றிய பழைய காலத்தில் சுமர் என்ற மெசப்பொத்தேமியப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட புராதன கல்வெட்டுகளில் இராசிச் சக்கரத்தில் சந்திரன் சஞ்சாரம் பற்றித் தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இப் பிரதேசத்திலும், இதையடுத்த பபிலோனியாவிலும் ஜோதிட சாஸ்திரம் 5000 ஆண்டுகட்கு முன்னரே பிரபல்யமடைந்திருக்கின்றது.

ஜோதிட சாஸ்திரம் வான சாஸ்திரத்திலேயே தங்கியுள்ளது. வான சாஸ்திரம் இல்லையேல் ஜோதிட சாஸ்திரம் இல்லை. ஆகவே, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் என்ன இராசி பூமட்டத்திற்கு மேல் உதயமாகின்றது? கிரகங்கள் அப்போது எந்தெந்த இராசியில், எந்தெந்தப் பாகை கலைகளில் இருக்கிறார்கள்? உதயமாகும் இராசிக்கு எவ்வித கோணத்தில் இருக்கின்றார்கள்? பல கிரகங்கள் ஒரே இராசியில் இருக்குமானால் இவர்கள் நெருக்கமாகி மூடமாகின்றார்களா? அல்லது இரு கிரகங்கள் இருக்கில் அவர்களுக்கிடையே எவ்வளவு பாகை கலைதூரம் இடமளிக்கின்றது? இதனால் அவர்கள் சம்பந்தம் ஏற்படுகின்றதா? என்பது போன்ற கேள்விகள் இயல்பானவை. ஒரு இராசி உதயமாகியிருந்தால் அவ்வுதயம் அவ்விராசியின் எத்தனையாவது பாகை, கலை என்பதையும், ஒரு குழந்தை ஜனனமாகும் போது உதயமான இராசி அப்போது தான் உதயமாகியதா அல்லது அவ்விராசி முடியும் தறுவாயிலா? என்ற பல விபரங்களை பஞ்சாங்க உதவியுடனும், கணித சாஸ்திர முறையுடனும் கண்டறிந்துதான் ஜோதிட பலன் சொல்லவேண்டியுள்ளது. மேலும் ஒரு இராசி உதயமாகும் போதோ, முடியும் போதோ ஒரு குழந்தை பிறந்தால் கண்டிப்பாக கிரகஸ்புடம் செய்தும் பாவஸ்புடம் செய்தும் பாவசக்கிரத்தில் கிரகம் அமையும் முறைக்கு தக்கவாறே அப்பலனை அறியவேண்டியுள்ளது. ஆகவே, ஒரு மகத்தான கட்டுக்கோப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்மேல் தங்கியுள்ள ஜோதிட சாஸ்திரத்தை ஓரளவுக்கு ஜன ரஞ்சகமாக்கும் தெளிவுடன் ஜாதகம் உள்ளவர்கள் தாங்க ளாகவே ஒரு ஜோதிடரின் துணையின்றி திசைபுத்தி பலன்களை லக்னவாரியாக அறியும் வகையில் சில கட்டுரைகளை வீரகேசரி வார வெளியீட்டில் 'வேதா' என்ற புனைபெயரில் எழுதி வந்தேன்.

பல காலமாக நான் படித்தும், அனுபவமாகக் கண்டும் வந்தவற்றை தொடர் கட்டுரையாக வெளியிட்டு இப்போது நூல்வடிவிலும் பிரசுரம் செய்யும் வீரகேசரி நிறுவனத்தின் பணி மகத்தான ஒரு பணி.

சிறப்பாக இந்தளவுக்கு ஊக்கந்தந்து நூலாக்குதற்கும் வசதியேற்படுத்தித் தந்த வீரகேசரி நிர்வாகஸ்தர் திரு. சி. பாலச்சந்திரனுக்கு பல வகையிலும் நான் நன்றியுடையேன்

★

"God is Subtle But He is Not Malicious" —Einstein.

''இறைவன் சூக்குமமானவன்; ஆனால், பழிவாங்குப வன் அல்லன்.''

—ஐன்ஸ்டீன்.

வே. தாமோதரம்பிள்ளை,

கொழும்பு.

ஜனவரி 78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாதசாபுக்தி

**அசுவினி — மகம் — மூலம்**
**கேதுதசை ௵ 7**

| புக்தி | ௵ | ௴ | நா |
|---|---|---|---|
| கேது | 0 | 4 | 27 |
| சுக்ர | 1 | 2 | 0 |
| சூரிய | 0 | 4 | 6 |
| சந்திர | 0 | 7 | 0 |
| செவ் | 0 | 4 | 27 |
| ராகு | 1 | 0 | 18 |
| குரு | 0 | 11 | 6 |
| சனி | 1 | 1 | 9 |
| புதன் | 0 | 11 | 27 |

**பரணி – பூரம் பூராடம்**
**சுக்கிரதசை ௵ 20**

| புக்தி | ௵ | ௴ | நா |
|---|---|---|---|
| சுக்ர | 3 | 4 | 0 |
| சூரிய | 1 | 0 | 0 |
| சந்திர | 1 | 8 | 0 |
| செவ் | 1 | 2 | 0 |
| ராகு | 3 | 0 | 0 |
| குரு | 2 | 8 | 0 |
| சனி | 3 | 2 | 0 |
| புதன் | 2 | 10 | 0 |
| கேது | 1 | 2 | 0 |

**கார்த்திகை – உத்தர உத்தராடம்**
**சூரியதசை ௵ 6**

| புக்தி | ௵ | ௴ | நா |
|---|---|---|---|
| சூரிய | 0 | 3 | 18 |
| சந்திர | 0 | 6 | 0 |
| செவ் | 0 | 4 | 6 |
| ராகு | 0 | 10 | 24 |
| குரு | 0 | 9 | 18 |
| சனி | 0 | 11 | 12 |
| புதன் | 0 | 10 | 6 |
| கேது | 0 | 4 | 6 |
| சுக்ர | 1 | 0 | 0 |

**ரோகிணி – அத்தம் திருவோணம்**
**சந்திரதசை ௵ 10**

| புக்தி | ௵ | ௴ | நா |
|---|---|---|---|
| சந்திர | 0 | 10 | 0 |
| செவ் | 0 | 7 | 0 |
| ராகு | 1 | 6 | 0 |
| குரு | 1 | 4 | 0 |
| சனி | 1 | 7 | 0 |
| புதன் | 1 | 5 | 0 |
| கேது | 0 | 7 | 0 |
| சுக்ர | 1 | 8 | 0 |
| சூரி | 0 | 6 | 0 |

**மிருகசீரி – சித்திரை அவிட்டம்**
**செவ்வாய் ௵ 7**

| புக்தி | ௵ | ௴ | நா |
|---|---|---|---|
| செவ் | 0 | 4 | 27 |
| ராகு | 1 | 0 | 18 |
| குரு | 0 | 11 | 6 |
| சனி | 1 | 1 | 9 |
| புதன் | 0 | 11 | 27 |
| கேது | 0 | 4 | 27 |
| சுக்ர | 1 | 2 | 0 |
| சூரிய | 0 | 4 | 6 |
| சந்திர | 0 | 7 | 0 |

**திருவாதிரை – சுவாதி சதயம்**
**ராகுதசை ௵ 18**

| புக்தி | ௵ | ௴ | நா |
|---|---|---|---|
| ராகு | 2 | 8 | 12 |
| குரு | 2 | 4 | 24 |
| சனி | 2 | 10 | 6 |
| புதன் | 2 | 6 | 18 |
| கேது | 1 | 0 | 18 |
| சுக்ர | 3 | 0 | 0 |
| சூரிய | 0 | 10 | 24 |
| சந்திர | 1 | 6 | 0 |
| செவ் | 1 | 0 | 18 |

**புனர்பூசம் – விசாகம் பூரட்டாதி**
**வியாழதசை ௵ 16**

| புக்தி | ௵ | ௴ | நா |
|---|---|---|---|
| வியா | 2 | 1 | 18 |
| சனி | 2 | 6 | 12 |
| புதன் | 2 | 3 | 6 |
| கேது | 0 | 11 | 6 |
| சுக்ர | 2 | 8 | 0 |
| சூரிய | 0 | 9 | 18 |
| சந்திர | 1 | 4 | 0 |
| செவ் | 0 | 11 | 6 |
| ராகு | 2 | 4 | 24 |

**பூசம் – அனுஷம் உத்தரட்டாதி**
**சனிதசை ௵ 19**

| புக்தி | ௵ | ௴ | நா |
|---|---|---|---|
| சனி | 3 | 0 | 3 |
| புதன் | 2 | 8 | 9 |
| கேது | 1 | 1 | 9 |
| சுக்ர | 3 | 2 | 0 |
| சூரிய | 0 | 11 | 12 |
| சந்திர | 1 | 7 | 0 |
| செவ் | 1 | 1 | 9 |
| ராகு | 2 | 10 | 6 |
| குரு | 2 | 6 | 12 |

**ஆயில்யம் – கேட்டை ரேவதி**
**புததசை ௵ 17**

| புக்தி | ௵ | ௴ | நா |
|---|---|---|---|
| புதன் | 2 | 4 | 27 |
| கேது | 0 | 11 | 27 |
| சுக்ர | 2 | 10 | 0 |
| சூரிய | 0 | 10 | 6 |
| சந்திர | 1 | 5 | 0 |
| செவ் | 0 | 11 | 27 |
| ராகு | 2 | 6 | 18 |
| குரு | 2 | 3 | 6 |
| சனி | 2 | 8 | 9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக ஆட்சி உச்ச நீசங்கள்

மீனம் புதன் - நீசம். குரு - ஆட்சி. சுக்கிர - உச்சம்.
மேடம் சூரிய - உச்சம். செவ் - ஆட்சி. சனி - நீசம்.
இடபம் சந்திர - உச்சம். சுக்கிர - ஆட்சி. ராகு-நீசம்.
மிதுனம் புதன் - ஆட்சி.
கும்பம் சனி - ஆட்சி.
கர்க்கடகம் சந்திர-ஆட்சி. செவ்-நீசம். குரு-உச்சம்.
மகரம் செவ் - உச்சம். குரு-நீசம். சனி ஆட்சி
சிங்கம் சூரிய - ஆட்சி.
தனு குரு - ஆட்சி.
விருச்சிகம் சந்திர-நீசம்.செவ்-ஆட்சி. ராகு,கே-உச்ச
துலாம் சூரியன்-நீசம். சுக்கிரன்-ஆட்சி. சனி-உச்சம்.
கன்னி புதன் - ஆட்சி; உச்சம். சுக்கிரன் - நீசம்.

## கிரக நோக்கம்

தான் நின்ற இராசியிலிருந்து சனி மூன்றும் பத்தாம் இராசிகளையும், குரு ஐந்தாம், ஒன்பதாம் இராசிகளையும், செவ்வாய் நான்காம் எட்டாம் இராசிகளையும், சூரியன் சந்திரன் இராகு கேதுக்கள் ஏழாம் இராசியையும் நோக்குவர். சனி, குரு, செவ்வாய் மூவரும் ஏழாமிடத்தையும் நோக்குவர்.

## மகாதிசை கணிப்பதெப்படி?

நட்சத்திரத்தில்செல்லாநின்ற நாழிகையை விநாடியாக்கி அந்த நட்சத்திரத் தெசாவருடத்தால் பெருக்கி அந்த நட்சத்திரப் பரம நாழிகையை விநாடியாக்கிய தொகையாற் பிரிக்க வருவது வருஷம். எச்சத்தை பன்னிரண்டாற்பெருக்கி மேற்படி தொகையாற் பிரிக்க வருவது மாதம். எச்சத்தை முப்பதாற் பெருக்கிப் பிரிக்க வருவது நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்க்கை சுவையானது. ஆயினும் வியக்கத் தக்கது. அதிலே வாழ்வும் தாழ்வும் மாறி மாறி வருகின்றன. இளமைப் பருவத்தில் வறுமையால் வாடிய ஒருவன், பின்னர் சீரும் சிறப்புடன் செல்வத்தில் மிதக்கின்றான். பஞ்சணை மெத்தையில் பள்ளிகொண்டு பாலும், பழமும் உண்டு வளர்ந்த இன்னொருவன், தங்க இடமின்றி தரித்திரனாய் அலைகின்றான். தறுதலையாகக் கெட்டலைந்த பிறிதொருவன் தரும வானாகத் தானம் வழங்குகின்றான். அறிவாற்றலும், அஞ்சா நெஞ்சமும் கொண்டு தக்கதோர் தலைவனாக விளங்கிய வேறொருவன், மதிப்பிழந்து, மனஞ்சோர்ந்து மங்கிவிடுகிறான். ஒருவன் ஏறுகிறான். வேறொருவன் இறங்குகிறான். ஏற்றத்திற்குக் காரணம் அவனது அதிர்ஷ்டமென்பர். இறக்கத்திற்குக் காரணம் அவனது காலம் என்பர். இந்த அதிர்ஷ்டமும் காலமும் எதனைக்குறிக்கின்றன என்பதைச் சோதிடம் பார்க்கும் அனைவரும் அறிவோம். நாம் பிறந்த லக்கினம் யாது? நமக்கு நடக்கும் திசை,புத்தி யாவை? என்பதனை யாம் அறிந்திருந்தால் கெடுதியான காலங்களில் ஒதுங்கி வாழவும், நன்மையான காலங்களில் துணிந்து ஒன்றில் இறங்கவும் முடியும். சோதிட அறிவை வழிகாட்டியாகப் பயன்படுத்தி நம் வாழ்க்கைப் பாதையை அமைத்தற்குப் பன்னிரு லக்கினங்களைப் பற்றியும், ஒவ்வொரு லக்கினத்திற்கும் எந்தெந்தத் திசைகள் நன்மையானவை? தீமையானவை? என்பதையும் அறிதல் வேண்டும்.

சூரிய மண்டலத்தில்- சூரியனை மத்தியாய்க் கொண்டு அதற்கு அடுத்துள்ள புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய கிரகங்கள் சூரியனை சுற்றி வலம் வருகின்றன. சந்திரனே பூமியை வலம் வருகின்றது. மேலும் பூமி சூரியனை சுற்றி வலம் வருவதுடன் பம்பரம் போல் தன்னைத்தானே ஒரு தரம் ஒரு நாளைக்கு சுழல்கின்றது.. இவ்விதம் சுழல்வதால் பூமிக்கு பகல் இரவு உண்டாவதுடன் பூமிக்கு வெளியே உள்ள ஆகாயம், கிரகங்கள், அவை சஞ்சரிக்கும் பாதை, அதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பால் உள்ள காலாந்திரம் சென்றாலும், அசையாமல் இருப்பது போல் தோன்றும் நட்சத்திரக் கூட்டங்கள் ஆகியவை கிழக்கே உதயமாகி மேற்கு நோக்கி பூமியை ஒரு நாளில் ஒரு தரம் சுற்றுவதாக நமக்கு தோன்றுகின்றது. இந்தக் கிரகங்கள் சஞ்சரிக்கும் பாதையை நாம் இராசி மண்டலம் என்கின்றோம். நம் முன்னோர் இவ்வட்டத்தை 360 பாகை கொண்டதாகவும், இதில் மேடம் முதல் மீனம் வரையுள்ள 12 இராசிகளும் அச்சுவினி முதல் ரேவதிவரை உள்ள நட்சத்திர கூட்டங்களையும் உள் அடக்கி இருக்கின்றார்கள். இந்த இராசி மண்டலத்தில் பாதி 180பாகை பூமிக்கு மேல் உள்ளதாகவும், எஞ்சிய பாதி 180 பாகை பூமிக்குக் கீழ் இருப்பதாகவும்— பூமி கிழக்கு நோக்கி சுற்றுவதால் கீழ் உள்ள பாகம் பாதாளத்திற்கும், ஆகாயத்திற்கும் நடுவே பூமி மட்டத்தின் மேலே கி ள ம் பி க் கொண்டிருக்கும் பாகம் எதுவோ அதுவே லக்கினம் எனப்படும்.

ஒரு குழந்தை ஜனனமாகும் நேரத்தில் கிழக்கில் பூமட்டத்தின் மேல் கிளம்பிக் கொண்டு அல்லது உதயமாகிக் கொண்டிருக்கும் பாகம் எந்த இராசியாக இருக்கிறதோ அதுவே அக்குழந்தை ஜனன காலத்தில் உதயமான லக்கினம்— 12 இராசிகளும் ஒரு நாளில் பூமியை ஒரு சுற்றுச் சுற்றி முடிக்கின்றன. எனவே, கிட்டமுட்ட 2 மணித்தியாலத்திற்கு ஒரு இராசி உதயமாகி முடிய எடுக்கும். ஆகவே, 4 நிமிஷத்திற்கு ஒரு பாகை வீதம் இந்த இராசிச் சக்கரம் கிழக்கே உதயமாகிய வண்ணம் இருக்கிறது. ஒரு குழந்தை ஜனனமான நேரம் உதயமாகும் லக்கினம் மிகமிக முக்கியம். இந்த லக்கினத்தை மத்தியாகக் கொண்டே சாதகரின் வாழ்க்கை வரலாற்றை நிச்சயிக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே, இந்த லக்கினம் மிக துல்லியமாக கணிக்கப்பட வேண்டியது.

மேலும், ஒரு குழந்தை ஜனனமான நேரத்தில் முன் கூறிய உதய லக்கினம் மட்டுமல்ல, அப்போதைக்கு எந்தெந்த இராசிகளில் கிரகங்கள் சஞ்சரிக்கின்றன என்றும், அன்றைய நட்சத்திரம் என்ன? அது எப்போது ஆரம்பமானது? எப்போ முடிகின்றது? குழந்தை ஜனனமாகும் வேளையில் இந்த நட்சத்திரத்தில் எவ்வளவு நாடிவினாடி சென்றது? எவ்வளவு நாடி வினாடி இன்னும் செல்ல இருக்கிறது என்றும், அன்றைய சந்திரன் சஞ்சரிக்கும் நட்சத்திரத்திற்கு அதிபதி எந்தக்கிரகம் என்றும், அக்கிரகத்தின் உடுதசா நட்சத்திர திசை எவ்வளவு காலத்திற்கு இருக்கும்என்றும், இந்த ஆரம்பத்திசையைத்தொடர்ந்து வரும் திசைகளைப்பற்றியும் கூறும் விபரமே சாதகம் எனப்படும்.

இந்நூலில் திசை புத்தி விஷயமாக எழுதப்படுவதால் நீங்கள் சாதாரண சோதிட புத்தகங்களில் துவாதச பாவபலன்கள் என்று கூறும், 12 பாவங்களைப்பற்றிய அதாவது, லக்கினம் சரீரம் மனம் (2) இரண்டு குடும்பம், தனம் (3) மூன்று சகோதரம் (4) நாலு மாதா கல்வி, காணி, பூமி, வீடு. (5) புத்தி, புதல்வர் பூர்வபுண்ணியம் (6) பகைவர், நோய், பீடை, கடன், அரசபயம் (7) காத்திரம். (8) நோய், பீடை (9) பாக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள். (10) தொழில் (11) லாபம். (12) விரயம், செலவு ஆகிய 12 வீடுகளுக்கு (பாவங்கட்கு) கூறும் சுப அசுப பலன்களைக் கண்டு கொள்ள நிர்ணயிக்கப்பட்ட விதிகள் வேறு.

திசை புத்தி விபரங்களுக்கு கையாளும் விதிகள் வேறு. ஆகவே, இவற்றைக் கலந்து கொள்ளாதிருப்பது நல்லது. திசைகளைப்பற்றி பலன் கூறும் பொழுது ஒரு லக்கினத்திற்கு 5 வது 9 வது வீட்டதிபதிகளாக எந்தக் கிரகம் வருகின்றதோ அக்கிரகம் தனது திசையில் யோக திசையைக் கொடுப்பதாக சோதிட மேதைகள் கூறுகிறார்கள் அதே விதம்-

3, 6, 8, 11ம் வீடுகளுக்கு அதிபதிகளாகும் கிரகங்கள் தங்கள் திசைகளில் பலவித கஷ்ட நஷ்டங்களைச் செய்வதாக கூறுகிறார்கள். இதே விதிகளைத் தழுவி இக் கட்டுரைகளை எழுதி இருக்கிறேன். உதாரணமாக மேடலக்கினத்திற்குவியாழ திசை, சூரியதிசைகளை யோக திசையாகவும் புதன் திசை 3, 6ம் வீட்டதிபதியாகையால் தீய பலனைச் செய்வான் என்றும், இடபலக்கினத்திற்கு சனி 9, 10ம் வீட்டதிபதியாவதால் பெரும் யோகத்தை செய்ய வல்லவன் என்றும் வியாழன் 8, 11ம் வீட்டதிபதியாவதால் தீயபலனைச் செய்யும் என்றும்— மிதுன லக்கினத்திற்கு சனியும், சுக்கிரனும் சுபபலனை தங்கள் திசைகளில் செய்யும் என்றும், செவ்வாய் திசை பெரும் துன்பத்தைக் கொடுக்கும் என்றும் கூறி இருக்கின்றேன். ஆகவே, மற்ற லக்கினங்களுக்கும் இதே விதிகளைத் தழுவி பலன் கூறப்பட்டிருக்கிறது. வாசித்து பயன் அடையுங்கள்.

-வே. தா.-

# மேடம்

மேட லக்கினத்திற்கு வியாழனும், சூரியனும் சுப பலனைச் செய்யக் கூடிய கிரகங்கள். இவர்கள் திசை மிகவும் சோபனமானது. சுக்கிரன், சந்திரன், செவ்வாய் திசைகள் சுமாரான சமபலனைச் செய்யும்.

புதன், சனி இவை தீய பலனைச் செய்யக் கூடியவைகள். இராகு, கேதுக்கள் திசைகளும் இவர் ஆயுட்காலத்தில் வருமாயின் இவருக்குக் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும். மேட லக்கின சாதகருக்கு வியாழன்-பாக்கியநாதன், யோககாரகன். இவர் திசை 16 வருடத்திற்கு நடக்கும். எல்லா மேட லக்கின சாதகருக்கும் அவர்கள் சீவிய காலத்தில் வியாழ திசை வருவதில்லை. ஆகவே, வியாழ திசையை அனுபவிக்கும் மேட லக்கின சாதகர் யோகவான் என்பதில் சந்தேகமில்லை! இவருக்கு ஒருவித புதிய உற்சாகமும், ஊக்கமும் இத் திசையில் ஏற்படும். இவரின் கம்பீரமும், சாந்தம் நிறைந்த சந்தோஷகரமான முகமும் எவரையும் வசியப்படுத்துகின்றன. இவ்வியாழ திசை துவங்குமுன் நடந்த ராகுதிசை இவருக்கு பலவித ஏற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றத் தாழ்வையும், கஷ்ட நஷ்டங்களையும் கொடுத்து இவரைச் சிப்பிலி ஆட்டியிருக்கும் காரணத்தால் இவருக்கு வியாழ திசை தோன்ற புதிய உலக அனுபவமும், அறிவும், ஆற்றலும் உண்டாகின்றன. இவர் எவ்வித நிலைமையையும் சமாளிக்கக்கூடிய திறமை உடையவராகையால் அவரின் வாழ்க்கைப் பாதையில் சிக்கல்கள் ஏற்படாது விழிப்புடன் இருப்பார். இவரின் நேர்மையும், பரந்த நோக்கமும் இவருக்கு முன்னேற்றமடைய பல வாய்ப்புகளைத் தோற்றுவிக்கின்றன. ஆகவே, இவர் தங்கு தடையின்றி முன்னேறுகின்றார். இவருக்கு மேலதிகாரிகளின் ஆதரவும், அன்பும் கிடைக்கின்றன. இவருக்கு நல்லவன் என்ற மதிப்பும் கிடைக்கின்றது. ஆகவே, உத்தியோக உயர்வும், தொழிலில் விருத்தியும் ஏற்பட்டு அதிக லாபத்தைத் தேடிக் கொள்கின்றார். இவர் எவ்விதத் தொழிலையும் சாமர்த்தியமாகவும், திறமையாகவும் செய்து முடிப்பார். இச் சாதகருக்கு இத்திசையில் பெரும் பொருள் வந்து சேரும். இவர் காணி, பூமி, வீடு, வாசல் இவற்றையும், வாகனங்களையும் தேடிக் கொள்வார். இவருக்குப் பொருள் சேரச் சேர இவர் தெய்வத் தொண்டிலும் ஈடுபடுவார். இவர் குடும்ப நிறைவுடன் சந்தோஷமான வாழ்க்கை வாழ்வார். ஒருவருக்கு இத்திசை பாலியத்தில் நடந்தால், அக்காலத்தில் சாதகரின் பிதா பிரசித்தி அடைவதுடன், தனத்தையும் சேர்த்துக் கொள்வார். சாதகரும் சுகசௌகர்ய வாழ்க்கை வாழ்வார். இவரின் கல்வி அறிவிற்கும், படிப்புத் திறமைக்கும் வியாழதிசை உதவியாக இருக்கும். நடு வயதில் இத்திசை துவங்குவதுதான் விசேஷம். விவாகம், குழந்தைப் பேறு, காணி பூமி, உயர் பதவி இவை எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக வரும். பின் வயதில் இத்திசை வந்தால் சாதகர் தெய்வ பக்தியில் ஈடுபட்டு புனித வாழ்க்கை வாழ முயற்சிப்பார். இவருக்கு அருளும் பொருளும் சேரும். இவ்வித பலனை அடைய இந்த வியாழன் சாதகத்தில் 5ம், 9ம், வீடுகளில் இருந்தாலும் 1, 4, 7ம் வீடுகளில் இருந்தாலும் நடக்கும். மேலும் வியாழன் பலம் குறைந்து 6, 8, 12ல் இருந்தாலும், அல்லது நீசமடைந்திருந்தாலும், இது மகா சுபனானபடியால் சாதகரை வீழ்த்திவிடமாட்டாது. ஆனால், பலன் குறைவாகவே நடக்கும். இந்த வியாழ திசையில் சனி, புதன், கேது புத்திகள் நடக்கும் காலங்களில் சாதகர் நிதானமாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். விசேடமாக நோய், பீடை, மனச்சஞ்சலம், இனப்பகை உண்டாகலாம். சனி புத்தியும் சில சமயம் நன்மையாக நடக்கலாம். சனி பத்தில் இருக்க நேரிடில் ஒரு சாதகத்தில், 9, 10, 11ம் வீடுகள் மிக முக்கியமானவை. ஆகவே, இவற்றில் கிரகங்கள் இருக்கப் பிறந்த சாதகர்கள் துலக்கமாக இருப்பார்கள்.

இந்த மேட லக்கின சாதகருக்கு ராஜயோகம், தனயோகம் ஆகியவை ஏற்பட வியாழனும், சூரியனும் பிரதானமானவை. ஆகவே, சூரியன் சனியுடன் சேர்ந்திருந்தாலோ, ஒருவரை ஒருவர் பார்த்தாலோ ராஜயோகம் உண்டு. அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதம் வியாழனும் சனியும் சேர்ந்தாலும், ஒருவரை ஒருவர் பார்த்தாலும், ஒருவர் வீட்டில் மற்றவர் மாறி இருந்தாலும் ராஜயோகம் உண்டு. ஆனால், சனிக்கு 11ம் வீட்டு அதிபதித் தன்மையினாலும், இருவரும் முரண்பட்ட தன்மை உடையவர்களாக இருப்பதாலும், இந்த ராஜயோகம் பலம் குறைந்ததாகவே சோதிடர் கருதுகின்றனர். மேலும் இந்த ராஜயோகத்தை ஏற்படுத்தும் கிரகங்கள் 6, 8, 12ல் இருக்காது 1, 4, 7, 10, 5, 9 போன்ற இடங்களில் இருக்கில் ராஜயோகம் பூரண பலனை உண்டாக்கும். அல்லது வியாழன் 9ம் வீட்டிலும், சனி 10ம் வீட்டிலுமிருப்பினுமிவர் யோகத்தை உடையவராகின்றார். இவ்வித யோகமுள்ளவர்கள் இவ்வுலக சுகபோகங்களை அனுபவிக்கின்றார்கள். அத்துடன் (1) சூரியன், புதன் கிரகங்கள் ஒன்று சேர்ந்தாலும், (2) புதன், சுக்கிரன் சேர்ந்திருந்தாலும் முன் கூறிய ராஜ யோகத்திற்கு இந்தக் கிரக யோகங்கள் மெருகூட்டி வலுப்படுத்துகின்றன.

மேட லக்கின சாதகர் இவ்வுலகில் செழிப்பாக, செல்வந்தராக வாழ வேண்டில் சாதகத்தில் தனயோகம் இருக்க வேண்டும். அவ்வித தனயோகம் (1) வியாழன், சனி சேர்ந்தாலும் (2) சூரியனும் சனியும் சேர்ந்தாலும் (3) வியாழனும் சுக்கிரனும் சேர்ந்தாலும் (4) சூரியனும் சுக்கிரனும் சேர்ந்தாலும் (5) வியாழனும் சூரியனும் சேர்ந்தாலும் உண்டாகிறது. மேலும் சுக்கிரன், வியாழன், சனி இவைகள் தத்தமது வீடுகளில் இருந்தாலும் சாதகர் தனவானாவார். இவ்வித யோகங்கள் விசேஷமாக 2, 9, 11ம் வீடுகளில் அமைந்தால் மிகவும் பலம் பொருந்திய யோகம் ஏற்படும். அப்படியில்லாது, முன் கூறிய கிரகங்கள் இரண்டும் வீடு மாறி பரிவர்த்தனம் பெற்றாலும் யோகம் பலன் செய்யும். 6, 8, 12 அல்லாத மற்ற இடங்களில் இந்தக் கிரகங்கள் சேர்ந்திருந்தாலும் பலன் சொற்பம் குறைவாகவே நடக்கும்.

விபரீத ராஜயோகம்: (1) புதன், செவ்வாய், வியாழன் இம்மூன்று கிரகங்களும் 6, 8. 12ம் வீட்டில் இருந்தாலும் (2) புதனும், செவ்வாயும் கூடி 6, 8, 12ல் எதில் இருந்தாலும் (3) செவ்வாயும் வியாழனும் கூடி எட்டிலோ பன்னிரண்டிலோ இருந்தாலும் (4) புதனும் வியாழனும் சேர்ந்து 6, 8ல் அல்லது 12ல் இருந்தாலும் அல்லது முன் கூறப்பட்ட கிரகங்கள் வீடுமாறி இருப்பினும் இவ்வித யோகங்கள் சாதகரை முன்னுக்குக் கொண்டு வந்து விடுவதுடன், சகல சம்பத்துமுடையவராக்கிவிடும்.

மகா புருஷயோகம் என்று கூறப்படும் ஒருவித பலம் பொருந்திய ராஜயோகத்தைப் பற்றி முன்னோர்கள் கூறுகின்றார்கள். இந்தவித மகாபுருஷ யோகம் மேட லக்கின சாதகருக்கு ஏற்பட (1) செவ்வாய் லக்கினத்திலோ, பத்திலோ இருக்க வேண்டும். (2) வியாழன் 4ல் உச்சம் பெற வேண்டும். (3) சுக்கிரன் 7ல் இருக்க வேண்டும். (4) சனி 4ல் உச்சம் பெறவேண்டும். (5) சனி 10ல் இருப்பினும் இந்த யோகம் பலன் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவித யோகம் மேட லக்கின சாதகரை மதிப்புடைய வராகவும், அதிகாரம், செல்வாக்கு உடையவராகவும், தனம், சொத்துச் சுகம் இவைகள் நிறைந்தவராகவும் ஆக்குகின்றது. மேட லக்கின சாதகருக்கு குரு (வியாழன்), சந்திரன் சேர்வது மேலான யோகம். இவ்வித யோகம் 4ம் வீட்டிலோ (கடகம்) அல்லது 9ம் வீட்டிலோ சேர்ந்தால் இந்தக் குரு சந்திர யோகம் சாதகர் காணி, பூமி, வீடுகள் நிறைந்தவராயும், செல்வந்தனு யும், உத்தமனுயும், இறைவன் அருள் பெற்றவனுகவும் வர உதவுகின்றது.

மேட லக்கின சாதகருக்கு யோகவான் வியாழன். அவர் திசைக்கு அடுத்தபடியாக சூரிய திசை சோபனமான பலனைச் செய்யும். சாதகர் முன் நிலையிலும் உயர்வாகவே சூரியனில் பிரகாசிப்பார். சந்திர திசை தனிமையாக இருக்கில் கஷ்ட மில்லாத சுகவாழ்க்கையைக் கொடுக்கும். வியாழன் சேர்க் கையோ, பார்வையோ பெறின் சகல ஐஸ்வரியத்தையும் கொடுக்கும். செவ்வாய் திசை கெடுத்து விடாது நல்ல பலன் செய்யும். சூரிய திசையில் பிறந்தவர்கள் செவ்வாய் திசை முடிவு வரை தளப்பமில்லாது வாழ்க்கையை நடத்துவார்கள். ஆனுல், இராகு திசை 18 வருடம் நடக்குமாகில் சாதகருக்கு வாழ்க்கை ஏற்றம் இறக்கம், கஷ்ட நஷ்டம் நிறைந்ததாகவே இருக்கும். இத் திசையில் ஒருவர் மனநிறைவு அடைவதில்லை. சகலவித சஞ்சலங்களும் உண்டாகும். சனி திசை மட்டமான திசை. ஆனுல், வியாழ திசையை அனுபவித்தவர்கள் சனி திசையை சுலபமாகக் கழித்துவிடுகின்றுர்கள். அநேக அர சாங்க உத்தியோகத்தர்கள் வியாழ திசையில் தொழில் ஆரம் பித்து கௌரவமாக அவர்கள் சேவையை சனியில் நடத்தி உயர்பீடத்தையும் அடைந்து ஓய்வு எடுத்திருக்கின்றுர்கள். வலுக்குறைந்த சாதகத்தை உடையவர்கள் வியாழனில் தேடிய தேட்டத்தை சனியில் பறி கொடுத்து விடுகின்றுர்கள்.

மேட லக்கின சாதகருக்கு புதன் திசை நன்மை செய்யும் என்று சொல்வதற்கில்லை. இவர் 3, 6ம் இடங்களில் தீயவர். இவர் சாதகத்தில் 6, 8, 12ல் இருந்தாலோ நீசமடைந்தாலோ (12) விபரீத பலன் நடக்காது. அதேவிதம் வியாழனுடைய அல்லது சூரியனுடைய சேர்க்கை ஏற்படினும் பலன் ஒருவாறு நன்மையாக நடக்கும். மேட லக்கினக்காரனுக்கு சுக்கிர திசை சுமாரான பலன்தான் செய்வான். இவனுக்கு மாறுத தோச மில்லை. சுக்கிர திசை விசேஷ பலன் செய்ய வேண்டில் வியா ழன், சூரியனுடைய சேர்க்கையோ பார்வையோ பெறவேண் டும். கேது திசை கஷ்டமாகவே இருக்கும். சஞ்சலம் நிறைந்த காலம். கஷ்டமும், நஷ்டமும் ஒன்றன் பின் ஒன்றுக வரும். உலக வாழ்க்கையில் சந்தோஷம் துக்கம் (சுகம் துக்கம்) இரண்டு தான் உண்டு. கேது திசையில் சாதகர் சமூகத்தினின்று ஒதுங் கிக் கொள்வது நல்லது.

மேட லக்கின சாதகருக்கு புதன் திசையும் அதை அடுத்து வரும் கேது திசையும் மிகவும் தீய திசைகளாக இருப்பதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திசைகளைப் பற்றி இங்கு ஆராய்வோம். புதன் 3ம்,6ம் வீடுகளுக்கு அதிபதியாவார். ஆகவே இவர் திசை தீயதே. இப்புதன் 3, 8, 12ல் இருந்தால் அல்லது நீசமடைந்திருந்தால் அல்லது சூரியன் வியாழனுடன் சேர்ந்திருந்தால் அல்லது அவர்களின் பார்வையைப் பெற்றிருந்தால் இப்புதன் பெருந் தீங்கை செய்யாது. சுப பலனையே கொடுப்பார். அப்படி அல்லாவிட்டால் சாதகர் இத்திசையில் மிக மிகக் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். இவர் திசையில் கஷ்டமும் நஷ்டமும் நோய் பீடையும் காண்பது மட்டுமல்ல சாதகரின் மனதே கலங்கத்தக்க நிலைக்கு சாதகரைக் கொண்டு வந்து விடும்.

"மாதுகேள் வியாதி, சத்துருபீடை மற்றுமாயுதங்களால் விரணம் ஓதிய ஞாதியால் வரும் துன்பம் உற்றமெய்வாதை பொற்கண்டம்" என்று சாதகலங்காரம் ஆறும் வீட்டைப்பற்றி கூறுகின்றது.

இந்த இடமே வறுமைக்கும் தரித்திரத்திற்கும் காரணம். மனநிம்மதி, தொழில், பணம் பொருள், தேகாரோக்கியம் இவை எல்லாம் காக்கப்படுவதால் சாதகர் இவைகளை நன் குணர்ந்து தமது வாழ்க்கையைத் தக்கவாறு அமைத்துக் கொள்வதுடன் சமூகத்தினின்றும் விலகிக்கொள்வது உசிதம். தன்னை ஒறுத்து வாழ்வதும் பஞ்சேந்திரியங்களைக் கட்டுப்படுத்திக்கொள்வதும் அவசியம். நிலையை உணர்ந்து ஒழுக்கமாக வாழப்பழகியவர்கள் இத்திசையை தாண்டிவிடலாம். இந்த புதனின் கடைசிப் புத்தி சனியுடையதாக வருவதால் இவர்கள் 3, 6, 11ம் வீட்டதிபதிகளாவதால் இத்திசையில் சனி புத்தியும் இதை அடுத்து வரும் கேது திசையும் நடக்கும் போது சாதகர் நிலை குலைந்து விடுவார். கேது திசை 7 வருஷம் நடக்கும் காலத்தில் சாதகர் தன் சுய புத்தியை இழந்தவராகக் காணப்படுவார். இவர் சமூகத்துடன் ஒத்துழைக்க மறுக்கின்றார். இவர் கெட்டதையே செய்ய இவர் மனம் தூண்டும். இவரின் சாகாக்களும் தீயவர்களே. ஆகவே கலகம், அபகீர்த்தி, ராஜபயம், பணக் கஷ்டம், குடும்பக் கஷ்டம், கவலை இவை காரணமாய் மனம் நொந்து உலகையே வெறுக்கின்றார்.

இவ்வித கேது திசையில் ஒருவர் பலவித இன்னல்களுக்கு ஆளாக வேண்டிவரும். தொழில் முன்னேற்றம் பாதிக்கப்படும். முன் தேடிய தேட்டம் இருந்தால் அவை கரைந்து விடும். சில்லறை ஆசா பாசங்கட்கு அடிமையாகிவிடுவார். இவரின் இன பந்துக்களுமே இவரை வெறுப்பர். ஆகவே சாதகர் மனதை அடக்கி சீலமாக நடக்கவேண்டியது அவசியம். அன்றேல் இவர் வாழ்க்கை பயனற்றதாகிவிடும். ஒரு மேதை 1890ல் எழுதிய புத்தகத்தில் கூறும் அபிப்பிராயத்தில் ஒருபகுதியை இங்கு தருகிறேன். "ஒரு மனிதன் இவ்வுலகில் செய்யும் நல்வினை தீவினைக்கு சுவர்க்கத்தில் சுகமோ, நரகத்தில் வேதனையோ கிடைப்பதாக ஆகமங்கள் கூறுகின்றன. ஆனால், ஒருவன் இவ்வுலகில் தன் நாளாந்த தீய பழக்கத்தால் பண்புகளைத் தவறான வழியில் உருவாக்கி தனக்குத் தானே நரக வேதனையிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய வேதனையை உண்டாக்குகின்றான். அவனுடைய தீய பழக்கங்கள் அவனையே அடிமையாக்கி நடைப்பிணமாக்கி விடுகின்றன. அவனே தனது விதியை வினைகளுக்கேற்ப நல்லதாகவோ தீயதாகவோ எழுதுகின்றான். அதை ஒரு போதும் அழிக்க முடியாது. ஒவ்வொரு சிறிய நல்வினையும் தீவினையும் அவன் மனதில் சிறிய மறுவாகப் படிவதில்லை. அவன் மூளையிலும் நரம்புக் கலன்களிலும் தசை நார்களிலும் அணுக்கூறுகளிலும் பதிவாக்கி எண்ணிக் கொண்டும் சேகரித்துக்கொண்டும் பதிவு செய்து கொண்டும் இருக்கின்றது. இதற்கு ஏற்ப அவன் ஒரு தெய்வமாகவோ அல்லது ராட்சதனாகவோ இவன் மனமே இவனை ஆக்கிவிடுகின்றது. ஒரு இளைஞன் தன் கல்வியை உன்னிப்பாகவும் கவனமாகவும் பற்று றுதியுடனும் ஏற்பானேயானால் சந்தேகமில்லாது அவன் ஞாபகம் என்னும் மனம் அவன் பரீட்சைக் காலத்தில் அவனைக் கைவிடாது. அவனை விட்டு ஒரு போதும் அகலாத உடைமையாக அவன் அறியாமலே அவனுள்ளே வளர்ந்திருந்து கொண்டு அவனை சிரேஷ்டனாக்கிவிடும்''.

''தெய்வத்தாலாகா தெனினும் முயற்சி தன்மெய்வருந்தக் கூலிதரும்''. மேலே மேடலக்கின சாதகர்கட்கு வரும் கிரக திசைகளைப் பற்றி எழுதினேன். இப்போது திசையின் உட்பிரிவாகிய புத்திகளைப் பற்றி ஆராய்வோம். மேட லக்கினத்திற்கு சுபர்: சூரியன், வியாழன். அசுபர்: புதன், சனி, இராகு, கேதுக்கள். சாரமற்ற சமபலனை செய்வோர்: செவ்வாய், சந்திரன், சுக்கிரன் ஆகவே எல்லா திசைகளிலும் சூரிய புத்தியும் வியாழ புத்தியும் சுப பலனைக் கொடுத்து சாதகரை உயர்த்தும். அப்படியே எல்லாத் திசைகளிலும் புதன் புத்தி, சனி புத்தி, இராகு கேதுக்களின் புத்திகள் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் கொடுக்கும். ஏனைய கிரகங்களான செவ்வாய், சந்திரன், சுக்கிரன் இவர்கள் புத்தி காலத்தில் சமமான பலனைச் செய்வார்கள். விசேஷநன்மையுமில்லை தீமையுமில்லை. சிரேஷ்ட சாதகங்களில் இவ்வித தீய கிரகங்கள் நீசமடைந்திருப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடபம்

இடப லக்கினத்திற்கு லக்கினாதிபதி சுக்கிரன். சுக்கிரன்-ஐம்புலன்களுக்கும்இன்பம் கொடுக்கின்றசுகபோகங்களுக்கு காரகன். ஆகவே, சாதகர் அழகிய பெண்மணிகளின் சகவாசம் ஆடை ஆபரண அலங்காரம் சுகசௌகரிய வாழ்க்கை இவைகளில் பற்றுள்ள ஒரு நாகரீக மனிதர்-சுகபோகி. இந்த லக்கினத்திற்கு-சுபர் எனக் கருதப்படும் கிரகங்கள்-சனியும் புதனுமே. இவர்களின் திசைகள் மிகவும் சோபனமானவை. இந்த லக்கினத்திற்கு பாவிகள்-சந்திரன்-சுக்கிரன்-வியாழன்.இவர்கள் திசைகள் தீயபலனைச் செய்யும்.

சூரியனும் செவ்வாயும் சமபலனை தத்தம் திசைகளில் கொடுப்பர்.ஆனால், இவர்கள் முன்கூறிய சுபரான சனி, புதன் சேர்க்கையோ பார்வையோ பெறில் இவர்களும் விரும்பத்தக்க சுபபலனைச் செய்வர். முன்கூறிய வியாழன், சந்திரன், சுக்கிரனுடன் சுபக்கிரகங்களாகிய சனியோ புதனோ சேர்ந்தால் அவ்வித சேர்க்கை சுபக்கிரகம் கொடுக்கும் நல்ல பலன்களை கெடுத்துவிடும் என்று சிலர் அபிப்பிராயம் கொள்வர். ஆனால், இவ்விதசம்பந்தத்தினால் பாவக் கிரகம் தனது தீய பலனை இழந்து விடும் என்றும் அபிப்பிராயம் உண்டு. எனினும் இவ்வித யோகம் பாவக்கிரகத்தை நன்மையான பலனைக் கொடுக்க வழி வகுக்கின்றது. இந்த இடப லக்கினத்திற்கு- இராஜ யோகத்தை (1) சனி தனிமையாகவே கொடுக்க வலிமையுண்டு. (2) சனி புதனுடன் சேர்ந்தாலும் ஒருவரை ஒருவர் பார்த்தாலும் வீடுமாறி பரிவர்த்தனமாய் இருந்தாலும் முன்கூறிய இராஜயோகம் மேலும் வலுவடையும். (3) மேலும் புதனும் சுக்கிரனும் சேர்ந்தாலும், (4) சுக்கிரனும் செவ்வாயும் சேர்ந்தாலும் சனி கொடுக்கும் இராஜ யோகத்தை இவ்விரு யோகங்களும் (3, 2, 4) மேலும் பலமடையச் செய்யும். இவ்வித யோகங்கள் ஒருவர் சாதகத்தில் இருப்பின் சாதகரை உயர்ந்த பதவிக்கு இட்டுச் செல்லும். தனயோகம் (1) சனி புதனுடன் சேர்ந்தாலும், (2) சனி வியாழனுடன் சேர்ந்தாலும், பார்த்தாலும் வீடுமாறி இருந்தாலும் இவ்வித கிரகங்கள் 2-9-11ல் இருப்பினும் மகா உன்னத தனயோகத்தை ஏற்படுத்துகின்றன. மேலும் புதனும் வியாழனும் சேர்ந்தாலும் முறையே 5லும் 11லும் இருந்தாலும் அல்லது சனி 9ல் புதன் 2ல் வியாழன் 11ல் இருந்தாலும் அல்லது மூவரும் சேர்ந்து 2-9-11ல் இருந்தாலும் பெரும் தனத்தை கொடுப்பவர்களாகின்றார்கள்.

விபரீத இராஜயோகம்:- சுக்கிரன், வியாழன், செவ்வாய் இவர்கள் முறையே 6ம் வீடு, 8ம் வீடு, 12ம் வீடு ஆகிய இடங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இருப்பினும்- இவர்கள் மூவரும் சேர்ந்து 6-8-12ல் இருப்பினும் அல்லது சுக்கிரன் வியாழன் சேர்ந்து 6-8-12ல் இருந்தாலும் வியாழனும் செவ்வாயும் சேர்ந்து 6, 8, 12ல் இருப்பினும் செவ்வாயும் சுக்கிரனும் சேர்ந்து 6-12ல் இருப்பினும் இவ்விபரீத ராஜயோகம் உண்டாகும். சாதாரண மனிதரை இவ்வித யோகம் உயர்த்திவைக்கும்.

லக்கினத்தில் சுக்கிரன் 7ல் செவ்வாய் 10ல் சனி இருக்கப் பிறந்தவர்களுக்கு ஒவ்வொரு கிரகமும் இந்த மகா புருஷ யோகத்தை கொடுக்கும். இவ்வித யோகங்கள் உச்சம் பெற்ற கிரகங்களால் ஏற்படும் யோகத்திற்கு குறைவானதே. ஆயினும் இச் சாதகர்கள் வாழ்க்கை வளமானதாக இருக்கும். நீண்ட கால அனுபவத்தில் பார்க்கப்பட்ட சாதகங்களில் முன் கூறப்பட்ட யோகங்கள் சிறந்த பலனைச் செய்துள்ளன. இவ்வித தன யோகம், இராஜயோகம் உடையவர்கள் மட்டும் தான் உயர்ந்த பதவிகளுக்கு வரத்தகுந்தவர்கள். இவ்வித இராஜயோகங்கள் உடையவர்கள்-மருத்துவர், வழக்கறிஞர், பொறியியலாளர், நீதிபதி, அரசாங்க அதிபர் ஆகிய உயர் பதவிகளுக்கு வேண்டிய கல்வியறிவைப் பெறுவதுடன் அந்தப் பதவிகளும் அவர்களை வந்தடைகின்றன. ஆண்களுக்கன்றி பெரும்பாலும் பெண்களுக்கும் இவ்வித யோகங்கள் காணக்கிடக்கின்றன. அவ்வித யோகமுடைய பெண்களுக்கு பெற்ரோர் தக்க கல்வி வசதியை கொடுப்பது விரும்பத்தக்கது. மேலும் யோக காரக திசைகள் நடக்கும் போது சாதகருக்கு அவரிடம் மறைந்திருந்த உள்ளார்ந்த திறமையும் ஆற்றலும் தோன்றுகின்றன. ஆகவே இவர்கள் உயர் பீடத்தைப் பிடிப்பது வியப்பில்லை. இவைகளை இங்கு இடப லக்கினத்தின் கீழ் எழுதியபோதிலும் இவை எல்லா லக்கினத்திற்கும் பொதுவானவை.

இடப லக்கினத்தில் பிறந்தவர்கட்கு வியாழன் சிறப்பான பலன் செய்யமாட்டார். இந்த லக்கினத்திற்கு இவர் பாவர். ஆகவே, இவர் திசையைப்பற்றி ஒருவர் நன்கறிந்திருப்பது நல்லது. சுபர்என்று சொன்ன யோகக் காரகர்கள் பலம் பொருந்தி 1, 4, 7, 5, 9, 11ல் இருப்பது விரும்பத் தக்கது. அவர்கள் சோபனமான பலனைச் செய்வர். தீயவர் என்ற பாவக்கிரகங்களின் திசை நன்மையாக இருக்க வேண்டில் அவர்கள் சாதகத்தில் 6-8-12ல் நீசமடைந்திருக்க வேண்டும். அப்படியில்லாவிடில் பலன் கெடுதியாகவே இருக்கும். இராகு திசையில் பிறந்த ஒருவர், வியாழதிசை வரும்போது சொற்ப உயர்வைக் காண்பர். ஆனால், செவ்வாய் திசையில் பிறந்து இராகு திசையில் தத்தளித்த ஒருவர், வியாழ திசையில் ஒரு படி ஏறி சனி திசை நடக்கும் போது தான் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்வார்.

வியாழன் கிரகங்களில் மகா சுபன் என்ற காரணத்தால் அவர் திசையில் ஒருவர் வெளித்தோற்றத்திற்கு சகல சம்பத்துக்களுடன் வாழ்பவராய் காட்சி அளிப்பார். மதிப்பும் சொற்ப தேட்டமும் நிம்மதியான சந்தோஷ வாழ்க்கையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. ஆனால், அவர் பெரும் பொருளைத் தேடமாட்டார். உள்ளுக்கும் அவருக்கு பல பொறுப்புக்களும் உண்டு. முன் நடந்த திசைகளினால் ஏற்பட்ட கஷ்டங்களுக்கு இவ் வியாழன் எவ்வளவோ உயர்வு. இந்த வியாழ திசையில் சந்திரபுத்தியோ சுக்கிர புத்தியோ நடக்கும் காலத்தில் ஒருவர் கலங்கியே நிற்பார். இந்த வியாழ திசையில் சுக்கிர புத்தி மிகவும் கலக்கத்தைக் கொடுக்கும். இவ்வித கால கட்டத்தில் ஒரு கோயில் அதிபர், ஒரு பாரதூரமான வழக்கில் சிக்குண்டு அவர் தேடிய பொருளையும் இழந்து விட்டார். இன்னுமொரு பட்டினசபை அதிபர். இவருக்கும் இதே வித கதி நேர்ந்தது. சந்திர திசையுடைய இடப லக்கின சாதகர் கஷ்டம் நிறைந்த வாழ்க்கையை எதிர்நோக்க வேண்டும். இவர் இந்தத் திசையில் பிறந்தவராயின் இவருக்கு பின் வயதில் சனிதிசை வரலாம். அப்போது அவர் வாழ்க்கை சிறப்பாக அமையும். பொருள் பண்டத்தை தேடிவைத்து நடப்புள்ள மனிதராவார். சந்திர திசையை அடுத்து வரும் செவ்வாய் திசை பெரிய பலனை செய்ய மாட்டாது. மட்டமான பலன்தான். இராகு திசை இளம் வயதில் வந்தால் கஷ்டத்தையும் பலவித தடைகளையும் தாண்டி பின்னுக்கு சனி திசைவர மதிக்கத்தக்க நிலைக்கு சாதகர் வந்து விடுவார். சூரியன் புதனுடன் சேர்ந்திருந்தால் சூரிய திசை நல்ல பலனைச் செய்யும். தனிமையாக சாதகத்தில் இருந்தால் அவர் திசை மந்தமாகத்தான் இருக்கும். சுக்கிரன் லக்கினாதிபதி. இவர் திசையும் சோபனமானதல்ல என்று முன் சொன்னேன். இவர்திசையில் வியாழபுத்தி நஷ்டத்தை உண்டாக்கும். சூரியன், புதன், சுக்கிரன் இம் மூவரும் இராசி சக்கரத்தில் நெருங்கி சஞ்சரிப்பதால் இச் சுக்கிரனுக்கு புதன் சேர்க்கை கிட்ட வாய்ப்பு உண்டு. அவ்விதமாகில் சுக்கிரன் சுபபலனைச் செய்வார்.

இடப லக்கினத்திற்கு சுபராகிய யோக காரகன் சனிபற்றி ஆராய்ந்தால்; சனி திசை இந்த இடபலக்கின சாதகருக்கு ஒரு வரப்பிரசாதம். இவர் தனிமையாகவே 9-10ல் இருந்தால் கீழ்மட்ட நிலையில் இருந்த ஒரு பிரஜையை தலைமைப் பீடத்திற்கு ஏற்றிவைக்கும் வலிமை இவருக்குண்டு. இவர் 1-4-7-10-5-9-11ல் இருந்தாலும் இவர் திசையில் ஒருவர் விரும்பத்தக்க சகல சுகபோகங்களையும் அனுபவிப்பார். அவர் திசையில்வெகு ஜன மதிப்பையும் அதிகாரத்தையும் தனத்தையும் வாரிவழங்குவார். இச்சனி புதனுடன்சேர்ந்திருந்தால் இத்திசையில் சாதகர் பெரும் செல்வத்தை தேடிக்கொள்வார். இக்காலத்தில் ஒருவர் தொழில் அதிபராகவோ, பெரும் வியாபாரியாகவோ மாறிவிடுவார். பெரும் காணி பூமி சொந்தக்காரராகிய சிலருக்கு சாதகத்தில் சனி வியாழன் சேர்ந்து 11ல் இருந்ததோடு இடபலக்கின சாதகருக்கு 11ல் வியாழன், சனி, புதன் இருந்திருக்கிறது. இவ்வித சனி திசை எல்லா இடபலக்கின சாதகருக்கும் வருவதில்லை. ஆகவே, இவர் திசையை அனுபவிக்க கொடுத்துவைத்திருக்க வேண்டும். இவர் திசைதுவங்கவே அதிர்ஷ்டம் துவங்குகிறது. முன் பணத்தைக் காணாதவருக்கும் பணம் வருகிறது. சனி திசையில் புதன் புத்தி இவருக்கு எதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராத லாபத்தையும் பணம் தேடும் வாய்ப்புக்களையும் உண்டாக்குவதால் இவர் புதன் புத்தி முடியும் முன்னரே ஒரு மதிக்கத்தக்க தனவானுகி விடுகிருர். சனி திசையில் புதன் புத்தியும் புதன் திசையில் சனி புத்தியும் இடப லக்கினசாதகருக்கு எதிர் பாராத லாபத்தைக் கொடுக்கக் கூடிய காலங்களாகும்.

சனி சாதகத்தில் நீசமடைந்து 12ல் இருந்தாலும் 8ல் இருந்தாலும் இவர் திசை அற்ப சொற்ப பலனைச் செய்யும். சில சமயம் சாதகரைக் கெடுத்துவிடும். இவர்சாதகம் பல மற்றதாய் விடும். மேலும் இச்சனி ஆரம்பதிசையாக அமையும் சாதகரின் பிதா முன்னேற்றம் அடைய சாதகர் சகல சுகங்களையும் அனுபவிப்பார். சாதகரின் படிப்புக்கும் சனி திசை அனுகூலமாய் இருக்கும். தொடர்ந்து வரும் புதன் திசையில் இவர் உயர் கல்விகற்று பொறுப்பான பதவியை வகிப்பார். நடுவயதில் சனிதிசை வருவதுதான் விரும்பத்தக்கது.ஏனெனில் சாதகருக்கு சனியும் புதனும் யோககாரகர்கள். இவர்கள் திசைகள் ஒன்றின் பின் ஒன்ருய் தொடர்ச்சியாய் வருவதால் சாதகர் 36 வருஷத்திற்கும் (சனிதிசை 19 வருஷம் புதன் திசை 17 வருஷம்) ஒரே விதயோகத்தை அனுபவிப்பார். இவர்கள் திசையில் சாதகர் காணி, பூமி, வீடு, வாகனம் இவற்றின் லாபத்தையும் உயர் பதவியையும் பெரும் செல்வத்தையும் தேடி சுக வாழ்வு வாழ்வார்.

இடப லக்கின சாதகர் ஒருவர், வியாழதிசையில் பிறந்தால் வியாழ திசையிலும் சனிதிசையினும் கல்விகற்று புதனில் தொழில் புரிந்து தனத்தைத் தேடுவார்.

இவருக்கு புதன் திசை பெரும் ஆற்றலையும் அறிவையும் கொடுக்கும். இவ்வித திசைகளில் ஒரு வைத்தியரோ வழக்கறிஞரோ தொழில் திறமையில் முதல்வராகத் திகழ்வார். பேரும் புகழும் தேடிக்கொள்வர். ஒருவர் சனி திசையையும் புதன் திசையையும் தனது சீவிய காலத்தில் அனுபவிக்க தவம் செய்ய வேண்டும். சிலர் சனிதிசை முடியுமுன்பே அவர்கள் வாழ்க்கையை முடித்துக்கொள்கிருர்கள். சிலருக்கு இத் திசை வருவதே இல்லை. புதன் திசையில் பிறந்த இடப லக்கின சாதகர் புதன் கொடுக்கும் யோகத்தை மட்டும் காண்பார். அடுத்து வரும் கிரக திசைகள் மங்கின திசைகளாகவிருக்கும். புதன் பிதாவுக்கு யோகத்தையும் செய்து சாதகருக்கு கல்வி அறிவையும் கொடுக்கும். அடுத்துவரும் கேது திசை, நோய், பீடை கஷ்டம் உள்ளதாகவே இருக்கும். இடபலக்கின சாதகர் புதன் திசையில் சிறந்த புத்திசாலியாகவும் எதையும் திறம்படச் செய்பவராயும் இருப்பார்.

இந்த புதன் சனியுடன் சேர்ந்திருந்தால் பெரும்பலன் உண்டாகும். இந்த இடபலக்கின சாதகருக்கு சகல ஐஸ்வரியத்தையும் கொடுக்க வல்ல கிரகங்கள் சனியும் புதனுமே. தன யோகமுள்ள அநேக சாதகர்கள், புதன் திசையில் தேடிய தேட்டத்தை அடுத்துவரும் தீய திசைகளிலும் விரயப்படுத்தாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றி சீவியகாலம் முழுவதும் தனவான்களாய் இருக்கிறார்கள்.

இடப லக்கின சாதகர்கட்கு 3, 6, 8, 11ம் வீட்டு அதிபதிகள்-சந்திரன்-சுக்கிரன்-வியாழன். இவர்கள் தீயபலனைச் செய்வார்கள். இவர் திசைகள் நடக்கும் காலத்தில் இவர்களின் புத்திகளும் முன்னேற்றத்தைத் தடைசெய்யும். ஆகவே, இவர்கள் திசைகளில் முக்கியமாக வியாழன் 8, 11ம் வீடுகளுக்கு அதிபதியாவதால் இவரின் திசையைப் பற்றி இங்கு சுருக்கமாகத்தருகின்றேன். வியாழ திசை ஆண்டு 16 இவர் திசைதுவங்கவே சாதகருக்கு சாதகமான மாறுதல்கள் ஏற்படும். இவர் முன் 18 வருஷம் இராகு திசையில் தத்தளித்தவர் ஆகையால் வியாழன் இவர் மனதிற்கு சாந்தியும் சமாதானமும் உண்டாகும் சூழ்நிலையை உருவாக்குகின்றது. கிரகங்களில் மகா சுபன் என்ற காரணத்தால் இவர் திசையில் ஒருவித பொலிவும் தெளிவான மனோநிலையும் சாதகருக்கு ஏற்படுகின்றது. ஆகவே, இவர் மதிக்கத்தக்கவராகின்றார். இவ் வியாழன் தீய வீடுகளுக்கு உரியவனாகி தீயவனானாலும் சனி, செவ்வாய், இராகு, கேதுக்கள் போல் சாதகரை நிலை குலையச் செய்யா. இவ்வியாழன் சனியுடன் அல்லது புதனுடன் சம்பந்தம் பெற்றால் (சேர்க்கை-பார்வை) இவ்வியாழன் நல்ல பலனை செய்யும். அப்படி அல்லாவிடில் பண முடக்கம்-தேகபீடை, பகைவர் துன்பம், பாரிய பொறுப்புக்கள்! அதனால் மனதில் கவலையுமுண்டு. ''சாண் ஏற முழம் சறுக்கும்'' போலான வாழ்க்கை. கணக்குப் பார்க்கில் வரவும் செலவும் சமமாகவே இருக்கும். ஆயினும் இவர் முன்னிருந்த நிலையிலும் ஒருபடி மேலேயே ஏறிவிடுவார். வெளித் தோற்றத்திற்கு இவர் உயர்ந்த சுக சீவியம் விடுபவர் போல் காட்சியளிப்பாராயினும், உள்ளுக்கு பலவித பிரச்சினைகளை சமாளிக்க வேண்டியவராக இருப்பார். சொற்ப லாபமும், வீடு வாசல், பூமியும், சனி புதன் புத்திகளில் தேடிக் கொள்வார். இப் புத்திகளில் உத்தியோகம் ஒரு படி ஏறும். குடும்ப சுகமும் குழந்தைப்பேறும் கிட்டும்.

சாதகருக்கு வியாழதிசையை அடுத்துவரும் திசை சனியுடையதாகையாலும் இவர் இடப லக்கினத்திற்குயோககாரகனாவதாலும் சனி இவரை மதிக்கத்தக்க நிலைக்கு கொண்டு வருவார். ஆகவே வியாழ திசை நடக்கும் போதே சாதகர் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ளுகின்றார். வியாழ திசையில் சுக்கிரபுத்தி எதிர்பாராத விபத்தையோ துன்பத்தையோ பெரும் பொருள் நஷ்டத்தையோ கொடுக்கும். இத் திசை ஆரம்ப திசையாக வருவது மிகவும் விரும்பத்தக்கது. ஏனெனில் இத்திசையை அடுத்துவரும் சனி திசையும் புதன் திசையும் தொடர்ச்சியாக 33 வருஷத்திற்கு சாதகருக்கு யோக பலனைச் செய்யும். சோபனமான வாழ்க்கையை அனுபவிப்பார்.

—சந்திரதிசை ஆண்டு 10— இடப லக்கின சாதகருக்கு இராச யோகம் தனயோகமிருந்து சந்திரனும் சனியுடைய அல்லது புதனுடைய சம்பந்தம் பெற்றிருந்தால் சாதகர் சுப பலனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கலாம். புதன் சூரியனுடன் சேர்ந்து சாதகத்திலிருந்தால் சூரிய திசை நன்மையாக நடந்து சந்திரன் யோகக் கிரகங்களின் சம்பந்தமில்லாதிருந்தால் சந்திரதிசையில் சாதகர் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் எதிர் நோக்க வேண்டி வரும். இச் சாதகருக்கு முன் நடந்த திசைகளும் பின்னுக்கு வரக்கூடிய செவ்வாய், இராகு, வியாழ திசைகளும் இவருக்கு பெரும் பலனைச் செய்யக் கூடிய கிரகங்களல்ல.

இவரின் பிரயாசையாலும் அறிவாற்றலாலும் ஏதோ வாழ்க்கையை நடத்தவேண்டியவராகின்றார். ஆனால், வாழ்க்கையில் பல தோல்விகளும், முன்னேற்றத்திற்கு தடைகளும், மனதிற்கு பலவித சோதனைகளும், கவலையும் உண்டு. சந்திரன் மனதைச் சார்ந்த கிரகம். வீண் அலைச்சலும் பிரயாணங்களும் உண்டு. சந்திரன் குடும்ப சுகத்தையும் பெண்களின் சகவாசத்தையும் கொடுக்கும். சில சமயம் அதன் காரணமாக துயரமும் உண்டு. சனி புத்தி புதன் புத்திகளில் இவர் முன்னேற்றம்காண்பார். காலம் கஷ்டமாக இருக்கின் சிந்தனையும் பிழையாகவே இருக்கும். உங்கள் மனத்தை உயர்ந்த லட்சியத்தை அடைய பழக்கியிருப்பீர்களாகில், அந்த மனது உங்கள் அடிமையாகும். உங்களுக்கு வழிகாட்டும்.

இவ்வுலகில் சகல பிரஜைகளும், தமது பரம்பரையில் தோன்றிய முன்னோர்களின் அனுபவம், ஆற்றல், அறிவு, வலிமை ஆகிய சிறப்புக்கள் யாவற்றையும் கொண்ட பெரும் சுமையை தன் பிதா மூலம் பெற்று அவைகளையும் தனது சொந்த அனுபவ தேட்டத்தையும் சேர்த்து தன் வழித்தோன்றல் சந்ததியினருக்கு சுமத்திவிடுகின்றார். இவர் பொறுப்புஅதிகம். சென்ற காலத்தையும் எதிர் காலத்தையும் இணைக்கும் ஒரு கால புருஷனாக இவர் விளங்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதுனம்

மிதுனராசி புதனுடைய வீடு. இந்த இராசியின் சின்னம் வியக்கத்தக்கது. இது மனிதனையும் மனதையும் குறிக்கும் சின்னமாக அமைகின்றது. புதன் பண்டிதன் என்பர்; சிலர் அதனை செட்டி என்பர். ஆகவே மிதுனலக்கினத்தவர்கள் கூடுதலான புத்தியும அறிவும் உடையவர்கள். கணக்கு வேலை இவர்கட்கு உரியது. வியாபாரம் இவர்கட்கு உகந்தது. இவர்கள் கெட்டிக்காரர்கள். சிந்திக்க வல்ல மனோபலம் உடையவர்கள். இவர்கட்கு எவ்வித கலையும் கைவந்ததாகும். இவர்கள் பொறுப்புக்களை சுமப்பவர்கள். இவர்கட்கு சண்டை சச்சரவு பிடிக்காது. இவர்கள் பண விஷயத்தில் மிகவும் கவனமுள்ளவர்கள், படிப்பில்லாதவர்களும் புத்தித்திறமையால் எவ்வித நிலையையும் சமாளிக்க வல்லவர்கள். இந்த மிதுனலக்கினத்திற்கு சுபக்கிரகங்கள் சனியும் சுக்கிரனும் மட்டுமே—இவற்றின் திசைமிக்க சோபனமானது. தீயகிரகங்கள் (அசுபர்) சூரியனும், செவ்வாயுமே இத்திசைகள் தீயபலனைச் செய்யும். நடுநிலையுள்ள கிரகங்கள் புதனும் வியாழனும் ஆகும். இவை சுக்கிரனுடனே சனியுடனே சேர்ந்தால்—பார்த்தால் பரிவர்த்தனமாக இருந்தால் இவற்றின் திசையும் நல்ல விரும்பத்தக்க சுப பலனைச் செய்யும். சந்திரனும் அப்படியே, இந்தலக்கினத்தில் பிறந்தவர்கட்கு சனி, சுக்கிரன், வியாழன், ஆகியவை பிரதானமான கிரகங்கள். இவை ஒருவர் சாதகத்தில் பலம் பெற்று 1, 4, 7, 10, 5, 9, 2, 11 என்னும் வீடுகளில் இருக்க பிறந்தவர்கள், சந்தேகமில்லாது மதிக்கத்தக்க தனவான்களாகவும் உயர் பதவி வகிப்பவர்களாகவும் ஆவர்.

ராஜ யோகங்கள் — சனி 9ல் இருக்க வியாழன் பத்திலிருக்க பிறந்தவர்கட்கு ராஜயோகம் முதல் தரமானதாக விருக்கும். இவர்கள் பரிவர்த்தனமாக 9ல் வியாழனும் 10ல் சனியும் இருப்பினும் ராஜயோகம் உண்டு. சுக்கிரனும் வியாழனும் சேர்ந்தாலும் ஒன்றை ஒன்று பார்த்தாலும் பரிவர்த்தனமாக 5, 10ல் இருந்தாலும் 10ல் இரண்டும் சேர்ந்தாலும் இராஜயோகம் திறம்பட இயங்கும். மேலும், சனி, வியாழன், சுக்கிரன் ஆகிய மூன்றும் 1, 4, 7, 10 இவ்விடங்களில் சேர்ந்து இருந்தால் ராஜயோகம் மிக்க வலுவானதாகும்.

தனயோகம் ;— தனயோகத்தை உண்டாக்கும் கிரகங்கள் சனி, சுக்கிரன், சந்திரன். ஆகவே, சனி 9ல் சுக்கிரன் 5ல் சந்திரன் 2ல் இருந்தாலும் சனியும் சந்திரனும் பரிவர்த்தனமாக 2, 9ல் இருந்தாலும் ஒன்றை ஒன்று பார்த்தாலும் அல்லது இவற்றில் இரண்டு சேர்ந்து 2, 9, 11ல் இருந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சுக்கிரனும் சந்திரனும் சேர்ந்தாலும் அல்லது சனி, சந்திரன், சுக்கிரன் சேர்ந்து 2, 9, 11ல் இருந்தாலும் பலம் பொருந்திய தனயோகம் உண்டாகும். இவை 1, 4, 7, 10ல் இருந்தாலும் யோகம் சற்றுக் குறைவாகவே இருக்கும். செவ்வாய் லாபத்தாளுதிபதியாயினும் இது முன் கூறிய சனி, சந்திரன், சுக்கிரனுடன் சேர்வது விரும்பத்தக்கதல்ல. மிதுனலக்கினத்திற்கு செவ்வாய் அதிக தீங்கை செய்யும் கிரகமாகையால் இது தனிமையாகவே 6, 8, 12 ல் இருப்பது விசேஷம். சனியும் சுக்கிரனும் 6, 8, 12ல் இருப்பினும் அவற்றுடன் வியாழனும் இருப்பினும் சாதகம் பலம் குன்றியதாகி விடும். அதிர்ஷ்டம் கிட்டுவதற்கு இவற்றின் பலம் பெற்றிருக்கவேண்டும். ஆகவே, விபரீத ராஜயோகத்தைப் பற்றி கூற விரும்பவில்லை. இந்த லக்கினத்திற்கு புதன் 4ல் உச்சம் பெறுவதும் சுக்கிரன் 10ல் உச்சம் பெறுவதும் பெரும் பலனைக் கொடுக்கும், அவ்வித சுக்கிரனுடன் வியாழனும் சேர்ந்தால் யோகம் சிரேஷ்டமாக அமையும். வியாழன் தனிமையாக 7ல் அல்லது 10ல் புதன் லக்கினத்தில் இருக்கப் பிறந்தவர்கள் சந்தேகமில்லாது புத்திக் கூர்மையும் திறமையும் உடையவர்களாவர். ஆனுல், மகாபுருஷ யோகம் பலம் குறைந்ததாகவே இருக்கும். இனி திசைகளுக்கு வருவோம். இந்தலக்கினத்திற்கு சனி விசேஷ யோகத்தை செய்யக் கூடிய கிரகம் என்று முன்பு கூறினேம். இதன் திசை மிகவும் சோபனமானது. இது 1,4,7, 10, 5, 9, 2ல் இருந்தால் இதன் திசை காலத்தில் சாதகர் காணி, பூமி, வீடு, வாகனம், செல்வம் என்பனவற்றை ஏராளமாக தேடிக் கொள்கிருர். சனி 9ல் 10ல் இருப்பது மேலானது. இவருக்கு பெரும் மதிப்பும் அநேக ஊழியர்களும் உண்டு. தலைமைப் பீடத்தில் இத்திசை சாதகர் இருப்பார். இவர் எந்தத் தொழில் செய்தாலும் அத்தொழில் விருத்தியாகும். அரசாங்கப் பதவியில் இருந்தால் அடுத்தடுத்து ஏற்றமடைந்து உயர் பீடத்திற்கு கிட்டி விடுவார். இவருக்கு இக்காலத்தில் சிறந்த புத்தியும் திறமையும் உண்டாவதால் இவருடன் மற்றவர்கள் சச்சரவுக்கு வருவதில்லை. இவருக்கு குடும்ப சுகம் சௌகரியமான வாழ்க்கை. ஏவலாளிகள் வசதிபோன்றவற்றுடன் மிகவும் சந்தோஷமான வாழ்க்கை வாழ்வார். இத்திசை லட்சுமி கடாட்சத்தையும் சகல சம்பத்துக்களையும் கொடுக்கும். ஒருவருக்கு 10ல் சுக்கிரன் உச்சம் பெற சனியும் அவ்வாறே 5ல் உச்சம் பெற வியாழன் 6ல் இருந்தது. சனி திசையில் இவர் ஒரு மந்திரிப்பதவியை தேடிக் கொண்டார். இவருக்கு செவ்வாய் 6ல் இருந்தது அநேக வியாபாரிகள் இத்திசையில் பணம் தேடக் கூடிய பல வாய்ப்புகள் பெற்று முன்னணியில் நிற்கின்றுர்கள்.

தனவான்களாக எல்லா மிதுனலக்கின சாதகர்கட்கும் இத்திசை வருவதில்லை. இத்திசை வருவதே அதிர்ஷ்டம், சம்பாத்தியம் போதாது தத்தளித்த பலர் சனிதிசையில் உன்னத இடத்தைப் பிடித்திருக்

கின்றனர்கள். மேலும் ஒரு மிதுனலக்கின சாதகத்தில் தனயோகம் அமைந்திருந்தது. அந்தத் தனயோகம் சனியினால் ஏற்பட்டதாகில் இவ்வித சனி தன்திசையில் தனத்தை வாரிவழங்கும். வைத்தியர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் இத்திசை சிறந்தது அநேக செழிப்பாக இருக்கும் வர்த்தகர்கள் இராகுதிசையில் ஊழியரயிருந்து வியாழதிசையில் சொந்தத் தொழில் ஸ்தாபித்து சனி திசையில் பெரும் பொருள் தேடியிருக்கிறார்கள். இதில் அநேகர் செவ்வாய் திசையிலும். இராகுதிசையிலும் வறுமைப்பிணியில் சிக்குண்டு நலிந்தவர்கள். வியாழ திசையில் ஒருபடி ஏறி சனி திசையில் அந்தப்பட்டணத்தில் மதிக்கத்தக்கவர்களாய் திகழ்ந்தார்கள். சனி 6, 8, 12ல் இருந்தால் பலனை சொற்பமாகவே நடக்கும். சுக்கிரனும் அவ்விதமிருக்கின் சில சமயம் சாதகரை சனி கெடுத்துவிடும். சனிதிசையில் செவ்வாய் புத்தி நஷ்டத்தை ஏற்படுத்தும்.

சூரியனை விட செவ்வாயே கூடுதலான கெடுதியை இந்த லக்கின சாதகருக்கு செய்யக்கூடிய கிரகம். ஆகவே இந்தச் செவ்வாயைப் பற்றி நன்கு அறிவது நல்லது. அநேக மிதுனலக்கினசாதகர்கள் செவ்வாய் திசையில் பெரும் நஷ்டத்தையும் அவமானத்தையும் அடைகிறார்கள் பெரும் பதவிவகித்தவர்கள் தலைகீழாய் விழுந்து விடுகின்றார்கள். செவ்வாய் 6, 8, 7, 2ல் இருந்தால் பெரும் நஷ்டமிராது. அப்படியில்லாவிடில் எதையோ பறித்து விடும். அரசாங்கத்தில் பதவிவகிப்போர் இத்திசையில் மிகக் கவனமாகவும் சீலம் ஒழுக்கமுடனும் கட்டாயம் நடந்து கொள்வது நல்லது.

சிறு பிழையும் பெரிதாகி தொழிலுக்கு ஆபத்து வரக்கூடும். வர்த்தகர்களும் ஆபத்தான கொடுக்கல் வாங்கலில் இறங்குவது கவனம். சுக்கிர திசையில் பெரும் செல்வந்தராக இருந்தவர்கள் சூரியன், சந்திரன் திசைகளை மகிழ்ப்பாகத் தாண்டி செவ்வாய் திசையில் பெரும் கலக்கம் அனுபவித்திருக்கிறார்கள். இத்திசையில் பணவிரயம், அவமானம், வழக்குக் கணக்கு, பகைவராமல் தொந்தரவு. தேகபீடை. விபத்து இனபந்துக்களிடையே பகை யாகியவையும் எல்லாராலும் வெறுக்கப்படுதலும் சம்பவிக்கும் இவ்வித கஷ்டங்களை அனுபவித்தவருக்கு இராகு திசையும் ஒருவித உதவியும் செய்யாது. ஆனால், வியாழ திசை வரவும் சாதகர் ஒருவாறு துன்பக்கடலை நீங்கிக்கரை சேர்ந்தவர் போல் திருப்தியடைகிறார். வியாழ திசை சனி, சுக்கிரன் சம்பந்தம் ஏற்பட்டால் படிப்படியாக உயர்வார்.

வியாழதிசை சாதகரை கெடுத்துவிடாது. அடுத்துவரும் சனி திசை இவருக்கு விமோசனம் கொடுக்கும். துலக்கமாக சாதகர் இருப்பார். தனத்தையும் தேடிக் கொள்வார். புதன் திசை இந்த மிதுனலக்கின சாதகருக்கு பெரும் பலனைச் செய்யாது. ஆனால் சனி, சுக்கிரன் சேர்க்கை இருந்தால் இத்திசையும் சோபனமான பலனைக் கொடுக்கும். சாதாரண புதனாக இருந்தாலும் இவர் சனிதிசையை அனுபவித்த சாதகராகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் புதனில் சௌகரியமாக வாழ்வார். சனி திசையில் தேடிய தேட்டத்திற்கு புதன் தீங்கு விளைவிக்காது. பணத்தை கூடுதலாக தேட உதவும். இந்த மிதுனலக்கின சாதகருக்கு சுக்கிரன் சுபன். இத்திசையில் இச்சாதகர் ஐம்புலன்களுக்கும் இன்பம் கொடுக்கும் சுகபோகங்களையும், தனத்தையும் உயர்ந்த பதவியையும், சௌகரியமான வாழ்க்கையையும் இன்பகரமான இல்வாழ்க்கையையும், குழந்தைப் பேறு, ஆள் அடிமை, வாகனம், காணி, பூமி இவற்றின் லாபத்தையும் பெறுகின்றார். இவர்களுக்கு சனி திசையில் சுக்கிர புத்தியும் சுக்கிர திசையில் சனி புத்தியும் எதிர்பாராத பெரிய லாபத்தைக்கொடுக்கும்.

சோதிட சாஸ்திரத்தில் லக்கினத்திற்கு 2ம் வீடும் 7ம்வீடும் மாரகஸ்தானங்கள் எனக் கூறப்படும். ஆகவே இவ்வீட்டுக்கு அதிபராகும் கிரகங்கள் மாரகதோசத்தை செய்யக்கூடியவை. மாரகம் என்பது உயிருக்கோ, பொருளுக்கோ நஷ்டத்தை செய்யக் கூடிய வலிமை. இவ்வித மாரக தோஷமுள்ள கிரகங்களின் திசை புத்திகளின் சாதகர் தேகாரோக்கியத்தைபேணிக் கொள்ள வேண்டும்.

மேடலக்கினத்திற்கு சுக்கிரன் 2, 7ம் வீட்டதிபதியாயினும் இது மாரகம் செய்யமாட்டாது. மிதுனலக்கின சாதகருக்கு தீய கிரகங்கள், சூரியனும், செவ்வாயும். இவற்றில் செவ்வாய் மிகமிகத் தீய பலனைச் செய்யவல்லது.

சூரியனும் கிட்டத்தட்ட செவ்வாயைப் போலவே பலன் செய்யும். வியாழன், சந்திரன் இரண்டும் மாரகதோசம் செய்யக் கூடியவை. ஆகவே மிதுனலக்கினத்திற்கு சூரியன், சந்திரன் செவ்வாய் இராகுதிசைகள் தொடர்ச்சியாக வருவதால் சூரியன், செவ்வாய் இராகுதிசைகளிலும் சாதகர் கஷ்டநஷ்டங்களையும் பணமுடக்கத்தையும் சந்திர வியாழதிசைகளில் மாரக தோஷத்தால் ஏற்படும் நோய் பீடையையும் எதிர்நோக்க வேண்டிவரும். எல்லாத்திசைகளிலும் மிதுனலக்கின சாதகருக்கு செவ்வாய் புத்தி துவங்கி இராகு புத்தி முடியும்வரை கஷ்டமான காலமாகவே இருக்கும். வியாழன் பத்தாதிபதியாவதால் வியாழன்புத்தி ஒருபடி உயர்த்தி வைக்க சனிபுத்தி இன்னும் ஒருபடி ஏத்திவைக்கும். இந்தலக்கினத்திற்கு சனி, புதன், சுக்கிரன் இம்மூன்றும் விசேஷ சுப பலனை அவற்றின் திசையிலும் புத்தியிலும் கொடுக்கும்.

சனி திசையில் பிறந்த மிதுனலக்கின சாதகன், சனி, புதன் கேது திசைகளில் படிப்படியாக முன்னேறி சுக்கிரதிசையில் தலைமைப் பீடத்திற்கு வந்து விடுவார். 9ம் வீட்டதிபதி 10ம் வீட்டதிபதி, சனி, வியாழன் ஆகியவை பலம் பெற்று சுக்கிரனும் மீனத்தில் இருந்தால் சாதகர்— சனிதிசை காலத்திலோ சுக்கிர திசை காலத்திலோ உயர் இடத்தைப் பிடித்து தனவானாகி விடுவார். இச் சாதகருக்கு இராகுதிசையை பாலியத்தில் கழிக்க நேரிட்டால் இவருக்கு வறுமையும் கஷ்டமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரியதாகி விடுகின்றது. ஆனல் இவர் புத்தியாக இராகுதிசையை படிப்பில் பயன்படுத்தினல் வியாழனில் முன்னேற்றம் கண்டு தன்னை ஸ்திரப்படுத்தி சனிதிசையில் பிரபல்யம் அடைவார். இவர் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

# கடகம்

கடகராசிக்கு அதிபன் சந்திரன். சந்திரன் மனதையும், சிந்தனையையும் சார்ந்த கிரகம். கடகராசிக்காரர் தூயமனதும், மனேபலமும் உள்ளவர்கள். அத்துடன் எதிர்காலத்தை உணர்ந்து நிதானத்துடனும், சிக்கனமாகவும் வாழ்பவர்கள். இவர்களுக்கு மற்ருேரை வசீகரிக்கும் ஆற்றலுண்டு. சாந்தமும், அடக்கமும், கட்டுப்பாடும் உள்ளவர்கள். தயவுதாட்சண்யம் நிறைந்த தூய அன்பும் வாஞ்சையும் உடையவர்கள். தியாக உணர்ச்சியுடையவர்களாகையால் உலக மதகர்த்தர்சிலர் இந்த லக்கினத்திற்கு உடையவர்கள் என அபிப்பிராயம் உண்டு. இவர்கள் எதையும் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் செய்து வெற்றி காண்பவர்கள். குடும்பப்பற்று மிக்கோராய் உள்ளவர்கள். இவர்களுக்கு செவ்வாயும், வியாழனும் சுப கிரகங்கள். இவர்கள் திசைகளில் விரும்பத்தக்க ஐஸ்வரியங்களைப் பெறுவார்கள். புதன், சுக்கிரன், சனி என்பவை பாவக் கிரகங்கள். ஆகவே, இவர்கள் திசைகள் தீய பலனைச் செய்யும் என்பதை அறிக. நடுநிலையிலுள்ள சந்திரனும், சூரியனும் வியாழனுடன் அல்லது செவ்வாயுடன் சேர்ந்தால் இவைகளும்ராஜயோகத்திற்கு அளவான சுபயோகத்தைச் செய்யும். புதன், சுக்கிரன், சனி ஆகியன சாதகத்தில் பலம் குறைந்தும் 6, 8, 12ல் இருந்தாலும் செவ்வாயும், வியாழனும் பலம் பெற்று 1, 4, 7, 10, 5, 9ம் இடங்களில் இருந்தாலும் வளமான வாழ்க்கை கிட்டுகிறது. இவர்கள் திசைகளில் ராஜயோகத்தை உண்டாக்கும் கிரகங்கள் செவ்வாயும் வியாழனுமே. செவ்வாய் பலம் பெற்று கேந்திர திரிகோணம் ஏறினும், வியாழனுடன் சேர்ந்தாலும் மெச்சத்தக்க அளவுக்கு உயர்த்தி வைக்கும்.

செவ்வாய் தனிமையாக ராஜயோகத்தை உண்டாக்கக்கூடிய வலிமை உடையது. வியாழன் 9ல், செவ்வாய் 10ல், அல்லது 5ல் இருப்பினும், அல்லது இரண்டும் சேர்ந்து 5,9,10ல் இருப்பினும் ஒன்றையொன்று பார்த்தாலும் பரிவர்த்தனமாக 9, 10ல் இருந்தாலும் மகா உன்னத ராஜயோகம் ஏற்படும். மேலும், சனியும், வியாழனும் சேர்ந்தாலும், பார்த்தாலும் பரிவர்த்தனமானுலும் பெரும் பலனைச் செய்யும்.

தனயோகத்தை உண்டாக்கும் கிரகங்கள் வியாழன், செவ்வாய், சூரியன், சுக்கிரன் என்பவையாம். இவர்கள் தத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் ஆட்சி பெற்று இருந்தாலும், சூரியனோ, சுக்கிரனோ தனிமையாகவோ, சேர்ந்தோ 2, 9, 11ல் வியாழனுடன் இருந்தாலும் அல்லது சூரியனோ, சுக்கிரனோ தனிமையாகவோ, சேர்ந்தோ 2, 9, 11ல் செவ்வாயுடன் இருந்தாலும் அல்லது வியாழனும் செவ்வாயும் சேர்ந்தாலும் உன்னதமான தன யோகத்தை இக் கிரகங்கள் உண்டாக்குகின்றன. இவற்றின் சேர்க்கை மட்டுமன்றி, பார்வை பரிவர்த்தனம் போன்ற சம்பந்தங்கள் ஏற்படினும் சாதகர் தனவானாவது நிச்சயம். இவற்றின் சேர்க்கை 1, 4, 7, 10ல் இடம்பெற்றால் நீங்கள் குட்டித் தனவானாகலாம்.வியாழனும்,செவ்வாயும் 6,8, 12ல் இருந்தால் சாதகம் பலம் குறைந்துவிடும்.

மகாபுருஷயோகம்: உண்டாவதற்கு லக்கினத்தில் வியாழன் உச்சம் பெற செவ்வாய் 7ல் அல்லது 10ல் இருத்தல் வேண்டும். இந்த யோகம் உண்டானால் உயர் பதவி வகிக்கலாம் என்பதில் சந்தேகமில்லை. வியாழன் சந்திரனுடன் கூடி லக்கினத்தில் இருந்தால் முதல் தரமான குரு சந்திர யோகமேற்படும். மேலும் சுக்கிரன் 4இலும் சனி 7இலும் இருந்தால் குறைந்த அளவு யோகமேற்படும். மதிப்புக்குரியவர்களாய் வளமான வாழ்க்கை வாழலாம். மேலும் வியாழன், செவ்வாய், சுக்கிரன் முறையே 9, 10, 11ல் இருக்க பிறந்திருப்பின் மற்றோரை விட மேம்பட்டு விளங்கலாம். புதனும், சனியும் சேர்ந்து 6, 8, 12ல் இருந்தாலும்,சனி 8ல் புதன் 12ல் இருந்தாலும் சனியும், வியாழனும் சேர்ந்து 6ல் இருந்தாலும் கலங்க வேண்டாம். இதுவும் ஒரு யோகமே. இதை விபரீத ராஜயோகமென்பர்.

கடக லக்கின பிரபு ஒருவரின் சாதகத்தில் வியாழனும் சனியும் 6இலும் செவ்வாய் 5 இலும் சுக்கிரன் 4இலுமிருந்தனர். 9, 10, 11ல் அதிபதிகளான இவை ஆட்சி பெற்று தத்தம் வீடுகளில் இருந்தன. அப்பிரபுவுக்கு வியாழ திசையும் சனி திசையும் தனத்தையும் புகழையும் உயர் பதவியையும் வாரி வாரி வழங்கின, ஆனால், புதன் திசை அச் சாதகரை கெடுத்து விட்டது, இந்த லக்கினத்திற்கு செவ்வாய் யோககாரகன். இது 9, 10ல் 5, 4, 7ல் இருந்தால் இதன் திசையில் விரும்பத்தக்க சகல ஐஸ்வரியங்களையும் கொடுக்கும். குறுகிய ஏழாண்டு காலத்தில் பெரிய பலனை செய்து விடும். இவர் காணி, பூமி, வீடு, வாகனம், தனதான்யப் பேறு, உயர் பதவி, சௌகரியமான சுக சந்தோஷ வாழ்க்கை என்பவற்றைக் கொடுப்பர். மறைந்து கிடந்த திறமைகளை முழுமையாக பிரயோகிக்கும் காலம் இதுவே. அடுத்தடுத்து உத்தியோக உயர்வு கிடைக்கும். வியாபாரத்திலும் வேளாண்மையிலும் ஈடுபட்டவர்களும் வேகமாக முன்னேறுவர். அதிக லாபமும் பெறுவர். அநேக வழிகளில் பணம் தேடக் கூடிய வாய்ப்புகள் தோன்றும். மருத்துவர், வழக்கறிஞர் போன்றவர்கட்கு இத்திசை ஒரு வரப்பிரசாதம். திறமை உச்சநிலையிலிருப்பதுடன் பேரும் புகழும் தேடிவரும். புதன் திசை, கேது திசைகளில் பிறந்தால் பொறுமையுடன் சுக்கிரன், சூரியன், சந்திரன் திசைகளைத் தாண்டியபின் இச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய் திசையை அனுபவிக்கும் வாய்ப்புக்கிடைக்கும். திடீர் என்று உயர்த்தப்பட்டு உலக சுகத்தையும் பணத்தையும் காணலாம். செவ்வாய்திசை பால்யத்தில் வருமாகில் 41வருஷத்திற்கு தொடர்ச்சியாக யோக பலன் நடக்கும். செவ்வாய், ராகு, வியாழதிசைகள் இவ்வித பலனைச் செய்யும். இது மட்டுமல்ல சாதகரை தலைமைப் பீடத்திற்கு ஏற்றிவிடும். வீழ்ச்சி ஏற்படாது.

கடக லக்கினத்தவர்களுக்கு ராகு திசை துன்பம் செய்வதில்லை. இவர் யோககாரக திசைகளான செவ்வாய் திசைக்கும், வியாழ திசைக்கும் இடையே வருவதால் இவர் திசை சுப திசையாக மாறி விடுகின்றது. சாதாரண பிரஜைகளுக்கு ஏற்படும் வறுமை, கலக்கம், நோய், பீடை, பணக்கஷ்டம் சிறிதளவே ஏற்படும். சமூகத்தில் மேல் மட்டத்தில் உள்ளவர்களுடன் சகவாசம் செய்யும் வாய்ப்பு கிட்டுகின்றது.

இவ்வியாழன் பாக்கியநாதன். பொருளை வாரி வழங்குவான். மனச் சந்தோஷம், குடும்பசுகம், மதிப்பு, கீர்த்தி, தனது சமூகத்தில் தலைமை வகித்தல் உயர் பதவி, காணி, பூமி லாபம், குழந்தைகளின் முன்னேற்றம் ஆகியவை கிடைக்கும். குரு திசையானதால் கடவுள் பக்தியுடையவராகவும், தான தருமவிஷயங்களில் ஈடுபடுபவராகவும் மாறிவிடலாம். வியாழன் 9ல் அல்லது 10ல் இருந்தால் தெய்வத்தொண்டு. வியாழ திசையில் செவ்வாய் புத்தியும் செவ்வாய் திசையில் வியாழ புத்தியும் எதிர்பாராத சுபபலனைச் செய்யும். சனி திசை விசேஷ பலனைச் செய்யாது. வியாழனுடையவோ, செவ்வாயினுடையவோ சம்பந்தம் ஏற்பட்டால் நல்ல பலனைச் செய்யும். அல்லது இடை இடையே கஷ்டம் தான். வியாழதிசையில் பணம் தேடியவர்கள் சனிதிசையில் பணத்தை இழந்து விடுவதாகவும் அபிப்பிராயம் உண்டு. சனி வியாழனுடைய பார்வை பெற்றால் கெடுதியைச் செய்யாது. புதன் சம்பந்தம் சனிக்கு ஏற்படில் கேடு விளையும். புதன்திசையும் கேது திசையும் சனி திசையைத் தொடர்ந்து வருவதால் முன்னேற்றம் தடையாகும். ஆகையால் சனிதிசையையும் புதன் திசையையும் பற்றி நன்கறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இத்திசைகளில் கீழ் நோக்கிச் செல்ல வழியேற்படலாம். அவதானமாக இருத்தல் வேண்டும்.

வியாழ திசையில் பணம் தேடியவர், சனிதிசையை சுகமாக கழிக்கக்கூடும். ஆனால், புதன் திசை தீய பலனைச் செய்யும் சாத்தியக் கூறுகள் உண்டு. இத் திசைகளில் ஒதுங்கி வாழ்வது நலம். துணிந்து பெரிய தொழில்களில் இறங்குவது உசிதமன்று. புதன் சாதகத்தில் கெட்டுப் போயிருந்தாலும் வியாழன் அல்லது செவ்வாய் பார்வை பெற்றாலும் ஒருவாறு தப்பிக்கொள்ளலாம். அரசாங்க பதவி வகிப்பவர்கள் தொழிலில் கவனமாயிருத்தல் நலம். எதற்கும் நேர்மையும் ஒழுக்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவர்களும் ஐம்புலன்களை அடக்கி நடப்பவர்களும் சமூகத்தினின்று விலகி இருப்பவர்களும் சமாளித்துக் கொள்ளலாம். புதன்திசை மதிப்பையும் தேகசுகத்தையும் பொருளையும் இழக்கச் செய்யலாம்.

ஆனால், தேவகுருவும் மகாசுபனுமான வியாழனின் பார்வை இவ்விதப் பாவக் கிரகங்களுக்குக் கிடைப்பின் அப் பாவக் கிரகங்கள் செய்யும் தீமை குறைந்து நன்மையும் ஏற்படலாம். கேது திசை கஷ்டத்தைக் கொடுக்கும். சுக்கிரன் திசை தீயதாயினும் அதன் திசையில் பட்டமான பலனைச் செய்யும் இந்தச் சுக்கிரனுக்கு செவ் ாயின் அல்லது வியாழனின் பார்வை கிடைப்பின் இத்திசை சகல சுகத்தையும் கொடுக்கும். அடுத்துவரும் திசைகளில் நற்பலன் அனுபவிக்க தயாராக்கும்.

கடகலக்கின சாதகர்கட்கு சூரியன், சந்திரன். செவ்வாய், வியாழன் ஆகியவை சுப கிரகங்கள். இவற்றின் திசைகளோ புத்திகளோ மேலான சுபபலனைச் செய்யும். விசேஷமாக வியாழனும் செவ்வாயும் யோககாரகக் கிரகங்கள். இவற்றின் திசைகள் சாதகரை உயர் இடத்திற்கு உயர்த்திவிடும். செவ்வாய் குறுகிய காலத்தில் பெரிய பலனைச் செய்துவிடும். செவ்வாய், வியாழன், சந்திரன் இம் மூன்றும் கடகலக்கின சாதகருக்கு பலம் பெற்று 1, 4, 7, 10ல் இருந்தால் அவர் செவ்வாய் சந்திரன் 1, 10ல் பரிவர்த்தனமாகி வியாழன் 4ல் இருக்கின் சிரேஷ்ட நிலைக்கு உயர்த்திவிடும். இந்த லக்கினத்திற்கு தீயவர்கள் 3, 6, 8, 11ம் வீட்டதிபதிகள். புதன் சுக்கிரன் சனி இவற்றில் சனி 7, 8ம் வீட்டதிபதியாவதால் கூடுதலான தீய பலனைச் செய்யும்.

வியாழன், செவ்வாய் பலம்பொருந்தியசாதகர்கள். வியாழ திசையில் பட்டம்,பதவி, பணம்இவற்றைத் தேடியவர்களாகில் சனி திசை தொடரும் போது சமாளிக்கக் கூடிய நிலையில் இருப்பர். ஆனால், புதன் தொடரும் காலத்தில் தளர்ச்சியடைவதில் சந்தேகம் இல்லை. சிங்க லக்கின சாதகருக்கும் இதே விதம். சனி, புதன், சுக்கிரன் தீய கிரகமாகி இவற்றின் திசையோ, புத்தியோ பெரும் பலனைச் செய்யாது விடலாம்.

ஆனால், வியாழன், செவ்வாய் இரண்டும் மிகவும் சோபனமான பலனை அவற்றின் திசையிலும் புத்தியிலும் கொடுக்கும். அதேவிதம் சந்திரனும் சூரியனும் சுபபலனையே திசையிலேயோ புத்தியிலோ செய்யும். இவை வியாழனுக்கும் செவ்வாய்க்கும் குறைவான பலனையே செய்யும்.

இராகுதிசை—கடகலக்கின காரர்களுக்கும் சிங்கலக்கின சாதகர்களுக்கும் ராகு எங்கு இருந்த போதிலும் பெரும்தீங்கை செய்வதில்லை. இரு யோக திசைகளுக்கிடையே இராகு திசை வருவதால் இராகுதிசையும் சுபதிசையாக மாறி விடுகின்றது. உயர்ந்த பண்பும், ஒழுக்கமும் உள்ளவர்கள் இறைவனுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்தவர்கள். ஆகவே, எவ்வித கஷ்டநிலையையும் சமாளிக்கக் கூடிய அறிவையும் ஆற்றலையும் அவனே உள்ளிருந்து உணர்த்துகின்ருன்.

## சிங்கம்

இக் கட்டுரையில் சிங்க லக்கினத்தில் பிறந்தவர்கட்கு ஏற்படும் சுப, அசுப திசைகளைப் பற்றியும் ராஜயோகம், தனயோகங்கள் பற்றியும் ஆராய்வோம். சிங்க ராசி லக்கினமாக இருக்கப் பிறந்தவர்கட்கு சூரியன் லக்னுதிபதி. சிங்க லக்கினத்திற்குரிய தனிப்பட்ட தன்மை என்னவென்ருல், இதில் பிறந்தவர்கள் நிர்வாகத் துறையில் திறமையும், ஆட்களை அடக்கி ஆளும் திராணியும் உள்ளவர்கள். இவர்கட்கு சாமான்ய பிரசைகள் கட்டுப்படுவதுடன், அவர்களின் ஆக்ஞையையும் ஏற்றுக் கொள்ளுகிருர்கள். இவர்கள் புத்தியும் திறமையும் உடையவர்கள். பரோபகார சிந்தனையும், அனுதாபமும் உள்ள சிறந்த பண்புடையவர்கள். இவர்கள் மற்றவர்களுக்குப் பின் கைகட்டி நிற்கும் கோழைகளில்லை. இவர்களுக்குத் தங்கள் ஆற்றலில் ஒரு மதிப்பும், தன்னம்பிக்கையும் உண்டு. இக் காரணத்தால் இவர்கள் கீழ்ப்படியில் இருக்கும்போதே மேலிடத்தில் ஒரு கண் வைத்திருப்பார்கள். இவர்களின் ஊக்கமும், விடாமுயற்சியும் இவர்களை உயர்த்திவிடுகின்றன. இச் சிங்க லக்கினத்திற்கு சுபர் வியாழனும், செவ்வாயும். இவர்கள் திசைகள் யோகத்தையும், சுக வாழ்க்கையையும் கொடுக்கும். இந்த லக்கினத்திற்கு அசுபர் புதனும், சுக்கிரனும், சனியும். இவர்கள் திசைகள் அசுப பலனைச் செய்வதாகக் கொள்ளவேண்டும். ஆயினும் சோதிட வல்லோர் புதனைச் சுபராகவே கருதுகிருர்கள். நடுநிலையிலுள்ள சூரியனும் சந்திரனும் இவர்கள் திசையில் தீமை செய்வதில்லை. ஆனல், தனிமையாக இருந்தால் மட்டமான பலனும், வியாழன் அல்லது செவ்வாய் சேர்க்கை ஏற்படில் உயர்தர வாழ்க்கையும், சுக சந்தோஷமும் உண்டு. இந்த லக்கினத்திற்கு வியாழனும், செவ்வாயும் மிகவும் முக்கியமான கிரகங்கள். இவர்கள் சாதகத்தில் 6-8-12ல் இருந்தால் இவர்கள் திசைகள் நன்மை செய்ய மாட்டா. சாதகமும் பலம் குன்றியதாகி சாதகரைக் கீழ் நிலைக்குக் கொண்டுபோய்விடும்.

**ராஜயோகம்:** (1) செவ்வாயும், சுக்கிரனும் முறையே 9லும் 10லும் இருந்தாலும் அல்லது இரண்டும் சேர்ந்து 9 அல்லது 10ல் இருந்தாலும் அல்லது ஒன்றையொன்று பார்த்தாலும், அல்லது பரிவர்த்தனமாகி 9—10ல் இருந்தாலும் முதல்தரமான ராஜயோகம் உண்டாகும். இவ்வித யோகம் 1-4-7-10-5-9ல் இருந்தாலும் ராஜயோகம் உண்டு. இவ்வித யோகங்களில் பிறந்த சிங்க லக்கின சாதகர்கள் அரசாங்க நிர்வாகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள உயர் பதவிகளைப் பிடித்துவிடுவார்கள். இவ்வித யோகம் இருக்கும்போது சனி, வியாழனுடன் இருந்தாலும் யோகம் மேலும் வலுவடைகிறது. இதேவிதம் சுக்கிரன் வியாழனுடன் சேர்ந்தாலும், அல்லது ஒன்றையொன்று பார்த்தாலும், பரிவர்த்தனமாக வீடு மாறியிருந்தாலும், அல்லது அவைகள் தத்தம் வீடுகளில் இருந்தாலும், அல்லது 1-4-7-10-5-9ல் இருந்தாலும் ராஜயோகம் உண்டாகும். இதுவும் சாமான்யமான யோகமல்ல.

தனயோகம்: தனயோகத்தை உண்டாக்கும் கிரகங்கள் வியாழன், செவ்வாய், புதன் ஆகியன. இவைகளில் செவ்வாயும், புதனும் சேர்ந்து 2-9-11ல் இருந்தாலும், அல்லது செவ்வாய் 9ல் புதன் 2ல் அல்லது 11ல் இருந்தாலும், அல்லது செவ்வாயும் புதனும் ஒன்றையொன்று பார்த்தாலும், அல்லது பரிவர்த்தனமாக 2-9-ல் அல்லது 11-9ல் வீடுமாறி இருந்தாலும் மகா உன்னத தனயோகம் உண்டாகும். மேலும் வியாழனும் புதனும் இரண்டும் சேர்ந்து 2-9-11ல் இருந்தாலும், அல்லது இவைகள் ஒன்றையொன்று பார்த்தாலும், பரிவர்த்தனமாக வீடுமாறி 5-2-11ல் இருந்தாலும் தனயோகம் ஏற்படும். மேலும், 1-4-7-10-5-9 ஆகிய இடங்களில் இருந்தாலும் யோகம் வேலை செய்யும். இந்த லக்கினத்திற்கு 9-10-11ம் வீட்டதிபதிகளான செவ்வாய், சுக்கிரன், புதன் ஆகியவை சேர்ந்து 6-8-12ம் வீடுகள் அல்லது ஏனைய இடங்களில் இருந்தால் சாதகர் மதிக்கத்தக்க தனவானாக இருப்பார். இவைகள் 9-10-11ல் இருந்தால் சாதகர் மற்றவரை விட விசேஷமானவராகவும், உயர்ந்தவராகவும் இருப்பார். மேலும் இந்த லக்கினத்திற்கு 4ல் செவ்வாயும், 10ல் சுக்கிரனும் இருந்தால் மெச்சத்தக்க மகா புருஷ யோகம் ஏற்படும். ராஜயோகமும் ஏற்படும். இதுபோன்ற யோகம் 1-4-7 10ல் இருப்பது அநேகமாக உயர் பதவியிலுள்ள அரசாங்க அதிபர்கட்கு உண்டு. மேலும் சந்திரனும், சனியும் கூடி 6ல் இருப்பதும் நல்லது. இவைகள் பரிவர்த்தனமாக இருப்பதும், ஒன்றையொன்று பார்ப்பதும் யோகமாகவே இருக்கும்.

சனிதிசை: சிங்க லக்கின சாதகருக்கு செவ்வாயும், வியாழனும் யோக திசைகளை உண்டாக்க வல்லவை. செவ்வாய் திசையில் சாதகருக்கு காணி, பூமி, வீடு ஆகியவையும், தன தான்யமும் பெருகும். சுப சந்தோஷ வாழ்க்கையும் ஏற்படும். இச்செவ்வாய் உயர்தரமான யோகவானுவான். பாக்கியத் தானதிபதி ஆகவும் இருப்பதால் மட்டற்ற சுப பலனைச் செய்வார். இச்செவ்வாய் 1-4-7-10-5-9-11-2 ஆகிய இடங்களில் இருந்தாலும், சுக்கிரனுடனோ, வியாழனுடனோ கூடி இருந்தாலும் இவர் திசை மிக்க சோபனமாயிருக்கும். சாதகர் குறுகிய காலத்தில் முன்னணிக்கு வந்துவிடுவார். மதிக்கத்தக்க அளவுக்கு இவர் செல்வாக்குண்டு. தனிமையாக தொழில் செய்தாலும் வியாபாரம் செய்தாலும் இவருக்கு வருவாய் பல வழிகளில் வந்துகொண்டிருக்கும். இவர்கள் எதிர்பார்த்திருந்த உயர் பதவியும் கிடைக்கும். இச் செவ்வாய் புதனுடன் சேர்ந்திருந்தால் சாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர் ஐஸ்வரியவானுக இருப்பார்.லட்சுமி கடாட்சமும் கிடைக்கின்றது.இவர் துணிச்சலுடன் தொழில் துறையில் ஈடுபட்டு முன்னேற்றம் காண்பார்.பாலியத்தில் இத்திசை வந்தால் மேற்படிப்புக்கும் உதவும்.

மேலும் சிலர் தொழிலில் இறங்கும் காலத்தில் இத் திசை வருமாகில் சாதகர் தொழிலில் திறமை பெற்று தனக்கென்று ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொள்வார். விவாகமாகும் காலத்தில் இத்திசை வருமாகில் சாதகர் முன் சூரியன்,சந்திரன் திசைகளில் சாமானிய மட்டமான கீழ் நிலையில் இருந்த இவருக்கு உயர் இடத்தில் விவாகமாகி பொன்னையும், பொருளையும், மதிப்பையும் பெறக்கூடியதாயுள்ளது. தொழில் துறையிலும் இவர் ஒரு படி ஏறி முன்னேற்றம் காண்பார்.இவருக்கு செவ்வாய் திசையும், அடுத்து ராகு திசையும், அதற்கடுத்து வரும் வியாழ திசையும் 41 ஆண்டுகளுக்கு மிகவும் செழிப்பான வாழ்க்கையை வழங்கும்.வியாழ திசை இச் சாதகருக்கு மிகவும் சோபனமான யோக திசையாகையால் இத்திசைக்குமுன்வரும் இராகுதிசைதீங்கு செய்யாது. இவருக்கு வீழ்ச்சியே இல்லை.

இராகுதிசையில் பிறந்தவர்கட்கும் இராகு மட்டமான பலனைச் செய்து வியாழ திசையில் சாதகரை உயர்த்திவிடும். வியாழ திசை வருவதே இவர்களுக்கு ஒரு அதிர்ஷ்டம்.ஏனெனில் இக்காலத்தில் சாதகருக்கு பேரும் புகழும் மதிப்பும் உண்டாகும். வழக்கறிஞர் அல்லது .மருத்துவத் தொழில் செய்வர்.கை வைத்தவை எல்லாம் சித்தியாகும். வியாழ திசையில் சாதகர் செல்வத்தையும் மதிப்பையும் சுக சந்தோஷ வாழ்க்கையையும் காண்கின்றுர். சாதகரின் பெருந்தன்மை,கௌரவம், உயர்ந்த லட்சியம், சாந்தம்,பொறுமை, தெய்வபக்தி ஆகியவை எல்லாம் சாதகரை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்கின்றன.இத் திசையில் செவ்வாய் புத்தியும் செவ்வாய் திசையில் வியாழ புத்தியும் விசேஷ லாபத்திற்குரிய காலங்கள்.இவ்வித ஐஸ்வரியங்களையும் பெரும் பேறுகளையும் பெற்ற சிங்க லக்கின சாதகர் சுலபமாகக் கெட்ட (அசுப) சனி திசையில் பொருளைப் பறிகொடுக்க மாட்டார்.ஆனுலும், சிங்க லக்கினத்திற்கு சனியும்,புதனும் தீய கிரகங்கள் என்பதை மறக்கக் கூடாது.புதனை சுபன் என்றபோதிலும் வியாழ திசையில் தேடிய தேட்டத்தைப் புதன் திசை வரை பாதுகாப்பது சுலபமல்ல.நல்ல புதன் திசை உண்டாகில் பயப்படவேண்டியதில்லை.

அரசாங்க சேவையில் இருந்த ஒரு சிங்க லக்கின சாதகருக்கு இரண்டாமிடத்தில் செவ்வாய்,புதன்,சுக்கிரன் (9,10,11 ஆதிபதிகள்) இருந்தார்கள். இவர் வியாழ திசையில் பிறந்தவர்.இவருக்கு புதன் திசையில் வியாழ புத்தியில் ஒரு அதிர்ஷ்டம் பிறந்தது.பணம் தேடக்கூடிய வாய்ப்புள்ள பதவி கிடைத்தது.இவர் வியாழ புத்தியிலும் சனி புத்தியிலும் ஏராளமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைத் தேடிவிட்டார். (சில லட்சம்) வாழ்க்கையும் சிறப்பாக நடந்தது.கேது திசை துவங்கவே இவருக்குக் கஷ்டம் ஏற்பட்டு இவர் நிலை ஈடாடத் தொடங்கியது. சுக்கிர புத்தியில் தொழிலை இழந்தார்.கேது திசை 7 வருஷமும் இவரை வாட்டி வதைத்தது. ஆனால்,சுக்கிர திசை இவரைத் தளம்பவிடாது. சுக்கிரன் கேதுவிலும் பார்க்கக் கூடிய சுபத் தன்மையுடையவர். உலக சுக போகங்களுக்குக் காரகன்.10 ஆதிபதி தொழிலுக்குரியவன். ஆகையால் சுக்கிர திசை கேது திசையில் கஷ்டப்பட்டவரைத் தூக்கி உயர்த்திவிடும்.சிங்க லக்கின சாதகர்கள் சனி திசையில் பிறந்திருந்தால் புதன் திசையையும் கேது திசையையும் பொறுமையுடன் அனுபவித்தால் சுக்கிர திசை வந்ததும் விமோசனம் உண்டாகும்.கேது திசையில் ஒருவர் சமூகத்தினின்றும் விலகிக் கொள்வது நல்லது.

சீலம்,ஒழுக்கம் உள்ளவர்களும் ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தக் கூடியவர்களும் எவ்வித கோரமான கிரக திசைகளையும் சமாளிக்கலாம்.

# கன்னி

கன்னி லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் ராஜயோகம்,தனயோகம் பற்றியும், அவர்களின் சுப, அசுப திசைகள் பற்றியும் ஆராய்வோம்.

கன்னி இராசி புதனுடைய வீடு.ஆகவே,கன்னி லக்கின சாதகருக்குப் புதனுடைய தன்மைகள் உண்டு.இவர் அடக்கம், தாணம் உடையவர்,இவர்கட்கு வன்முறை பிடிக்காது. மிகவும் நவனமுள்ளவர்கள்.புத்திசாலிகள்.இவர்கட்கு சாத்திரம், கணியம்,தத்துவ சாஸ்திரம் போன்ற கலைகள் போகும். இவர்களின் கற்பனை சக்தியும் கூடியதே.

இவ்வித பண்புடைய நல்ல மனிதர் மற்றவர்கட்குத் தீங்கு செய்யமாட்டார்கள்.இவர்கள் எதையும் அவசரப்படா துநிதர்சனமாக மதிப்பீடு செய்துதான் துவங்குவார்கள்.ஒதுங்கி நிற்பதே சாலவும் சிறந்தது என்ற கொள்கையுடையவர்கள். இவர்கள் பணம் படைத்தவர்கட்கு உதவியாளராக இருக்கத் தகுதியுள்ளவர்கள். இந்த லக்கினத்திற்கு சுபர் சுக்கிரனும்,சனியும். இவர்களின் திசைகள் மேலான பலனைச் செய்யக்கூடியவை. அசுபர் செவ்வாயும்,சந்திரனும். இவர்கள் திசைகள் கூடுதலான தீய பலனைச் செய்து சாதகரைக் கலங்கவைப்பர். நடுநிலையிலுள்ள புதன்,வியாழன்,சூரியன் ஆகியனவைகள் வேறு கிரகங்களுடன் சேர்ந்திருந்தால் மட்டமான சம பலனைச் செய்யும். ஆனல், சுக்கிரன்,சனி சம்பந்தம் ஏற்படில் மெச்சத்தக்க சுப பலனைச் செய்வதுடன், சாதகர் பொருளையும் தேடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜயோகம்: இந்த லக்கினத்தில் பிறந்தவர்கட்கு சனி, சுக்கிரன்,புதன் இம் மூன்றும் பிரதானமான கிரகங்கள். இவைகள் சாதகரின் சாதகத்தில் 6-8-12ல் இருந்தால் யோகமேயில்லை. ஆனால், பலம் பெற்று 1-4-7-10-5-9ல் இருந்தால் சாதகரை உயர்த்திவைக்கும்.சுக்கிரன் 9லும் புதன் 10லும் இருந்தால், அல்லது இரண்டும் சேர்ந்து 9ல் அல்லது 10ல் இருந்தால் முதல் தரமான ராஜயோகம் ஏற்படும்.இவர்கள் நிர்வாகத் துறைக்குப் பொருத்தமானவர்கள்.மேலும் சுக்கிரன்,புதன் 1-4-7-10ல் சேர்ந்திருந்தாலும், பரிவர்த்தனமாக வீடுமாறியிருந்தாலும், ஒன்றையொன்று பார்த்தாலும் ராஜயோகம் உண்டாகும். இதேவிதம் புதன் சனியுடன் கூடினாலும் ஒன்றையொன்று பார்த்தாலும்,பரிவர்த்தனமாக வீடுமாறியிருந்தாலும் 1-4-7-10-5-9ம் வீடுகளில் இவை இருந்தாலும் ராஜயோக பலன் உண்டு.மேலும் சுக்கிரன்,சனி,புதன் கூடி 1-4-7-10ல் இருந்தாலும் பலம் வாய்ந்த யோகமுண்டு.

தனயோகம்: சுக்கிரன் சந்திரனுடன் சேர்ந்து 2-9-11ல் இருந்தாலும்,இரண்டும் தத்தம் வீட்டில் இருந்தாலும், ஒன்றையொன்று பார்த்தாலும், பரிவர்த்தனமாக வீடுமாறியிருந்தாலும்.இவை சேர்ந்து 1-4-7-10-5ல் இருந்தாலும் சாதகர் மதிக்கத்தக்க செல்வந்தராவார். இதேவிதம் சனியும், சந்திரனும் கூடி 6-8-12 அல்லாத இடங்களில் இருந்தாலும், ஒன்றையொன்று பார்த்தாலும்,வீடுமாறி பரிவர்த்தனமாக இருந்தாலும் தனயோகம் உண்டு.இவர்கட்கு காணி பூமி,வீடு வாசல், பணம் ஆகியவற்றிற்குக் குறைவில்லை.

விபரீத ராஜயோகம்:சூரியன்,செவ்வாய் ஆகியவை தனிமையாக 6ல் 8ல் 12ல் இருந்தாலும்,சேர்ந்து 6ல் 8ல் அல்லது 12ல் இருந்தாலும்,6-12ல் இருந்து ஒன்றையொன்று பார்த்தாலும், பரிவர்த்தனமாக செவ்வாயும் சூரியனும் 12லும் 8லும் இருந்தாலும் இந்த விபரீத ராஜயோகம் உண்டாகும்.கன்னி லக்கின சாதகருக்கு செவ்வாய் நீசமடைவதே உத்தமம்.இவ்விதத செவ்வாய் தன் திசையில் தீங்கு செய்யாது.

மகாபுருஷ யோகம்: புதன் லக்கினத்தில் உச்சம் பெற 7ல் சுக்கிரன் உச்சம் பெற மகாபுருஷ யோகம் ஏற்படும்.புதன் உச்சம் பெற்றால் தொழிலில் திறமைசாலி, புத்திசாலி.சுக்கிரன் உச்சம் பெற்றால் ஐஸ்வரியமுள்ளவனுவான். சிறப்பு வாய்ந்த மனைவியும் கிட்டுவாள். வியாழன் 4ல் அல்லது 7லும் புதன் 10லும் இருக்கப் போகிறவர்களுக்குக் குறைவான மகாபுருஷ யோகம் ஏற்படும்..ஆயினும் இவர்கள் கூடுதலான ஆற்றலும், அறிவும் உடையவர்கள்.

இப்பொழுது திசைகளைப் பற்றி ஆராய்வோம். கன்னி லக்கின சாதகரின் வாழ்க்கை ஏற்றமுள்ளதாகவிருக்குமா, அல்லது இறக்கமுள்ளதாகவிருக்குமா என்பது அவர்களின் ஆரம்ப திசையைப் பொறுத்தது.ஒரு கன்னி லக்கின சாதகர் புதன் திசையில் ஆரம்பித்தால் அவர் புதன் திசை கேது திசையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்று சுக்கிர திசையில் நல்ல வருவாய் வரும் தொழிலில் அமர்ந்து 20 வருஷமும் மேலான வாழ்க்கையை வாழ்ந்து சகல சம்பத்துக்களையும் தேடிக்கொள்வார். செல்வத்தையும் தேடி இன்பகரமான குடும்ப வாழ்க்கை வாழ்வார். இவர் சூரியன் திசையையும் தாண்டிவிட்டார் என்றால், அடுத்து வரும் சந்திர திசை, செவ்வாய் திசை, இராகு திசை ஆகியவை சாதகரைக் கீழ்நோக்கி இட்டுச் செல்லும். பிற்பகுதிச் சீவியம் ஏக்கத்துடன் தான் நடக்கும். அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஒருவாறு கஷ்ட நஷ்டத்துடன் வாழ்க்கையை நடத்தலாம். செழிப்பாக வாழ்க்கை இராது. ஆனால், ஒரு கன்னி லக்கின சாதகர் சந்திர திசையில் பிறந்தால் இத்திசையும், செவ்வாய் திசையும் சாதகருக்கு முன்னேற்றத்தைக் கொடா. இவர் வறுமையில் உழன்று அநேக துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்து இராகுவில் தொண்டு புரிந்து வியாழ திசை வரவும் சிலருக்குப் புத்தி பிறந்து ஒருபடி ஏறி சனி திசை காலத்தில் செழிப்பான வாழ்க்கை வாழ்வார்.

சனி திசை சாதகருக்கு அநேக வாய்ப்புக்களை உண்டாக்கும். பணம் அதிகம் தேடுவார். இவரின் திறமையும் புத்தியும் இவரைப் புதிய மனிதனாக்கிவிடும். இவர் எவராலும் மெச்சத்தக்க அளவுக்குத் தனவானாகிவிடுவார். ஆகவே, ஒருவர் வியாழ திசையில் பிறப்பதே உசிதம். தீய கிரகங்களின் திசைகள் இவருக்கு வராது. இவருக்கு இரு யோககாரகருடைய திசைகளையும் அனுபவிக்க வாய்ப்புக் கிட்டும். சனி திசையில் உயர் கல்வியும், புதனில் தொழிலும், சுக்கிர திசையில் பெரும் செல்வத்தையும் சாதகர் நிச்சயமாகத் தேடிக்கொள்வார். இவர்களின் சீவியம் சிறப்பாக அமையும். இந்த லக்கின சாதகர்கட்கு, கேது திசை தீய பலனைச் செய்யாது. இவருக்கு வீழ்ச்சியுமில்லை. சுப கிரகங்களான புதன், சுக்கிர திசைகளுக்கு நடுவே கேது திசை வருவதால் இவ்வித கேது யோகமுடையதாக சோதிடர் கருதுகிறார்கள். இப்போது கன்னி லக்கின சாதகருக்கு அதிக தீய கிரகமாகிய செவ்வாயின் திசை நடக்குமாகில் சாதகர் ஒருவித முன்னேற்றத்தையும் அடையமாட்டார். இவருக்கு நோய், பீடை, விபத்து, பகைவர்களால் துன்பம், வழக்கு, கணக்கு, பணக் கஷ்டம், தரித்திர நிலை, தொழில் செய்யும் இடத்தில் பகைவர், மேலதிகாரிகளின் வெறுப்பு சேர்வதோடு தொழிலில் முன்னேற்றமும் கிட்டுவதில்லை. ஆகையினால் சாதகர் இவ்வித காலத்தில் மிகவும் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

இராகு திசையும் இச்சாதகருக்கு நல்ல பலனைச் செய்யாது. இத்திசை இளம் பராயத்தில் வந்தால் படிப்பைக் குழப்பிவிடும். கீழ்ப்படிதல் இல்லாதவராய் சாதகர் கெட்ட கூட்டத்தில் சிக்கிவிடுவார். இவ்வித காலத்தில் பெற்றோர் இவர்கட்குத் துணைபுரிவது நல்லது. ஏனெனில் இவர்கட்கு எதிரில் யோக திசை இருப்பதால் இவர்கள் உயர் நிலைக்கு வரக்கூடியவர்கள். சந்திர திசை நன்மையாக இருக்கவேண்டில் சந்திரன் சுக்கிரனுடன் அல்லது சனியுடன் சேரவேண்டும். அவ்விதமில்லாவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டால் கஷ்டமே கஷ்டம்தான். நடு வயதில் செவ்வாய் திசையையும், இராகு திசையையும் அனுபவிக்க நேர்ந்தால் சாதகர் தொடர்ச்சியாக தீய திசைகளைக் கண்டு கலக்கமுற்று நிலை குலைந்து போவார். இவரின் மனம் தளர்ந்து ஒருவித பயமும் துக்கமும் குடிகொண்டு விடுகின்றன. இவர் சிந்தனையே குழம்பி புத்தி தெளிவாக இல்லாது தடுமாற்றமடைகின்றார். இவர் செய்வதெல்லாம் தவருகவே இருக்கும். சாந்தியோ சமாதானமோ இவருக்கு இல்லை. ஏற்றம், இறக்கம், தோல்விகள், நிந்தனைகள், அவமானம், பணக் கஷ்டம் ஆகியவற்றை எதிர்நோக்கி சமாளிக்கத் தைரியம் வேண்டும். பொறுமை வேண்டும். சகிக்கும் ஆற்றல் வேண்டும். எனவே, இவர்கள் ஒதுங்கி இருப்பது நல்லது. மேலதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்வதோ எதிர்ப்பதோ கேட்டையே உண்டாக்கும்.

வியாழ திசை சாதகரை சொற்பமாக உயர்த்திவிடும். சனி திசை வந்தால் சாதகர் நிச்சயமாக உயர்வார். சனி திசை துவங்கவே இவருக்கு யோகம் துவங்கிவிடும். சனி திசையில் சுக்கிர புத்தியும் சுக்கிர திசையில் சனி புத்தியும் இச் சாதகருக்கு மேலான அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும். சுக்கிர திசையை அனுபவிக்கும் யோகம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். இத் திசையில் சாதகருக்குக் காணி, பூமி, வீடு, வாகனம் இவற்றின் லாபமும், மேலான ஐஸ்வரியமும், உயர் பதவியும், சகலருடைய மதிப்பும், அந்நியோன்யமான குடும்ப சுகமும் கிடைக்கும். சுக்கிரன் பாக்யநாதனுகையால் சாதகரைத் தேடி செல்வம் வரும். சுக்கிரன் சாதகத்தில் பலமுள்ளவனுக இருந்தால் அந்நிலைக்குத் தக்கபடி லாபம் கிட்டும். சுக்கிரனுடன் சந்திரனும் சேர்ந்திருந்தால் சாதகர் பெரும் தனவானுகிவிடுவார். சுக்கிரன் சுகபோகங்கட்கு உரியவனுகையால் சகல இன்பங்களையும் சுகபோகங்களையும் சாதகர் அனுபவிப்பார். இவ்வித சுக்கிர திசை ஒருவர் தொழிலில் இறங்கும்போது வந்தால் அவருக்கு எதிர்பாராத வாய்ப்புக்கள் கிட்டி உயர் பதவியும் பெற்று, பணமும் தேடிவிடுவார். விவாகமாகும் காலமாகில் நிச்சயமாக மதிப்பான இடத்தில் இவருக்குப் பெண்ணும் பொருளும் சேரும்.

சில லக்கினங்களுக்கு சில கிரகங்கள் சாதகமாகவும் சில பாதகமாகவும் பலன் செய்வதைக் காண்கின்றோம். உதாரணமாக, மேடம், கடகம், சிங்கம், விருச்சிகம், தனு, மீனம் இவ்விராசிகட்கு சூரியன், சந்திரன், செவ்வாய், வியாழன் சாதகமாகவும், ஏனைய புதன், சுக்கிரன், சனி பாதகமாகவும் பலனைச் செய்யும். இடபம், மிதுனம், கன்னி, துலா, மகரம், கும்பம் ஆகிய ராசிகட்கு புதன், சுக்கிரன், சனி சாதகமாகவும், ஏனைய சூரியன், சந்திரன், செவ்வாய், வியாழன் பாதகமாகவும் பலன் செய்வார்கள் எனக் கூறப்பட்டிருக்கின்றது. இது சோதிட பொது விதி—

கன்னி லக்கினத்தில் பிறந்தவர்கட்கு மிதுன லக்கின சாதகரைப் போலவே சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு ஆகிய கிரகங்கள் தீயவை. ஆகவே, இவர்கள் திசைகளும் புத்திகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதகருக்குப் பாதகமான பலன்களேயே செய்கின்றன. இவை களில் செவ்வாயும் சந்திரனும் 3,8ம் வீடுகளுக்கும் பதிெனொராம் (11) வீட்டுக்கும் அதிபராகையால் கூடுதலான தீய பலனைச் செய்வார்கள். செவ்வாய் திசையும் இராகு திசையும் தொடர்ந்து நடப்பதால் ஆகக் கூடிய நஷ்டமும், கஷ்டமும், பலவித தோல்விகளும் துன்பம் துயரங்களும் இவர் அனுபவிக்க வேண்டியவராகின்றார். இத்திசைகள் பாலியத்தில் வருமாகில் இவர் கயிறுகத் திரிக்கப்படுவார். ஆனால், வியாழ திசை துவங்க சொற்ப முன்னேற்றம் காண்பர். சனி திசை இவரைத் தூக்கி விடும். காணி, பூமி, வீடு, பணம் இவற்றை இவர் கட்டாயமாகத் தேடிவிடுவார். கன்னி லக்கின சாதகர்கள் கேது திசையில் நோய்வாய்ப்பட்டாலும் தொழிலுக்கோ தேட்டத்திற்கோ பாதகம் செய்யாது. சுக்கிரன் இந்த சாதகருக்கு மகா சுபன், யோககாரன். சாதகத்தில் பலம் பெற்றிருந்தால் உன்னத பதவியும் அதிக செல்வத்தையும் ஐம்புலன்களுக்கும் இன்பம் கொடுக்கக்கூடிய சகல சுகபோகங்களையும் கொடுக்கும்.

செவ்வாய் திசையின் கோரத் தன்மையையும் இராகு திசையின் ஏற்றம், இறக்கம், அவமானம், கைக்கெட்டியது வாய்க்கெட்டாதிருக்கும் துர்அதிர்ஷ்டத்தையும் இங்கு வர்ணிக்கவேண்டிய அவசியமில்லை. சாதகர் வலிமை, ஊக்கம், கல்வி அறிவு இவை இருக்கினும்—ஒழுக்கமும் இருக்கினும் இக்கஷ்டம் நிறைந்த திசைகளைத் தாண்டிவிடுவார். மேலும் இந்த லக்கின சாதகர்கட்கு சுக்கிரன், சனி, புதன் ஆகிய மூவரும் பலம் பெற்றிருத்தல் வேண்டும். இவர்கள் நிலையைப் பொறுத்தே சாதகரின் அதிர்ஷ்டம் தங்கியிருக்கின்றது. இதுவரையில் 5,9,10ம் பீடாதிபதிகளின் சேர்க்கையினால் உண்டாகும் அதிக உயர்தரமான ராஜயோகங்களைப் பற்றி மட்டுமே எழுதியிருக்கின்றேன். இவ்வித யோகங்கள் சமூகத்தில் உயர்மட்டத்தில் இருக்கும் சிலருக்கே இவை ஏற்படக்கூடும். ஆனால், பலவித நாபது யோகங்களும் சந்திராதி யோகம், அனுபா, சுனபா, துருதுரா யோகங்களும் கேமதுரும என்ற தரித்திர யோகமும் சகட யோகமும் காலக்ஸர்ப்ப யோகமும் பிரவர்ஜா, கேசரி யோகமும் இன்னும் கிரகமாலிகா யோகங்கள் பலவிதத்திலும் உள்ளன. இவைகளை அறிந்திருப்பது நல்லது. இந்த யோகங்களை பிருகத் ஜாதகம் என்ற கிரந்தத்தில் பார்க்கவும். இது கி. பி. 550ம் ஆண்டளவில் வராகமிரரால் எழுதப்பட்ட பழமை வாய்ந்த நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துலாம்

துலா ராசி சுக்கிரனுடைய வீடு. ஆகவே, சாதகரில் சுக்கிரனுடைய அம்சம் பொருந்தியிருக்கும். இவர் ஒரு நாகரிகமான பண்புடைய சுகபோகி. இவர் நீதியாக நடக்கக்கூடியவர். வாஞ்சை நிறைந்த ஒரு வசீகரப் பிறவி. இவரில் எல்லோரும் விருப்பம் காட்டுவர். சாந்தமும் நற்குணமும் நிறைந்த உலக சுகபோகங்களை விரும்பி அனுபவிக்கும் பேர்வழி. இவருக்கு ஆடை, ஆபரணம், அலங்காரம், சங்கீதம், அழகிய பெண்கள் சமூகம் ஆகியவை மெத்தப் பிடிக்கும். இவர்கள் உயர்தர நுண்கலைகளை விரும்புவர். இவர்கள் எப்போதும் சுகமாக வாழவேண்டுமென்று விரும்புவதால் முன்னேற்றமடைய முயற்சி எடுக்க மாட்டார்கள். சந்தர்ப்பங்களைத் தவறவிடுகிறார்கள். ஒரு சிங்க லக்கின சாதகருக்கு இருக்கும் விடாமுயற்சி, ஊக்கம், ஆசை, அதிகாரப் பிரியம் ஆகியவை இந்த லக்கினத்தில் பிறந்தவர்கட்கு இல்லை. ஆனால், இவர்கள் அதிர்ஷ்டசாலிகள். இவர்கட்கு இவ்வுலக வாழ்க்கை ஒரு வரப்பிரசாதம். இந்த லக்கினத்திற்கு சுபர்கள் சனியும் புதனும். இவர்களின் திசைகள் மேலான பதவியையும் சுகபோகங்களையும், பொருளையும் கொடுக்க வல்லவை. அசுபர் வியாழனும் சூரியனுமே. இவ்விரண்டினுடைய திசைகளும் சுபபலனைச் செய்யத் தடைகளாகும். நோய், பீடை, சஞ்சலங்கள் இத்திசையின் பேறுகள். நடுநிலையிலுள்ள சுக்கிரன், செவ்வாய், சந்திரன் ஆகியவை புதன், சனியுடன் சேர்ந்தால் விசேஷ சுப பலனையும், தனிமையாக சமபலனையும் இத்திசைகளில் சாதகர் அனுபவிப்பார். ஆகவே, இந்த லக்கினத்திற்குப் பிரதானமான கிரகங்கள் சனி, புதன், சந்திரன் ஆகிய இம்மூன்றுமே. சுக்கிரனும் நன்றாக சாதகத்தில் இருக்கவேண்டியது.

இராஜயோகம்: இராஜயோகத்தை உண்டாக்கும் கிரகங்கள் சனியும் புதனும். புதனும் சந்திரனும் சேர்ந்து 9ல் அல்லது 10ல் இருப்பது, அல்லது புதன் 9ல் சந்திரன் 10ல் இருப்பது, அல்லது பரிவர்த்தனமாக சந்திரன் 9லும் புதன் 10லும் இருப்பது அல்லது ஒன்றையொன்று பார்ப்பது போன்றவை முதல்தர இராஜயோகம். சில சோதிடர் சந்திரன், புதன் சேர்க்கை பெரும் யோகமல்ல என்கின்றார்கள். ஆயினும் சந்திரன் தனியே கேந்திரம் ஏற, புதன், சூரியன் சேர்ந்து நிற்க, இவ்வித சாதகத்தை உடைய துலா லக்கின சாதகர் பெரும் பதவியில் இருப்பதை அறிவேன். மேலும், சனியும் சந்திரனும் சேர்ந்து 5,10ல் இருந்தாலும் தத்தம் வீட்டிலிருந்தாலும் பரிவர்த்தனமாக வீடு மாறியிருந்தாலும் அல்லது சனி, புதன், சந்திரன் ஆகியவை 1,4,7,10,5,9 ஆகிய இடங்களில் இருந்தாலும் இராஜயோகம் உண்டாகும். சனியும் குருவும் சேர்ந்தால் யோகம்.

தனயோகம்: சனி, புதன், செவ்வாய், சூரியன் ஆகியவை தனயோகம் உண்டாக்கும் கிரகங்களாம். புதனும் சூரியனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தோ, அல்லது பரிவர்த்தனமாகி வீடுமாறியோ 2,9,11ம் இடங்களில் இருந்தாலும் அல்லது சேர்ந்து 1,4,7,10,5,9ல் இருந்தாலும் தனயோகம் ஏற்படும். இவ்வித யோகம் சாதகரைத் தனவானுக்கும். மேலும் புதனும் செவ்வாயும் சேர்ந்து 2,9,11ல் இருந்தாலும், அல்லது பரிவர்த்தனமாக வீடுமாறி இருந்தாலும் 2,9ம் வீடுகளில் அல்லது ஒன்றையொன்று பார்த்தாலும் தனயோகம் உண்டாகும்.

சனியும் சூரியனும் சேர்ந்து 2,9,11,5ல் இருந்தாலும், பரிவர்த்தனமாக இருந்தாலும், ஒன்றையொன்று பார்த்தாலும் அல்லது சனியும் சூரியனும் 1,4,7,10ல் இருந்தாலும் தனயோகமேற்படும். அதேவிதம் சனியும் செவ்வாயும் சேர்ந்து 2,9,11ல் இருந்தாலும், ஒன்றையொன்று பார்த்தாலும், அல்லது பரிவர்த்தனமாக வீடுமாறி இருந்தாலும் (5ல் 2ல்) இவ்வித தனயோகங்கள் சாதகரை மதிக்கத்தக்க தனவானுகக் கருதுவார்கள். இந்த லக்கினத்திற்கு வியாழன் தீய கிரகமானகையால் இது 6ல் 8ல் அல்லது 12ல் இருப்பது விரும்பத்தக்கது. துலா லக்கின சாதகருக்குப் புதனும் சனியும் சாதகத்தில் பலம் பெற்று இருக்கவேண்டும். அல்லாது போனல் சாதகரின் யோகம் பலன் செய்யாது.

மகாபுருஷ யோகம்: லக்கினத்தில் சனி உச்சம் பெற்ருல் உன்னதமான மகாபுருஷ யோகம் ஏற்படும். செவ்வாய் 4ல் உச்சம் பெற்ருலும் அல்லது 7ல் இருந்தாலும், சனி 4ல் இருந்தாலும் மகாபுருஷ யோகமுண்டு. மேலும் வியாழன் 10ல் உச்சம் பெறுவது விரும்பத்தக்கதல்ல. ஏனெனில் வியாழ திசையில் கூடுதலான கஷ்டத்தை சாதகர் அனுபவிக்க நேரிடும். லக்கினத்தில் சுக்கிரன் இருக்கப் பிறக்கின்றவர்கள் யோகவான்கள். இவ்வித யோகமுடையவர்கள் சாமான்ய மனிதரல்ல. இவர்கட்கு ஆற்றலும் அறிவும் உண்டு. இவர்கள் பெரிய காரியங்களைச் செய்து முடிக்கக்கூடியவர்கள். (இவை மகாபுருஷ யோகபலன்.)

துலா லக்கினத்திற்கு யோககாரகன் சனி. பாக்கியநாதன் புதன். இவ்விரண்டின் திசைகளும் சோபனமான பலனைச் செய்யும். அத்துடன் இவ்விரு திசைகளும் ஒன்றன்பின் ஒன்ருக வருவதால் துலா லக்கின சாதகர் இவ்விரு திசைகளையும் தொடர்ச்சியாக (19+17) 36 வருஷத்திற்கு அனுபவிக்கின்ருர். இவ்வித இரு யோக திசைகளையும் அனுபவிக்கும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அதிர்ஷ்டசாலிகள் சிலருக்கு இந்தப் பாக்கியம் கிட்டும். சனி திசையிலும் இராகு திசையிலும் சாதகரின் முன்னேற்றம் தடைப்பட்டிருந்தும் ஒருமாதிரிப் தப்பிக்கொண்டாராகில் வியாழ திசை சொற்பமாக உயர்த்தி நிலைபெறச் செய்யும். ஆனல், இவர் நெடுநாளாக எதிர்பார்த்திருந்த முன்னேற்றம் இந்தச் சனி திசையில்தான் கிடைக்கும். இச்சாதகரின் முன்னேற்றம் இச் சனி திசை புத்தியிலேயே ஆரம்பமாகி தங்கு தடையின்றி உயர்ந்த இடத்தை நாடி ஏறிக்கொண்டே போய் தலைமைப் பீடத்தையும் பிடித்துவிடுவார். இந்த சனி திசையும் இதை அடுத்துவரும் புதன் திசையும் இவர் வாழ்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னகயைப் பிரகாசிக்கச் செய்யும். இவர் இராகு திசையிலும் வியாழ திசையிலும் கீழ்நிலையிலிருந்தவர். இப்போது பணத்தை யும் அதிகாரத்தையும் காண்கிறார். சகல சம்பத்துக்களும் சுக சௌகரியங்களும் காணி பூமியும் இவரைத் தேடி வருகின்றன. மேலும் இவ்வித திசையில் சாதகரின் திறமை,புத்தியுக்தி விவே கம் எதையும் சுலபமாகக் கையாளும் வல்லமை ஆகியவை எல்லாம் சனி திசையில் உயர் கட்டத்தில் இருக்கும். சனி கட் டாயம் சாதகத்தில் பலம் பெற்று இருக்கவேண்டும். 6,8,12ல் பலன் சொற்பமே. இத்திசை பாலியத்தில் வந்தால் சாதகரின் பிதா முன்னேற்றமடைவார்; தனவானுவார். சாதகரின் கல்வி அளவுக்கு சனி பெரும் உதவியாக இருக்கும். புத்தியும் திறமை யும் இவருக்கு உண்டு. புதன் திசை—இது பாக்கியநாதனின் திசை. ஆகவே, புதன் பொருளையும் அறிவையும் அருளையும் வாரி வழங்கும். சாதகர் சனி திசையை அனுபவித்து முன்னேற்றங் கண்டவராகில், புதன் திசை இவரை இன்னும் ஒருபடி உயர்த்தி வைக்கும். இவர் சொந்தத் தொழிலில் ஈடுபட்டவராகில் இவர் வர்த்தகம் உச்சவரம்பை நாடிச் செல்லும்.

எவ்வித தொழிலில் சாதகர் ஈடுபட்டாலும் அவர் தனக்கு ஒரு தனிப் பெயரையும் புகழையும் தேடிக்கொள்வார். இது புத் திக்குரிய கிரகமாகையால் இவர் மற்றவர்க்குத் தெரியாமலே பெரிய தேட்டம் தேடிவிடுவார். இவ்வித புதன் ஜனன காலத் தில் 1,4,7,10,5,9,2,11 ஆகிய இடங்களில் இருந்தால் சிறந்த பலனைச் செய்வார். இத்திசை ஆரம்ப திசையாக வந்தாலும் சாதகரின் பிதாவை உயர்த்திவிடும். சாதகரும் சகல சௌகரி யங்களையும் அனுபவிப்பார். படிப்புக்குப் புதன் பெரும் உதவி யாக இருக்கும். பின் வயதில் புதன் திசை வித்வத் ஜனங்களின் மதிப்பையும் சந்தோஷகரமான வாழ்க்கையையும் வெகுஜன மதிப்பையும் கொடுக்கும். சனி திசையில் பிறந்த சாதகர் புதன் திசையில் வெற்றியாக மேல் படிப்பை முடித்துப் பட்டம் பெற்று தொழிலையும் பெறுவார். வாழ்க்கையைச் சீராய் அமைத்துக் கொள்வார். இவ்வித யோக திசைகளை அனுபவித்த துலா லக்கின சாதகர் கேது திசையில் சொற்ப சஞ்சலத்தையே காண்பார். இவருக்கு சுக்கிர திசை தீயபலனைச் செய்யாது. இவ ருக்கு அட்டமாதிபதி தோஷமில்லை. வாழ்க்கை சுமுகமாக அமை யும். படிப்படியாக முன்னேற்றம் காண்பார். சூரிய திசை இந்த லக்கினத்தில் பிறந்தவர்கட்கு தீயபலனையே செய்யும். ஆனால், சனியுடன் அல்லது புதனுடன் சேர்ந்தால் தீயபலன் குறைவா கவே நடக்கும்.

சந்திர திசையும் செவ்வாய் திசையும் இந்த லக்கினத்தில் பிறந்தவர்கட்கு தீயபலன் செய்வதில்லை. சமபலனைச் செய்யும் இந்த லக்கினத்திற்கு 9,10,11ம் வீட்டதிபதிகள் புதன், சந்தி ரன், சூரியன் கட்டாயம் சாதகத்தில் 6,8,12ல் இல்லாது சுப இடங்களில் இருக்கவேண்டியது, சாதகம் அப்போதான் வலு வடையும். துலாலக்கினத்தில் பிறந்து சனி,புதன் திசைகளை அனு பவித்த ஒருவர் சாதகத்தில் சூரியனும் புதனும் லக்கினத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இவர் இராகு திசையிலும் வியாழ திசையிலும் கல்வி கற்றுப் பட்டம் பெற்று என்ஜினியர் பதவி ஏற்றார். இவர் சனி திசையில் படிப்படியாக ஏறி தலைமை இடத்தைப் பிடித்துவிட்டார். புதன் திசையில் இவர் இலங்கை ஸ்தானிகராக நியமனம் பெற்றார்.

# விருச்சிகம்

விருச்சிக லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு உண்டாகும் தனயோகம், இராஜயோகங்களைப் பற்றியும், அவர்களுக்கு உண்டாகும் சுப, அசுப திசைகளைப்பற்றியும் ஆராய்வோம்.

இவ்விருச்சிக லக்கினத்திற்கு அதிபதி செவ்வாய். ஆகவே, மேட லக்கினத்திற்கு உரிய குணாதிசயங்கள் இவ் விருச்சிக லக்கினத்தில் பிறந்தவர்களுக்கும் உண்டு. ஆனால், செவ்வாய் விருச்சிக ராசியில் அதிக பலம் பெறுவதால் இவர்கள் சுறுசுறுப்பு, வீர பராக்கிரமம் உடையவர்கள். ஆயினும், குரூரத்தன்மையும் கூடுதலாக இவர்களிடம் உண்டு. இவர்கள் கலகப்பிரியர்கள். கோழைகள் அல்ல. பயம், அச்சம் இவர்களிடம் இல்லை. துணிச்சல் கூடுதலாக உண்டு. எதையும் எதிர்த்து நிற்க வல்ல தேகபலமும், மனோ பலமும் இவர்களிடம் உண்டு. கலகம் நடக்குமிடத்தில் முன்னுக்கு நிற்பவர்கள் இவர்கள். வன்செயல்கள் செய்யத் தயங்கமாட்டார்கள். இவர்கள் பகைவரை உண்டாக்குபவர்கள். இவர்களிடம் பிடிவாதம், விட்டுக்கொடுக்காத் தன்மை, நினைத்ததை முடிக்க இவர்கள் எடுக்கும் பிரயாசை, இவர்களின் முன்கோபம் ஆகியவை இவர்களின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்றன. இவர்களிடம் கடின உழைப்புக்குரிய திறமையுண்டு. இவர்களிடம் பொறுமையும், தன்னடக்கமும் இருப்பின் இவர்களின் வீரத்திற்கும், திறமைக்கும் உயர் இடம் இவர்கட்குக் கிட்டும். இந்த லக்கினத்தில் பிறந்தவர்கட்கு வியாழனும், சந்திரனும். செவ்வாயும் ஜனனகாலத்தில் பலம் பெற்று இருந்தால், விசேஷமாக சந்திரனும், வியாழனும் சேர்ந்து 2-5-9 10ல் இருந்தால் இவர்கள் உயர்தர வகுப்பு மனிதர்; வீரர்கள்; திறமைசாலிகள்; அஞ்சா நெஞ்சம் படைத்த உத்தமபுருஷர்கள். இந்த லக்கினத்திற் பிறந்த பலர் உயர் பதவிகளில் இருக்கிறார்கள். இந்த லக்கினத்திற்கு சுபர் வியாழனும், சந்திரனும். இவர்களின் திசை சாதகருக்கு பெரும்பலனைச் செய்யும். பணம், பதவி, மதிப்பு. அதிகாரம் இவற்றை வழங்கும். அசுபர் சனி, புதன், செவ்வாய். இவர்கள் திசைகள் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் துன்பத்தையும் கொடுக்கும். விசேஷமாக புதன் திசை மிகத் தீயது. அதிக கஷ்டத்தைக் கொடுக்கும். நடுநிலைமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுள்ள சூரியனும், சுக்கிரனும் இவர்களின் திசைகளில் தனி மையாக சாதகத்தில் இருக்கில் சமபலனையும், வியாழனுடன் அல்லது சந்திரனுடன் சேர்ந்து இருந்தால் சோபனமான பலனை யும் கொடுக்கும்.

இந்த லக்கினத்திற்கு ராஜயோகத்தை உண்டாக்கும் கிர கங்கள் வியாழன், சந்திரன், சூரியன் ஆகியவை. சூரியனும், சந்திரனும், தத்தம் வீடுகளில்இருந்தால் அல்லது இரண்டும் சேர்ந்து 9ல் அல்லது 10ல் இருந்தால், அல்லது பரஸ்பரம் வீடு களில் மாறி இருந்தால் அல்லது ஒன்றையொன்று பார்த்தால் முதல் தரமான ராஜயோகம் உண்டாகும். உயர் பதவி வகிப் பர். அதே விதம் வியாழனும், சூரியனும் தத்தம் வீட்டில் இருந்தாலும், அல்லது, சேர்ந்து 9-10ல், அல்லது, 2-5ல் இருந் தாலும் பரிவர்த்தனமாக வீடு மாறி இருந்தாலும், ஒன்றை யொன்று பார்த்தாலும், அல்லது 1-4-7-10ல் இருந்தாலும் இராஜயோகம் உண்டாகும். இவ்விதமான யோகம் ஏற்படும் பொழுது விருச்சிக லக்கினத்திற்கு 9ம் வீடாகிய கடகத்திற்கு 9ம், 10ம் வீடுகளின் அதிபதியாகிய வியாழனும், செவ்வாயும் சேர்ந்தாலும், ஏதும் ஒருவித சம்பந்தம் ஏற்பட்டாலும் அத் துடன் விருச்சிக லக்கினத்திற்கு 10ம் வீடாகிய சிங்கத்தில் ஒன்பது, 10ம் வீடுகளுக்கு அதிபதிகளாகிய செவ்வாயும், சுக்கி ரனும் சேர்ந்தாலும், அல்லது சம்பந்தம் ஏற்பட்டாலும் (சேர்க்கை, பார்வை, பரிவர்த்தனம்) இவ்வித இரு யோகங்க ளும் முன் கூறிய இராஜயோகத்திற்கு வலிமையை உண்டாக்கி சாதகரை உயர் பதவிக்கு தகுதியுள்ளவராக்குகின்றன, இவ் வித யோகங்கள் சிரேஷ்டர்களுக்கு மட்டுமே கிடைக்கும். சந்தி ரன் சூரியனுடன் சேர்வதால் க்ஷீணசந்திரராகின்றார். பலன் குறைந்தவராகின்றார். விருச்சிக லக்கின சாதகருக்கு தன யோகத்தை உண்டாக்கும் கிரகங்களான சந்திரன், வியாழன், புதன் ஆகியவற்றில் சந்திரன் வியாழனுடன் சேர்ந்தால்,முதல் தர தனயோகம் உண்டாகும். அல்லது சந்திரன் புதனுடன் சேர்ந்தாலும் அல்லது வியாழன் புதனுடன் சேர்ந்தாலும் தனயோகம் ஏற்படும். இவ்வித சேர்க்கை 2-5-9-11ல் இருக்க வேண்டியது. இந்த லக்கினத்திற்கு சந்திரனும், வியாழனும் 9ல் சேர்ந்தால் அல்லது 2ல் சேர்ந்தால் சாதகர் தனவானா வது நிச்சயம். இவ்வித கிரகங்கள் பரிவர்த்தனமானாலும் ஒன்றையொன்று பார்த்தாலும் யோகம் ஏற்படும். ஆனால், இவ்வித யோகம் 6ல் அல்லது, 8ல் அல்லது, 12ல் ஏற்பட்டால் பலன் செய்யாது. விருச்சிக லக்கின சாதகருக்கு மகா புருஷ யோகம் ஏற்படின் லக்கினத்தில் செவ்வாய் 4ல் சனி, 7ல் சுக்கி ரன் இருக்கவேண்டும். அப்படி இருந்தாலும் இது கம்மியான யோகமே. உச்சம் பெற்ற கிரகங்களைப் போல் ஆட்சி பெற்ற கிரகங்கள் பலன் செய்யா.

விபரீத ராஜயோகம், செவ்வாய் 6ல், புதன் 8ல், சுக்கிரன் 12ல் இருந்தால் அல்லது இவை பரிவர்த்தனமாக6-8-12ல்இருந் தால் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருச்சிக லக்கின சாதகருக்கு புதன் மிகவும் தீய கிரக மாகையால் இது 6ல் அல்லது 8ல் அல்லது 12ல் இருந்தால் சாதகருக்கு தீயபலன் செய்யாது. மேலும், இந்த லக்கினத்திற்கு பிரதானமான கிரகங்களாகிய சூரியன், சந்திரன், வியாழன் ஆகியவை சாதகத்தில் 2-5-9-10ல் இருக்க வேண்டியது 1-4-7-11ல் இருந்தாலும் பாதகமில்லை. இவ்விதம் கிரகங்கள் அமைந்தால் சாதகர் உலக சுகபோகங்களை நிச்சயமாக அனுபவிப்பார். விருச்சிக லக்கின சாகதருக்கு வியாழ திசையும், சந்திர திசையும் பெரும் பலனைசெய்வதுடன் இவரை உயர்த்தி தனத்தையும் கொடுக்கும். இவருடைய சீவிய காலத்தில் இத்திசைகள் வருமாகில் சாதகர் அதிர்ஷ்டசாலி.

விருச்சிக லக்கினசாதகருக்கு வியாழ திசை மிகமிக சோபனமான திசை. வியாழன் தேவகுரு. மிகவும் உயர்ந்த சுப கிரகமாகையால் சாதகர் இத்திசையில் குணதிசயங்கள் மாறி மிக்க பண்பும், தேவபக்தியும் உள்ளவராக மாறிவிடுகின்றார். இது சாதகருக்கு பொருளைக் கொடுக்கக்கூடியது. ஆகவே, இதன் திசையில் சாதகர் காணி பூமி, தனம் இவற்றைத் தேடிக் கொள்வதால் மதிப்புக்குரியவராகின்றார். உயர்வகுப்பு மனிதர்களுடன் புழங்கும் வாய்ப்பும் கிடைக்கின்றது. இந்தவியாழன் சாதகத்தில் 1-4-7-9-10ல் இருந்தால் இவர் படிப்படியாக உயர்ந்து வியாழதிசை முடியுமுன்னே உயர் பதவிக்கு வந்து விடுவார். இவருக்கு குடும்ப சுகம், மனச்சந்தோஷம், குழந்தைப்பேறு இவை எல்லாம் கிட்டும். இவருக்கு 16 வருஷத்திற்கு மிகவும் செழிப்பான வாழ்க்கை கிடைக்கும்.

இவர் இத்திசையைக்காணுமுன் இராகு திசையைக் கழித்தவர். விருச்சிக லக்கின சாதகருக்கு இராகு திசை பெரும் துன்பம் துயரத்தையும், பணக்கஷ்டத்தையும், பெரும் பொறுப்புகளையும் சுமத்தி நசித்திருக்கும். அவ்வித காலத்தில் விருச்சிக லக்கின சாதகர் நிலைகுலைந்தவராக பலவகையில் பகைவரை உண்டாக்கி கலகங்களில் சிக்கித் தவித்தவருக்கு வியாழதிசை வந்ததும் ஒரு பெரும் வரப்பிரசாதமாக இருக்கும். இராகு திசையில் உள்ள மந்த புத்தியும் மாறி இப்போது சாதகர் திறமைசாலியாகவும், ஆற்றலுடையவராகவும் ஆகிறார். இவர் சந்திர திசைக்கு முன்பே பிறந்தவராகில் சந்திரன் இவருக்கு கல்வி அறிவையும், பொருளையும் கொடுத்திருக்கும். ஆனல், இவரின் இராகு திசை 18வருட காலத்தில் இவரை கசக்கிவிட்டிருக்கும்.

இவர்புத்திசாலியாக இந்தத்திசையில் தேடிய தேட்டத்தை பத்திரப்படுத்தினல், சனி திசை வர வாழ்க்கையைச் சிறப்பாகக் கழிக்கலாம். ஆனல், புதன் திசையும், அதை அடுத்து கேது திசையும் வருவதால் இவர் தன் நிலையை நன்கு உணர்ந்து கொள்வது நல்லது. புதனேடு கேதுவோ, வியாழன், சந்திரன் சம்பந்தம் பெற்ருல் சாதகர் பயப்படவேண்டியதில்லை. அல்லாது போனல் கவனமாக நடந்து கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்கிரன் விருச்சிக லக்கின சாதகருக்கு பெரும் பலனை தனிமையாகச் செய்யாது. ஆனல், சுகபோகங்களுக்கு உரிய கிரகமாகையால் சாதகரை மதிப்பாக வைத்திருக்கும். ஆனல், பணக்கஷ்டமும் இருந்து கொண்டேயிருக்கும். சூரியதிசை இவ் விலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு பிழையில்லை. முன்னேற்றம் உண்டு. தொழில் விருத்தியாகும்.

—விருச்சிக லக்கின சாதகருக்கு சந்திரன் யோக காரன், பாக்கியநாதன். இது சாதகத்தில் பலம் பெற்றிருக்க வேண்டிய அவசியம். சூரியன் 10ம் வீட்டதிபதியுடன் கூடினல் ராஜயோகம் ஏற்படும் என்ற போதிலும் சந்திரன் சூரியனுடன் சேர்ந்தும் அது க்ஷீண நிலையை அடைவதால் (அமாவாசை) இது பூரண பலனைச் செய்யமாட்டாது என்பது பலரின் அபிப்பிராயம். எனினும் சூரியன், சந்திரன் 9-10ல் இருப்பது விரும்பத்தக்கது.

சந்திரன் சாதகத்தில் பலம் பெற்று இருந்தால் சாதகருக்கு இதன்திசை நடந்தால் சாதகர் சகலவித போக பாக்கியங்களையும் அனுபவிப்பார். சூரிய திசையில் சாதகர் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்து விட்டாராகில் சந்திர திசை அவருக்கு சகலவாய்ப்புகளையும் உண்டாக்கிஉன்னதஸ்தானத்தை அடைய உதவுவார். பொருளையும் ஏராளமாகக்கொடுப்பார். சந்திரன் மனதைக் குறிக்கும் கிரகமாகையால் இவர் சாந்தமும், சந்தோஷமும் உடையவராக இருப்பார். இவர் குடும்ப வாழ்க்கையும் சிறப்பாக இருக்கும். பெண்களின் சமூகமும் அவர்களின் உதவியும் கிடைக்கும். சாதகர் வசீகரமாக இருப்பார். இவருக்கு கடல் பிரயாணமும் உண்டு.

சந்திரன் சாதகருக்கு அதிக வருவாயையும், மதிப்பையும் காணி, பூமி, வாகனம் இவற்றையும் கொடுப்பதுடன் மதிப்பு, கீர்த்தி, ஐஸ்வரியமும் லட்சுமி கடாட்சமும் கொடுப்பார். இவ்வித சந்திரன் வியாழனுடன் சேர்ந்திருந்தால் பலன் இன்னும் விசேஷமாக இருக்கும்.

இத்திசை ஆரம்பதிசையாகில் சாதகரின் பிதாவுக்கு யோகமுண்டாகும். சாதகருக்கு சுகவாழ்க்கையும், முன்னேற்றமும் உண்டு. இவர் சந்திர திசையிலும், செவ்வாய் திசையிலும் படிப்பில் முன்னேறி இராகுவில் சொற்ப கஷ்டப்பட்டு வியாழ திசை வரவும் இவர் முன்னேற்றம் கண்டு எல்லோராலும் மதிக்கத்தக்க தனவாளுகுவார்.

விருச்சிக லக்கின சாதகருக்கு 3-6-8-11ல் வீட்டு அதிபதிகளில் புதன் மிகவும் தீயவனுகின்ருன். எட்டு பதினேராதிபதி. ஆகவே, இவரின் திசை மிகவும் கொடியது. இவர் சாதகத்தில் 6-8-12ல் இருந்தால் அல்லது வியாழனுடன் சம்பந்தமோ அல்லது சந்திரனுடைய சம்பந்தமோ பெற்ருல் சாதகர் இவரின் கஷ்ட திசையை அனுபவிக்க நேரிடாது. அப்படி இல்லாவிடில் புதன் திசையில் இவர் வறுமையையும், தரித்திரத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிப்பதுடன் இவர் சீவியத்திற்கே போராட வேண்டி வரும். இப்புதன் திசைக்கு முன்பு நடந்த சனி திசையும், விருச்சிக லக்கின சாதகருக்கு தீய திசையாகையாலும் புதன் திசையை அடுத்து வரும் திசை கேதுவினுடையதாகவும் இருப்பதால் விருச்சிக லக்கின சாதகர் தன் நிலையை நன்குணர்ந்து தன்னை பேணிக் காக்கும் முறையில் தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். வசதி படைத்த குடும்பத்தவர்களும் எவ்வித திடீர் இன்னல் தோன்றும் என்பதை எதிர்பார்த்தே இருக்கவேண்டும். வியாழ திசை நடக்கும் காலத்தில் தேடிய தேட்டத்தை சனி திசையிலும் காப்பாற்றிக் கொண்டார்களேயானாலும் புதன் திசை ஓர் ஆட்டத்தைக் கொடுக்கும். (கெட்டவன் கெட்டிடில்கிட்டிடும்யோகம் தேககசுகத்தையும் இப்புதன்திசை பாதிக்கும். தொழில் முயற்சிக்கும் இப்புதன் பங்கம் விளைவிக்கும். புதன் புத்திக்கு காரகன் கெட்ட புதன் புத்தியை மந்தமாக்கி விடும். வாழ்க்கையில் பலவித தோல்விகளைக்கண்ட சாதகர் மனம் தளர்ந்து உலகத்தை வெறுக்கின்றார். இவர் பகைவர்களையும் உண்டாக்கிக் கொண்டு பலவித கஷ்டத்திற்குள்ளாகின்றார். இவர் பயமற்றவராகையால் கலகத்திற்கு அஞ்சமாட்டார். குடும்ப வாழ்க்கையும் சந்தோஷகரமாக இராது. கடனுபத்திரவம், மனதிற்கு சஞ்சலம், முன்னேற்றம் தடைப்படும், இவற்றோடு அரசபயம், பொருள் நஷ்டம், திருடர் பயம் இவையெல்லாம் நடக்கக்கூடும்.

# தனு

மேடம் முதல் மீனம் வரையுள்ள 12 இராசிகளில் தனு இராசி லக்கினமாக அமைவது மிகவும் விரும்பத்தக்கது. சுப கிரகங்களில் உயர்ந்த மேன்மை வாய்ந்த கிரகமான வியாழன் இந்த இராசிக்கு சுபன் ஆகின்றான். இதனால் சாதகர் உயர்ந்த பண்பாடு, ஒழுக்கம், சீலம் இவை உடையவராக விளங்குகின்றார். இறைவனையும், இறைவன் தொண்டையும் மட்டுமல்ல மதி நுட்பத்திற்கும் மெய்யான அறிவுக்கும் குருவே காரகன். ஆதலால் இந்த லக்கினத்திற்கு விசேஷ தன்மை உண்டு.

தனு இராசியின் சின்னம் வில்லைக் கையிலேந்தி குதிரைமேல் ஏறிய பாதி மனிதன். எனவே மற்றவரை அடக்கி ஆளும் திறமையும் திராணியும் உடைய ராசி என்று கருத வேண்டும். மிகவும் உயர் பதவி வகிக்கும் அநேகர், அரசாங்க அதிபர், நீதிபதிகள், கல்வித்துறை உயர் மட்ட நிர்வாகிகள், கணக்கர் இன்னும் அநேக துறையில் தொழில் புரியும் பலர் இந்த லக்கினத்தில் பிறந்தவர்கள்.

இவர்களிடம் வியக்கத்தக்க ஆற்றலும், அறிவும், இருப்பதால் இவர்கள் நூதனமான முறையில் முன்னேற்றமடைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கிறார்கள். இவர்கள் எங்கேயோ இருந்து கொண்டு எங்கேயோ குறி வைத்திருந்து சந்தர்ப்பம் வரப் பயன் படுத்தி வெற்றி காண்பார்கள். இவர்கட்கு பக்குவமடைந்த அறிவு இருப்பதால் எதிர்கால உயர்ச்சியும், இடை இடையே மனதில் தட்டுப்படுவது உண்டு. தெய்வ பக்தி, நீதிக்கு கட்டுப்படல், தர்மசிந்தனை, கபடமற்ற தூய மனம், பெருந்தன்மை, கடமை உணர்ச்சி, நேர்மை இவைகள் இவருடைய பண்புகள். இவர்கள் நல்லவர்கள் என்பதால்தான் இவர்களுக்கு மதிப்பு. சந்தேகமின்றி இவர்கள் மற்றவரை அடக்கி ஆளவே பிறந்தவர்கள். இந்த லக்கினத்திற்கு சுபர்கள், சூரியனும், செவ்வாயும். இவர்களின் திசைகள சோபனமானது. சாதகரை உயர்த்தும். தனத்தைக் கொடுக்கும். அசுபர்கள சனி, சுக்கிரன், சந்திரன். இவர்கள் திசைகள் தீய பலனைச் செய்யும். இங்கு சந்திரன் திசை யோகக்காரர்கள் திசைகளாகிய சூரியனின் திசைக்கும், செவ்வாயின் திசைக்கும் இடையே வருவதால் இவர் திசை அவ்வளவு கோரமானதல்ல. ஆனால், சுக்கிரன் தீய கிரகமே. நடுநிலையிலுள்ள வியாழன், புதன் திசைகள் சமபலனைச் செய்யும். ஆனல் புதன் விசேஷமாக பெரும் பலனைச் செய்யும் இவர் சாதகத்தில் சூரியனுடன் கூடியிருப்பின். ஆகவே, இந்த லக்கினத்திற்கு மிகவும முக்கியமான கிரகங்கள் செவ்வாய், சூரியன், புதன் ஆகியவையாம். சூரியன் பாக்கியத்துக்கும் புதன் தொழிலுக்கும் அதிபதிகள். இவற்றினை பொறுத்தே சாதகம் வலுவடைகிறது.

ராஜயோகம்: சூரியனும், புதனும் தத்தம் வீட்டில் இருந்தாலும் அல்லது சேர்ந்து 9ல் அல்லது 10ல் இருந்தாலும் அல்லது பரிவர்த்தனமாக சூரியன் 10இலும் புதன் 9இலும் இருந்தாலும் முதல் தரமான இராஜயோகம் உண்டாகின்றது. அதேவிதம் செவ்வாயும் புதனும் 5-10ல் தனித்தனியாக இருந்தாலும் இருவரும் சேர்ந்து 5-10ல் இருந்தாலும் ஒருவரை ஒருவர் பார்த்தாலும், பரிவர்த்தனமாக இருந்தாலும் இராஜயோகமுண்டு.

மேலும் செவ்வாயும், புதனும் சேர்ந்தாலும் சம்பந்தம் பெற்றாலும் (பார்வை சேர்க்கை பரிவர்த்தனம்) அல்லது சுக்கிரனும், புதனும் சேர்ந்தாலும் சம்பந்தம் பெற்றாலும், முன் கூறியஇராஜயோகத்தை இந்த இருயோகங்களும் வலுவாக்குகின்றன. இவ்வித யோகங்கள் மூன்றும் ஒரு சாதகத்தில் இருப்பின் சாதகர் மற்றவர்களை விட திறமையுடையவர் ஆவார்.

தனயோகம்: சூரியன், செவ்வாய், சனி, சுக்கிரன் ஆகியவை தனயோகத்தை உண்டாக்கும் கிரகங்கள். சூரியனும், சுக்கிரனும் தத்தம் வீட்டில் 9-11ல் இருந்தாலும் அல்லது இரண்டும் சேர்ந்து 2-9ல் இருந்தாலும் அல்லது பரிவர்த்தனமாக வீடுமாறி 9-11ல் இருந்தாலும் தனயோகம் உண்டு. சூரியனும் சனியும் தத்தம் வீட்டில் 2-9ல் இருந்தாலும் அல்லது சேர்ந்து 2-9ல் இருந்தாலும் ஒன்றை ஒன்று பார்த்தாலும் அல்லது பரிவர்த்தனமானாலும் தனயோகம் ஏற்படுகின்றது. இவ்வித யோகம் சாதகரை மெச்சத்தக்க தனவானாக்கிவிடும். செவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயும், சூரியனும் சேர்ந்தாலும் ஒருவரை ஒருவர் பார்த்தாலும், அல்லது செவ்வாயும், சனியும் சேர்ந்து 2, 9, 5, 11ல் இருந்தாலும் செவ்வாயும், சுக்கிரனும் சேர்ந்து 5ல் 11ல் 9ல் இருந்தாலும் அல்லது சூரியன், செவ்வாய், சனி ஆகியவை 2, 5, 9ல் சேர்ந்தாலும் சாதகர் பெரும் தனவானுவார். இந்த லக்கினத்திற்கு சுக்கிரனும், சந்திரனும் சேர்ந்து 6ல் அல்லது 8ல் இருந்தாலும் அல்லது பரிவர்த்தனமானுலும் 6ல் 8ல் அல்லது சுக்கிரன் 6ல் சந்திரன் 12ல் இருந்து ஒன்றை ஒன்று பார்த்தாலும் விபரீத ராஜயோகம் ஏற்படும். சுக்கிரன் இந்த லக்கினத்திற்கு தீய கிரகமாவதால் இது 12ல் இருப்பது அல்லது 6ல் இருப்பது நல்லது. கெட்டவன் கெட்ட இடத்தில் இருப்பது நன்மையைத்தரும்.

மகாபுருஷ யோகம்: இந்த லக்கினத்திற்கு புதன் 10ல் இருப்பது சிரேஷ்டமான யோகம். இது சாதகரைப் பெரும் ஆற்றலும், அறிவுமுள்ள உத்தமனுக்கும். புதன் 7ல், வியாழன் 1ல், 4ல் இருப்பது குறைவான யோகத்தையே காட்டும். ஆயினும் இவர்கள் சாமான்யமானவர்களல்ல. சுக்கிரன் 4ல் உச்சம் பெறுவது பெரும் யோகத்தை செய்யுமென்று சொல்ல இடமில்லே. இத்திசை வருங்காலத்தில் பலவித தீங்குகளேச் செய்யும். வியாழன் பலம் பெற்ருல் நீடிய ஆயுளேக் கொடுக்கும். சாதகர் தர்ம சீலராக இருப்பார்.

ஆனுல், நான் முன் கூறிய தனயோகமோ, ராஜயோகமோ ஒருவர் சாதகத்தில் இருப்பின் சாதகர் நிச்சயமாக யோகத்தை அனுபவிப்பார். இவ்வித யோகங்கள் 6, 8, 12ம் இடங்களில் இருந்தால் பலன் செய்யாது. 1, 4, 7, 10, 5, 9 ஆகிய இடங்களில் ஏற்பட்டால் யோகம் பலனேக் கொடுக்கும். மேலும் தனுலக்கினத்திற்கு செவ்வாய் 11ல், சுக்கிரன் 12ல் இருந்தால் சாதகர் தேடிய பொருளே அழித்து விடுவார்.

இந்த தனு லக்கினத்தில் பிறந்தவர்கட்கு 9, 10, 11ம் வீட்டதிபதிகளான சூரியன், புதன், சுக்கிரன் முக்கியமான கிரகங்கள் என முன் கூறினேன். கதிரவன் மண்டலத்தில், சூரியனுக்கு அருகே புதனும், அடுத்து சுக்கிரனும் இருப்பதால், சூரியனுக்கு முன்னும் பின்னுமாக நெருங்கி இம் மூன்று கிரகங்களும் ராசி மண்டலத்தில் சஞ்சரிக்கின்றன. இதனுல் சூரியனும், புதனும் அநேகமான தனு லக்கின சாதகங்களில் கூடியிருப்பதைக் காண்கின்ருேம். தனு லக்கினத்திற்கு மட்டும்தான் இவ்வித புதன், சூரியன் சேர்க்கை முதல்தர ராஜயோகத்தை உண்டாக்கும். ஆகவே, இவர்களின் அதிர்ஷ்டம் இந்த சூரியனில் தான் தங்கியிருக்கின்றது.

தனு லக்கின சாதகருக்கு கூடிய யோகத்தைச் செய்யக் கூடிய கிரகம் சூரியன். ஆகவே, சூரியன் திசை நடக்கும் பொழுது சாதகர் உயர் பதவியையோ, அந்தஸ்தையோ அடைகின்ருர். இத் திசை இவர் சீவிய காலத்தில் வருவதே ஒரு வரப்பிரசாதம். இவர் பாக்கியநாதனின் திசையில் கூடுதலான பணத்தைத் தேடிக்கொள்கின்ருர். சாதகர் இக்காலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் சகல பாக்கியங்களையும், போகங்களையும் அனுபவிக்கிறார். பணம் சிலரைத் தேடி வருகிறது. இவர் தொழில் விருத்தியடையும். சுய தொழிலில் ஈடுபட்டவர்களும் பல புதிய தொழில்களை ஆரம்பிப்பர். அதன் மூலம் லாபம் அடைவர். சாதகரின் திறமை இத் திசையில் உச்சக் கட்டத்தில் இருக்கும். இவர் சொல்லை எல்லோரும் ஏற்பர். இவருக்கு ஆள் அடிமை உண்டு. இவர் காணி, பூமி, வாகனம் ஆகிய எல்லா வசதிகளுடனும், குடும்ப சுகத்துடனும் வாழ்வார்.

சூரியன் 1, 4, 7, 10, 5, 9ல் இருப்பது கூடுதலான பலனைத் தரும். 8, 12ல் இருந்தால் பலன் கெட்டுவிடும். புதனுடன் சேர்ந்த சூரியன் திசை உன்னதமான ராஜயோகத்தை வழங்கும். எதிர்பாராத உயர் பதவிக்கு இட்டுச் செல்லும். இத் திசை ஆரம்ப திசையாகில் இவர் பிதாவுக்கு யோகமுண்டு. அதிக பொருளைத் தேடுவார். சாதகர் சௌகரியமான வாழ்க்கையை வாழ்வார். இவர் முன் கேது திசை, சுக்கிர திசைகளில் கஷ்டப்பட்டவராகில் சூரியன் திசை இவரை உயர்த்திவிடும். பணத்தையும் கொடுக்கும். இவர் விவாகமாகும் காலத்தில் இத் திசை வந்தால் உயர்ந்த இடத்தில் பெண்ணையும், பொருளையும் தேடிக் கொள்வார். இவர் வாழ்க்கையை அசைவில்லாத முறையில் அமைத்துக் கொள்வார். இவருக்கு அடுத்துவரும் சந்திர திசையும், அடுத்த செவ்வாய் திசையும், இவருக்கு 23 வருடத்திற்கு உயர்ந்த யோகத்தைச் செய்யும். சாதகர் சந்திர திசையில், சுக்கிர புத்தியில் பொருள் நஷ்டமோ, சஞ்சலமோ அடைவார். சந்திரதிசை இரு யோகக்காரர் திசை. தனு லக்கினத்திற்கு தீயவர்கள் சனியும் சுக்கிரனும் என்று கூறினேன். ஆகையால் சனி திசையைக் காணும் தனு லக்கின சாதகர் தங்கள் சனி எப்படிப்பட்ட கிரகம் என்பதை அறிந்து கொள்வது மிகவும் பிரயோசனமாகும். சனி, சூரியன், செவ்வாய் சம்பந்தம் பெற்றால் (சேர்க்கை பார்வை) ஒருவாறு பலன் நன்மையாக மாறும் அல்லாவிடின் சாதகர் சற்று ஒதுங்கி பொறுமையுடன் புதன் திசையை எதிர்பார்த்து நிற்பது நல்லது. மேலதிகாரிகளுடன் எதிர்ப்பது உசிதமில்லை. இந்தச் சாரமில்லாத திசையில் சாதகர் கடின உழைப்பால் மட்டும் முன்னேற்றம் காண முடியும்.

'தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்' என்பதை ஞாபகத்தில் வைக்கவும். இதில் எல்லாம் சுலபமாக கிடைப்பதற்கில்லை. சில சமயம் இச்சனி பல வித இடைஞ்சல்களையும், பகையையும் குடும்பப் பிணக்குகளையும், தன விரயத்தையும் உண்டாக்கி சாதகரின் நிம்மதியைக் கெடுத்து விடும். மேலும் சனி திசையில் ஒதுங்கியிருந்த ஒரு தனு லக்கின சாதகர் புதன் திசையில் பிரபல்யமடைகின்றார். புதன் சூரியனுடன் சேர்ந்திருந்தால் இவர் இப்போ முன்னணியில் நிற்கின்றார். இவ்வித புதன் 10ம் வீட்டில் உச்சம் பெற்று நின்றால் சாதகருக்கு மகாபுருஷயோகமும் ஏற்படுகின்றது. ஆகவே சாதகர் இத்திசையில் உன்னத உயர் இடத்தை பிடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவார். சகல வித ஐஸ்வரியத்தையும் அனுபவிப்பதுடன் உலக சௌகரியங்களையும், உலக சுகங்களையும் அனுபவிக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. தனிமையாக இருந்த புதனும் 3, 8, 12ல் இல்லாமல் வேறு இடங்களில் இருந்தால் மெச்சத்தக்க சுப பலனைச் செய்யும், சனி திசையைப் பார்க்கிலும் புதன் திசை எவ்வளவோ மேலானது. ஆகவே பலவித கஷ்டங்களையும், தோல்விகளையும், துன்பங்களையும் அனுபவித்து களைத்த சனித் திசைக்காரர் புதன் திசை வந்ததும் புத்துணர்ச்சியுடன் புதிய சூழ்நிலையில் ஆடம்பர வாழ்க்கையை ஆரம்பிக்கின்றார். சிலரின் புத்தித் திறமையும், அறிவும் ஆற்றலும் இக்காலத்தில் உச்ச நிலையில் இருக்கும்.

முன்னை நாள் அமைச்சர் ஒருவர் தனுவில் பிறந்தவர், புதன் திசையில் பெரும் புகழை நிலைநாட்டினார். இத்திசை ஆரம்ப திசையாகில் சாதகரின் கல்விக்குப் புதன் அனுகூலமாக இருக்கும். ஆனால், கேது திசை சுக்கிர திசைகளில் தாழ்ந்து சூரிய திசை வர முன்னுக்கு வந்து விடுவார். அவருக்கு பின் வயதில் சௌகரியமான வாழ்க்கை அமையும். இங்கு கேது திசையைப் பற்றி வர்ணிக்க வேண்டியதில்லை. கேது தீய பலனையே செய்யும். தனு லக்கின சாதகருக்கு சுக்கிரன் மட்டும் அதிக தீங்கை செய்வதாக சோதிட கிரந்தங்கள் கூறுகின்றன. பாலியத்தில் அதிக தீங்கை செய்வதாக இல்லை. ஆனால், பெரும் புகழையும், அந்தஸ்தையும் அனுபவித்த பலர் சுக்கிரனில்வீழ்ச்சி அடைந்ததை காண்கின்றோம். தனு லக்கின சாதகர் கட்டாயம் இந்த சுக்கிர திசையைப் பற்றி நன்கறிந்திருப்பது நல்லது. கவலைப்பட வேண்டாம். எதிரே பாக்கியநாதன் சூரியனின் திசை வரப்போகிறது.படித்து ஆயுத்தம்செய்யவும் பொருளைத் தேடி விடுவீர்கள். தனயோகத்தின் கீழ் சுக்கிரன் சூரியனுடன் சேர்ந்து தனயோகத்தை செய்வான் என்றாலும் திசைகளின் கீழ் சுக்கிரன் பெரும் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் கொடுப்பான். ஆகவே,இனிமையாக இருந்த சுக்கிரன் திசை ஒரு தனு லக்கின சாதகருக்கு தீய பலனையே செய்யும் என்று அறிக. சுக்கிரன் 6, 8, 12ல் இருந்தால் அல்லது நீசமடைந்தால் பலன் கெடுதியாக இராது. சூரியன் இந்த லக்கினத்திற்கு யோகவான்,பாக்கியநாதன். ஆகவே, ஒருவர் சாதகத்தில் இந்த சூரியன் 11ல் இருந்தால் அவர் நீசமடைவார். அவ்வித சூரியன் பலம் குறைந்து போவதால் விரும்பிய பலனைச் செய்யாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரம்

மகர இராசி சனியின் வீடு. ஆகவே இதன் குணங்களில் சில சனியின் தனித் தன்மையைக் கொண்டிருக்கும்.கிரகங்களில் ஆகத் தீய கிரகம் சனி என்றும் உலகில் வெறுக்கத்தக்கவை அனைத்தும் சனிக்கே உரியவை என்றும் சோதிட வித்வான்கள் முடிவு கட்டிவிட்டார்கள். ஆயினும் சனியுடைய உயர்ந்த தன்மைகள் பல உள. மனிதனின் விடா முயற்சி, சகிப்புத் தன்மை, துன்பங்கள், துயரங்கள் எதிர் நோக்கும் ஆற்றல், எதையும் நிதானமாக செய்யும் மனோபாவம் ,முன் எச்சரிக்கையுடன் எதையும் சாதிக்கும் திறன், தன்னை நசிந்து கொடுக்கும் தன்மை, சங்கடங்கள் வரும் கால் எதிர்க்காது விலகிக் கொள்ளும் தீர்க்க தரிசனம், அத்துடன் மனதில் ஒருவித ஏக்கம் எப்போதும் இருத்தல், இவை எல்லாம் சனியின் உயர் குணங்களில் சில. அத்துடன் எவ்வித தொழிலையும் சாமர்த்தியமாகச் செய்யும் ஆற்றல் இவருக்கு உண்டு. அது மட்டுமல்ல; எவ்வித கஷ்டத்தையும் சமாளிக்கவல்ல நம்பிக்கையுடையவர் இவர். இவ்வித சாதகர் பணவிஷயத்தில் மிக மிக சிக்கனத்தை கையாள்வதால் இவரை லோபி என்றும் சிலர் நினைக்கின்றார்கள். பல தடவை யோசித்தபின்தான் ஒரு விஷயத்தில் இவர் இறங்குவார். இவர்களில் அநேகர் உயர் பதவியை வகிக்கின்றார்கள். உண்மையில் இந்த லக்கினத்தில் பிறந்தவர்கள் அதிர்ஷ்டசாலிகள். இந்த லக்கினத்திற்குச் சுபர்கள் சுக்கிரனும்,புதனும். இவர்களின்திசைகள் மிக மிக சோபனமானவை.சாதகர் சகலவித சுகபோகங்களையும் அனுபவிப்பார். அசுபகிரகங்கள் வியாழன், சூரியன், செவ்வாய். இத் திசைகள் கஷ்டநஷ்டத்துடன் கூடியவையாக இருக்கும். நடுநிலையிலுள்ள சனி, சந்திரன் ஆகிய திசைகள் சம பலனைச் செய்யும். ஆனால், புதன்சேர்க்கையோ சுக்கிரன் சேர்க்கையோ ஏற்படில் சோபனமான பலனைச் செய்யும். இந்த மகர லக்கினத்திற்கு மிக மிக முக்கியமான கிரகம் சுக்கிரன். இவர் 5ம் 10ம் வீடுகளுக்கு அதிபதியாவதால் இவர் தனிமையாகவே பெரும் யோகத்தை சாதகருக்கு கொடுக்க வல்லவர். ஆகவே சுக்கிரன் சாதகத்தில் மிக மிக பலம் வாய்ந்ததாக இருக்கவேண்டியது. இவர் 6,8,12ல் இருந்தால் சாதகர் அற்ப சொற்ப பலனைத்தான் எதிர்பார்க்கலாம்.

சுக்கிரனுக்கு அடுத்தபடி யோகத்தை செய்யவல்ல கிரகம் புதன். இவர் 9ம் வீட்டுக்கு அதிபதி, பாக்கியநாதன். ஆகவே இந்த இரு கிரகங்களும் புதனும் சுக்கிரனும் ஒன்பது பத்தாதிபதிகளாகி சேர்ந்தால் ஒரு மகா உன்னத இராஜயோகத்தை உண்டாக்கும். கதிரவன் மண்டலத்தில் சூரியனுக்கு அடுத்து புதனும் அதற்கு அடுத்து சுக்கிரனும் அதற்கு அடுத்து பூமியும் இருப்பதால் ராசி சக்கரத்தில் இவை நெருங்கியே சஞ்சரிக்கும். ஆகவே மகர லக்கின சாதகருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகமாக இப் புதனும், சுக்கிரனும் சேர்ந்திருப்பதைக் காண்கின்றோம். ஆகவே, இந்த லக்கின சாதகருக்கு இப் பெரிய யோகம் கிடைக்கின்றது. இவ்விதம் புதன், சுக்கிரன் ஒன்பது பத்தாதிபதிகள் சேரும்பொழுது மகர லக்கினத்திற்கு ஒன்பதாம் வீடாகிய கன்னிக்கு ஒன்பது பத்தாதிபதிகளாக இதே புதனும், சுக்கிரனும் வருகிறார்கள். அதனால் இந்த ஒரே யோகம் இரண்டு இராஜ யோகத்தை ஏற்படுத்துகின்றது. இன்னும்பத்தாம்வீடு துலாவுக்கு ஒன்பது பத்தாதிபதியாவது புதனும் சந்திரனும். ஆகவே புதனும் சுக்கிரனும் சேர்ந்திருக்கும் மகர லக்கின சாதகத்தில் சுக்கிரனும் சேர்ந்தாலோ அவர்களைப் பார்த்தாலோ 3வித இராஜ யோகங்கள் இவ்வித சாதகத்தில் அமையும். அவ்வித யோகவான் சாமானியமானவரல்ல. அவருக்கு ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது.

தனயோகம்: மகர லக்கின சாதகருக்கு தனயோகத்தை உண்டாக்கும் கிரகங்கள்: சுக்கிரன், புதன், சனி, செவ்வாய்ஆகியவையாம். இவற்றில் புதனும், செவ்வாயும் அல்லது புதனும் சனியும் சேர்ந்து 2,9,11ல் இருந்தால் அல்லது சுக்கிரனும் சனியும் அல்லது சுக்கிரனும் செவ்வாயும் சேர்ந்து2,9,5,11ல் இருந்தாலும் அல்லது சனி, செவ்வாய்,புதன் இவர்கள் சேர்ந்து 2,9, 11ல் இருந்தாலும் தனயோகம் உண்டாகும். இவ்வித கிரகங்கள் 6, 8, 12ல் இல்லாது 1, 4. 7, 10 என்ற வீடுகளில் இருந்தாலும் சாதகர் மதிக்கத்தக்கவராவார். மேலும் லக்கினாதிபதி சனி 10ல் உச்சம் பெறுவது விரும்பத்தக்கது. சாதகர் எதையும் சாதிக்கவல்லவர், திறமைசாலி, மகாபுருஷயோகமுண்டு. வியாழன் இந்த லக்கினத்திற்கு சுபராக கருதப்படவில்லை.

ஆகவே,இவர் உச்சம் பெற்றால் பெரிய கஷ்டத்தை அவர் திசையில் கொடுப்பார். மகரலக்கினத்திற்கு சனி லக்கினத்தில் செவ்வாய் 4ல் சுக்கிரன் 10ல் இருப்பது விசேஷ பலனைக்கொடுக்கும். சாதகர் சகல சம்பத்துக்களையும் பெறுவார். சூரியன் அட்டமாதி பதியாயினும் இவருக்கு அட்டமாதிபதி தோஷமில்லையாகையால் இவர் புதன் சுக்கிரனுடன் சேர்வது நன்மையே.

சுக்கிரதிசை: மகரலக்கின சாதகருக்கு சுக்கிரனே மகா உன்னத யோககாரகன். இவரின் திசையை அனுபவிக்க கிடைத்த சாதகன், அதிர்ஷ்டசாலி என்பதில் சந்தேகமில்லை. இவர் ஐந்து பத்தாதிபதியாவதால் இவர் புத்தியையும், பதவியையும் கொடுப்பார். சுக்கிரன் சுகவாழ்வுக்கு மிகவும் அவசியமான கிரகம். இவர் பலம் பெற்று 1, 4, 7, 10, 5, 9ல் இருந்தால் சாதகர் பல துறைகளில் பணம் தேடுவார். சுக்கிரன் ஐம்புலன்கட்கும் இன்பத்தைக் கொடுக்கும். சுகபோகங்கட்கு சாதகன். ஆகவே, சுக்கிரன் சகல சுகபோகங்களையும் அஷ்ட ஐஸ்வரியத்தையும் வாரி வழங்குவார். இத்திசை நடக்கும் காலத்தில் சாதகருக்கு ஒருவித வசீகரத்தன்மையும், திறமையும், புத்தியுக்தியும் இருப்பதால் இவர் எல்லோரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் கவர்ந்து விடுகின்றூர். எல்லோரும் இவரை நேசிப்பர். சாதகர் லௌகீக வாழ்க்கையில் பற்றுடையவராகையால் இவற்றை அனுபவிக்க வசதியும், வாய்ப்பும் கிடைக்கின்றது. இவர் சொந்தத் தொழிலில் ஈடுபட்டால் நிச்சயமாக இவர் தொழில் விருத்தியாவதுடன் பேரையும், புகழையும்,பணத்தை யும் தேடிக்கொள்ளுகின்றூர். இவருக்கு காணி, பூமி, வீடு, அன்பு நிறைந்த மனைவி, மக்கள் எல்லாம் கிடைக்கின்றன.

இந்த சுக்கிரனுடன் புதன் சேர்ந்து நின்றுல் பலன் இன்னும் விசேஷமாக நடப்பதுடன் உயர் பதவி, பிரதிநிதித்துவம் சந்தோஷ வாழ்க்கை, அதிகாரம் இவை எல்லாம் இவரைத் தேடி வரும். இவ்வித சுக்கிரதிசை ஆரம்ப திசையாக வந்தால் இவர் பிதாவுக்கு யோகம் ஏற்படும். சாதகர் சுகமான வாழ்க்கையை அனுபவிப்பார். அடுத்து வரும் திசைகள் மட்டமானவை ஆகையால் சாதகர் முன்னேற்றம் கம்மியாகவே இருக்கும். மகர லக்கின சாதகருக்கு புதன் திசையும் யோகத்தைச் செய்யக் கூடியது.

புதன்திசை: மகரலக்கின சாதகருக்கு புதன் ஒன்பதாதிபதி பாக்கியநாதன். இவர் திசை மிகவும் சோபனமானதாகும். இவர் திசையில் சாதகர் பொருள், பதவி, அந்தஸ்து, குடும்ப சுகம், காணி, பூமி இவ்வித சகல ஐஸ்வரியங்களையும் லட்சுமி கடாட்சத்தையும் திரட்டிக் கொள்ளுகிறூர். ஒருவர் இத்திசை ஆரம்பத்தில் பிறந்தால் சகல சுகங்களையும் அனுபவிப்பார். படிப்பில் மிகவும் சாமர்த்தியம் காட்டி விடுவார். இவர் பிதாவுக்கு யோகம். அவரும் முன்னுக்கு வந்துவிடுவார், பணத்தையும் தேடிவிடுவார். இவ்வித திசையில் சாதகர் ஆரம்பித்தால் வருக்கு வயது 44வரை ஒரே யோகத்தை தொடர்ச்சியாக அனுபவித்து பிரபல்யம், தனம், பதவி, ன்பமான வாழ்க்கை போன்ற எல்லா சுகத்தையும் பெற்று விடுவார். இவருக்கு கேது திசையும், சுக்கிர திசையும் தொடர்ச்சியாக அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும். மேலும் புதன் சுக்கிரனுடன் சேர்ந்திருந்தால் சாதகர் மேலான ஐஸ்வரியத்தை அனுபவிப்பார். கேது திசை இரு யோககாரக கிரகங்களின் திசைகளுக்கு நடுவே வருவதால் அவ்வித கேதுவும் துன்பம் செய்வதுமில்லை. இவருக்கு வீழ்ச்சியுமில்லை. பத்தாமிடத்தில் சுக்கிரனும், புதனும் சேர்ந்திருந்தால் சாதகர் புதன் திசையிலேயே உயர் இடத்தை பிடித்திடுவார். புதன் பணம் சம்பாத்தியம் செய்ய உகந்த கிரகம். மற்றவர்கட்கு தெரியாமலே இவர் பணத்தை பெருக்கிக் கொள்வார். இவர் வியாழ திசையில் பிறந்தவராக இருந்தால் வியாழதிசை சாரமற்றது, சனி திசையும் மட்டமானது. ஆகவே, புதன் வரவும் சாதகரின் ஒளித்திருந்த திறமைகள் வெளிப்பட்டு புதிய மனிதனுகிறூர். ஆனுல், இவர் சனி திசை துவக்கத்தில் பிறப்பது தான் விசேஷம். சனியில் கல்வி கற்று புதனில் மேற்படிப்பு முடித்து தொழிலில் மேற்படிகள்ஏறி கேதுவில் பல அனுபவம் பெற்று சுக்கிர திசையில் உச்ச நிலைக்கு வந்து விடுவார். சுக்கிர திசையில் இவர் உன்னத நிலையிலிருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார். சூரிய திசை இந்த லக்கின சாதகர்கட்கு மட்டமான பலனையே செய்யும். சந்திர திசை மாரக தோஷமுள்ளது. சூரிய திசையில் புதன் புத்தி எதிர்பாராத கஷ்டத்தைக் கொடுக்கும். செவ்வாய் திசையில் பெரிய பலனை எதிர்பார்க்க முடியாது. இராகு திசை இந்த லக்கினத்திற்கு மந்தமான திசையாகவே இருக்கும்.

சுக்கிரனுடன் சேர்ந்தால் இராகு பொருளைக் கொடுப்பான். அல்லது ஏற்றம் இறக்கம் நிறைந்ததாகவே இருக்கும். மகர லக்கின சாதகருக்கு வியாழன் மூன்று பன்னிரெண்டாதிபதி, என்ன யோகத்தை செய்வார். ஏதோ இராகுவின் கஷ்டத்தின் பின் ஒருபடி ஏறி சொற்ப மதிப்பைப் பெறலாம். தொழில் கிடைக்கும். சமனான பலன் உண்டு. வியாழன் 12ல் இருந்தால் அல்லது 8ல் 3ல் இருந்தாலும் ஒருவாறு சொற்ப பொருளைத் தேடிக் கொள்வார். இந்த லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு மூன்றாதிபதி வியாழனும் பதினோராதிபதி செவ்வாயும் தீய கிரகங்கள் ஆகையால் இவர்கள் திசைகளை அனுபவிக்கும் மகர லக்கின சாதகர் புத்தியாக நடப்பது நல்லது. சமூகத்தினின்றும் விலகிக் கொள்வதும் நல்லது. திசைகளைப் பற்றி கூறினேன் அல்லாது புத்திகளைப் பற்றிக் கூறவில்லை. ஆகவே, மகர லக்கின சாதகர்கள் எந்தத் திசையிலும் வியாழன், செவ்வாய் புத்திகளில் பணத்துடன் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் செய்வது கவனம்.

# கும்பம்

கும்ப இராசி சனியுடைய வீடு. இவர், லக்கினாதிபதி யாவதுடன் ஆயுள்காரகனும் கூட. சனியுடைய வீடு லக்கினமாவது கஷ்டம் நிறைந்த வாழ்க்கையைக் கொடுப்பதாக கருத வேண்டியிருக்கிறது. இந்த லக்கினத்தில் பிறந்தவர்களுக்குப் பலவித தடைகளும், இன்னல்களும் எதிர்நோக்கி நிற்கும். ஆனாலும், இவற்றைச் சமாளிக்கும் திறமை சாதகருக்குண்டு. சிலருடைய விடாமுயற்சி, பொறுமை, ஊக்கம், உற்சாகம் இவையெல்லாம் சேர்ந்து எவ்வித கஷ்டம் நேர்ந்தாலும் எதிர்த்து நின்று வெல்லும் வைராக்கியம் இவர்களிடம் உண்டு. தன்னை ஒறுக்கும் தன்மையுமுண்டு. மற்றவர்களுக்காக எவ்வித கஷ்டமும் அனுபவிக்க விரும்பும் மனப்பான்மை இந்தச் சனியுடைய வீட்டை லக்கினமாகக் கொண்டவர்களுக்குமுண்டு. இந்த ராசியின் சின்னம் நிறைகுடம். என்றாலும் வாழ்க்கை ஏற்றம் இறக்கம் உள்ளதாகத்தான் இருக்கும். ஏதோ இந்த லக்கினத்திற்கும் மகர லக்கினக்காரரைப் போல புதன், கேது, சுக்கிர திசைகள் தொடர்ச்சியாகப் பெரும் யோகத்தைச் செய்வர். அதிலும் சுக்கிரன் தனியே விசேஷ பலனைச் செய்யக்கூடிய வலிமையுடையவர். இவர் திசையை அனுபவிக்கக் கொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த கும்ப லக்கின சாதகர் அதிர்ஷ்டசாலி. எல்லா கும்ப லக்கின சாதகருக்கும் இந்த வாய்ப்பு கிடைப்பதில்லை.

கும்பலக்கின சாதகருக்கு 3,6,8,11ம் வீட்டதிபதிகள் செவ்வாய், சந்திரன், புதன், வியாழன் ஆவர். புதன் ஐந்தாதிபதியாவதால் இவருக்கு அட்டமாதிபதி தோஷமில்லை. ஆகவே, சந்திரனும், வியாழனும் தான் தீய பலனைத் தங்கள் திசைகளில் செய்யக்கூடியவர்கள். செவ்வாய் மூன்றும் வீட்டதிபதியாலும் இவர் பத்தாம் வீட்டிற்கு அதிபதியாகி ஒன்பதாதிபதி சுக்கிரனுடன் சேர்ந்தால் முதல்தர ராஜயோகத்தை உண்டாக்குவர். சுக்கிரன் 4ம், 9ம் வீட்டதிபதியாவதால் இவர் தனிமையாகவே யோகம் செய்ய வலிமையுண்டு. மேலும் செவ்வாய் புதனுடன் சேர்ந்தாலும் ராஜயோகம் உண்டாகும். இந்த லக்கினத்திற்கு சுக்கிரன் யோககாரகன். ஆகவே, சுக்கிரனின் பலத்தைக் கொண்டே இச்சாதகரின் வாழ்க்கையை நிர்ணயிக்க வேண்டியது. புதனும், சுக்கிரனும் கெட்டுவிட்டால், 6, 8, 12ல் இருந்தால் சாதகம் பலம் அற்றதாய் விடும். சுக்கிரனும் செவ்வாயும் பரிவர்த்தனமாக 9— 10ல் இருந்தால் அல்லது சேர்ந்து 9 — 10ல் இருந்தால் அல்லது ஒருவரையொருவர் பார்த்தால் சாதகர் சாமான்ய மனிதரல்ல. விசேஷ திறமையும் அறிவும் உள்ளவர். பேர் புகழுடன்தான் இவர்கள் சீவிப்பார்கள். 1, 4, 7, 10, 5, 9ல் இவ்வித யோகம் ஏற்பட்டாலும் யோகம் வேலை செய்யும். சுக்கிரன் தனிமையாக 1, 9, 4, 7, 10ல்இருந்தாலும் காணி, பூமி, தனம் இவற்றுடன் கூடியவராக சாதகர் இருப்பர். சுக்கிரன் நீசமடைந்து 8ல் இருந்தால் சாதகர் துர் அதிர்ஷ்டசாலியென்றே கருத வேண்டும். புதன் அடுத்தபடியாக முக்கியமான கிரகம். இவர் ஐந்தாதிபதி. புத்தியுக்தி அறிவுக்கு உரியவர். இவர் கெட்டால் மந்த புத்தியுடையவராக சாதகர் இருப்பார். செவ்வாய் சுக்கிரன், செவ்வாய் புதன் சேர்க்கையால் அல்லது பார்வையால் அல்லது பரிவர்த்தனமாக இருத்தலால் ராஜயோகம் ஏற்படும் என்று கூறினேன். இவ்வித யோகம் சாதகத்தில் அமைந்து அத்துடன் புதன், சந்திரன் சேர்ந்தாலும் அல்லது சந்திரன், சூரியன் சேர்ந்தாலும் முன் கூறிய இராஜயோகத்தை இவ்விரண்டு யோகங்களும் வலுப்படுத்தும். இவ்வித 3 யோகங்களையும் கொண்ட சாதகர் சந்தேகமில்லாது சிரேஷ்டர் எனலாம். முன்னைநாள் பிரதமர் ஒருவர் கும்பலக்கினம். சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன் ,10ல் இருந்ததாகக் கேள்வி. புதன் திசை, சுக்கிரதிசை இவ்விரண்டும் சாதகருக்கு மிக அனுகூலமானவை மட்டுமல்ல, மிக்க சோபனமானவைஎன்றும் கூறலாம். அடுத்தபடியாக சமநிலையிலுள்ள சனி, சூரியன், செவ்வாய், இவர்கள் திசைகள் தனிமையாக மட்டமான பலனே கொடுப்பர், ஆனால், சுக்கிரனுடன் அல்லது புதனுடன் சேர்ந்தால் இம்மூவர் திசைகளும் விரும்பத்தக்க சகல நல்ல பலன்களையும் கொடுப்பர். இப்போது தனயோகம் உண்டாக வேண்டில் சுக்கிரன் தனிமையாகவே பொருளைக் கொடுப்பார். இவர் பாக்கியநாதன். இவரும் புதனும் சேர்ந்தாலும் தனயோகம் உண்டாகும். ஆனால், சுக்கிரனும், வியாழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் 2, 9, 11ல் சேர்ந்தாலும் அல்லது வியாழனும் புதனும் 2, 5, 9, 11ல் சேர்ந்தாலும் தனயோகம் உண்டாகும். மேலும் கும்ப லக்கினத்திற்கு லக்கினத்தில் சனி 4ல் சுக்கிரன், 10ல் செவ்வாய் இருந்தால் மகாபுருஷயோகம் உண்டாகும். ஆனல், இவை பலம் குறைந்த யோகமாகவே இருக்கும். இந்த லக்கினத்திற்கு கூடுதலான தீமையைச் செய்யக்கூடியவன் சந்திரனே. ஆகவே, இவர் திசையில் சாதகர் கவனமாக இருக்கவேண்டியது. சந்திரன் 6ல், 8ல் 12ல் இருந்தால் தீயபலன் குறையும்.

கும்ப லக்கின சாதகருக்கு வியாழன் தனலாப (2, 11ம்வீடுகள்) ஸ்தானங்கட்கு அதிபதி ஆவதால் ஏதோ புதையல் கிளம்பக்கூடும் என்று சாதகர் நினைக்கலாம். ஆனல், பலன் விபரீதமாகவே இருக்கும். தொழில் உண்டு. பொறுப்புகளும் செலவும் அதிகம்- கஷ்டம்தான். இப்போது இந்த கும்பலக்கின சாதகருடைய பலன் புதன். சுக்கிரன், செவ்வாயில் தங்கியிருக்கின்றது. இவர்கள் கேந்திரம் திரிகோணம் ஏறி பலமுடன் இருந்தால் லக்கினுதிபதியும் பலம் பெற்றிருந்தால் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவரும் சிரேஷ்டராக மாறி விடுவார். யோக திசைகள் முக்கியம். ஒருவருக்கு சந்திர திசையில் புதன் புத்தியும், புதன் திசையில் சந்திர புத்தியும் பெரும் கஷ்டத்தை உண்டாக்கும், அதே போல சுக்கிர திசையில் புதன் புத்தியும், புதன் திசையில் சுக்கிர புத்தியும் எதிர்பாராத விசேஷ பலனையும் உயர்வையும் கொடுக்கும்.

இப்பொழுது திசைகளைப் பற்றி ஆராய்வோம். கும்ப லக்கின சாதகருக்கு சுக்கிரன் 4ம், 9ம் வீடுகளுக்கு அதிபதியாவதால் இவர் யோககாரகன் ஆகின்ருர். இவர் பாக்கியநாதன். இராஜயோகத்தைத் தனிமையாகவே கொடுக்கவல்லவர். பஞ்சேந்திரியங்களுக்கும் இன்பத்தையும் சுகபோகத்தையும் கொடுக்கவல்ல கிரகம் சுக்கிரனே. ஆகவே, இவர் திசை விசேஷமானதாகையால் எல்லா கும்பலக்கின சாதகருக்கும் அவர் சீவிய காலத்தில் இத்திசை வருவதில்லை. ஆகவே, இத்திசையை அனுபவிக்கக் கிடைக்கப்பெற்ற கும்ப லக்கின சாதகர் அதிர்ஷ்டசாலி. இவர் நாலாம் வீட்டுக்கு அதிபதியாவதால் காணி, பூமி, வீடு, வாகனம் இவைகளையும், சுக சௌக்கிய வாழ்க்கையையும் கொடுப்பார். நாலாம் வீடு சுக ஸ்தானம். ஆகவே, இவரின் திசை சகல போக பாக்கியங்களையும், ஐஸ்வரியத்தையும் கொடுக்கும். சிறந்த இன்பகரமான குடும்ப வாழ்க்கை, அன்பு நிறைந்த மனைவி, மக்கள், ஜன வசீகரம் இவையும் சுக்கிரனுக்குரியது. இச் சுக்கிரன் சாதகத்தில் கேந்திரம், திரிகோணம் ஏறி நின்ருல் உயர் பதவி, செழிப்பான வாழ்க்கை, மதிப்பு, அதிக தனலாபம், புதிய மனை இவைகளைக் கொடுக்கும். புதனுடன் சேர்ந்த சுக்கிரன் பெரும் ஐஸ்வரியத்தைக் கொடுக்கும். செவ்வாயுடன் சேர்ந்த சுக்கிரன் பிரதிநிதித்துவம்,உயர்பதவி, தலைமைப் பீடம் இவற்றைக் கொடுக்கும். கெட்டுப்போன சுக்கிரன் சாதகரையும் கெடுத்து விடும். பெண் மோகத்தினுல் பொருளை அழிப்பதுடன் குடி,கூத்தி இவற்ருல் அழிவு உண்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். மேலும் இத்திசை ஆரம்ப திசையாக இருந்தால் சாதகர் சீவியம் அனுபவிப்பார். ஆனால், யோகம் பிதாவுக்கே. இவரின் சூரிய திசையும் பலன் செய்யும். ஆனால்,சந்திர திசை இவருக்கு தீய பலனையே செய்யும். சுக்கிர திசை நடுவயதில் வருவதுதான் அதிர்ஷ்டம். ஏனெனில் சாதகர் புதன் திசையையும், கேது திசையையும் தொடர்ச்சியாக அனுபவித்தவர். இந்த இரு கிரகங்களும் கும்ப லக்கின சாதகருக்கு மேலான சுப பலனைச் செய்யக்கூடியவர்கள். புதன் கல்வி அறிவுக்கும், பட்டப் படிப்புக்கும் இன்றியமையாத கிரகம். இத்திசையில் மேல் படிப்பு முடித்து கேதுவில் தொழில் அனுபவம் பெற்று சுக்கிரனில் பணம் தேடி தலைமைப் பீடம் ஏறுவது தான் விரும்பத்தக்கது. புதன் திசையில் கல்விமான்களால் மெச்சப்படுதல், நுண் அறிவு,திறமை இவைகள் சாதகருக்குக் கிடைப்பவை. கும்ப லக்கின சாதகருக்கு யோககாரகன் சுக்கிரன். அதற்கு அடுத்த படியாக யோகபலனைச் செய்ய வல்லவன் புதன் ஆகையால் கீழ் நிலையில் உள்ள கும்ப லக்கின சாதகர் சாரமில்லாத வியாழ திசையையும், சனி திசையையும் கழித்தவருக்கு புதன் திசை ஒரு வரப்பிரசாதம். கஷ்டம் நிறைந்த வாழ்க்கையில் தத்தளித்தவருக்கு புதன் திசை தொடங்கவே யோகம் உண்டாகிவிடும். புதன் புத்தி, கேது புத்தி சுக்கிர புத்திகள் முடியுமுன் சாதகர் உயர் நிலைக்கு வந்து பணத்தையும் தேடி பிரபல்யம் அடைந்து விடுவார். இக்குறுகிய காலத்திற்குள் இவருக்கு காணி, பூமியும் பணமும், உயர்பதவியும் வந்து சேர்ந்து விடும். இவர் வாழ்க்கை தொடர்ச்சியாக முன்னேற்றமுள்ளதாக அமையும். சுக்கிர திசை முடியும் வரை இவர் வாழ்க்கை வளமாக இருக்கும்.

கும்ப லக்கின சாதகர்களுக்கு சந்திரனும், வியாழனும் ஆறும் வீட்டதிபதியும், பதினோராம் வீட்டதிபதியும் ஆகின்றார்கள். இவர்களில் வியாழன் கூடுதலாக இந்த லக்கின சாதகர்கட்கு தீய பலனையே செய்வர். இவ்வியாழன் புதனுடைய அல்லது சுக்கிரனுடைய சம்பந்தம் பெற்றால், அல்லது 6, 8, 12ல் இருந்தால் பலன் நன்மையாக இருக்கும். அல்லாவிடில் இவ்வியாழன் சாதகரின் முன்னேற்றத்தைத் தடைசெய்வார். கிரகங்களில் மகா சுபனாக இருந்து பெருந்தீங்கைச் செய்யாவிட்டாலும் சாதகரின் மதிப்பைக் குறைத்து விடுவார். பலவித கஷ்டத்தையும் நஷ்டத்தையும் இவ்வியாழ திசை தோற்றுவிக்கும். இச்சாதகருக்கு முன்பு நடந்த இராகு திசையும் பெரும் பலன் செய்யக்கூடியதாக இல்லாததால் சனி திசை லக்னாதிபதி திசை வந்த பின்தான் சாதகர் ஒருபடி ஏறுவார்.வியாழதிசையில் சாதகர் பெரும் சம்பாத்தியம் செய்வது கஷ்டம். சுக்கிரனுடன் அல்லது புதனுடன் சேர்ந்திருந்தால் செழிப்பாக வாழ்வார். அல்லாவிடில் வருவாயும் செலவும் மட்டுமட்டாய் இருக்கும். வியாழன் மாரக தோஷமுடையவன்.தேகசுகத்திற்கு பங்கம் விளைவிப்பதுடன் பொருளையுமே அழித்து விடுவார். சாதகர் தொழில் துறையிலும் மேல் அதிகாரிகளின் வெறுப்பைச் சம்பாதித்து விடுவார். இவருக்குப் பொறுப்புகள் அதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் இருப்பதால் இவர் மனதிற்கு சஞ்சலமே உண்டு. சாதகர் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் எதைச் செய்தாலும் தக்க பலன் கிடைப்பதில்லை. குடும்பச் சீவியம், பிள்ளைகளின் முன்னேற்றம் இவை பாதிக்கப்படுவதால் சுகசீவியம் (சுகம்) கிடைப்பதில்லை. இவ்வியாழ திசை ஆரம்ப திசையாகில் சனி திசையில் முன்னேறி புதன் திசையில் உயர் பதவியைப் பெறுவதுடன் புதன் திசை துவக்கம் ஒரே தொடர்ச்சியாக யோக பலன் நடக்கும். இந்த லக்கின சாதகர்கட்கு புதன் திசை, கேது திசை, சுக்கிர திசைகள் பெரும் பலனைச் செய்யும். அதேவிதம் இவர்கள் புத்திகளும் எல்லாத் திசைகளிலும் சுப பலனையே கொடுப்பர். வியாழ புத்தியும், சந்திர புத்தியும் விசேஷமாக எல்லாத் திசைகளிலும் அசுப பலனையே கொடுப்பர்.

# மீனம்

**மீன** இராசி வியாழனுடைய வீடு. இதில் பிறந்தவர்கள் வியாழனுக்குரிய உயர்தர தத்துவம், ஞானம், அறிவு, நற்குணம், சீலம், ஒழுக்கம் ஆகிய குணங்கள் பொருந்தியிருப்பர்.

மேலும் இவர் நேர்மை உடைவராகவும், இந்திரியங்களைக் கட்டுப்படுத்தும் திறமையுடையவராயும், அடுத்தவர்க்கு உதவி செய்யும் மனப்பான்மையுடையவராகவும், தொழிலில் கவனமுள்ளவராயும் இருப்பார். இந்த ராசியில் பிறந்தவர்கள் அநேகர் அறிவாளிகளாகவும் சிந்தனையாளர்களாகவும் மேதைகளாகவும் இருப்பார்கள். ரவீந்திரநாத் தாகூர் இந்த லக்கினத்தில் பிறந்தவர் என்று கூறுகிறார்கள். இந்த லக்கினத்திற்கு அதிபதி வியாழன். இவர் சாதகத்தில் பலம் பொருந்தியவராக இருத்தல் அவசியம். இந்த லக்கினத்திற்கு யோகத்தைச் செய்யக்கூடிய கிரகங்கள் சந்திரனும் செவ்வாயும் ஆகும். இவை 5,9ம் வீடுகளுக்கு அதிபதிகள். இத்திசைகள் சாதகருக்கு மேலானசோபன பலன்களைச் செய்யும். இந்த லக்கினத்திற்கு யோக திசைகளின் வருஷக் கணக்கு 17 வருஷம். இது ஆகக் குறைந்த காலம். ஆனால், இவர்களுக்கு வாழ்க்கையைத் திறம்பட நடத்தத் தேவையான மனோபலமும் தேகபலமும் உண்டு.

இந்த லக்கினத்திற்கு 3,6,8,11ம் வீடுகளுக்கு அதிபதியாகிய சுக்கிரன், சூரியன், சனி தீயவர்கள். இவர்களின் திசைகள் அசுப பலனையே கொடுக்கும். விசேஷமாக சுக்கிரன் 3,8ம் வீடுகளுக்கு அதிபதியாவதால் இவர் இந்த லக்கினத்திற்கு மிகவும் கொடிய பலனைச் செய்வார். மேலும் 1,4,7,10ம் வீடுகளுக்கு அதிபதிகளான வியாழனும் புதனும் நடுநிலையான பலனைச் செய்வார்கள். இவர்கள் திசைகள் மட்டமான பலனையே கொடுக்கும். ஆனால், சந்திரனுடைய அல்லது செவ்வாயுடைய சம்பந்தம் ஏற்பட்டால் இவர்கள் திசைகள் மேலான பலனைச் செய்யும். தனிமையாகப் பெரும் பலனைச் செய்யா. இங்கு இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்கினத்திற்கு செவ்வாய்,சந்திரன் யோகக்கிரகங்கள் என்றும் புதன்,வியாழன் நடுநிலையான கிரகங்கள் என்றும் சுக்கிரன், சனி,சூரியன் தீய கிரகங்கள் என்றும் கூறினேன்.

ஆனால்,சில சோதிட மேதைகள் சுக்கிரனையும் சனியையும் தீய கிரகங்களாகக் கொள்வதில்லை.அவர்கள் சுக்கிரன், வியாழனுடைய வீடாகிய மீன ராசியில் உச்சம் பெறுவதால் சுக்கிரன் மீன லக்கின சாதகர்களுக்குத் தீய பலனைச் செய்வதில்லை என்று சமாதானம் கூறுகிறார்கள். மேலும் சனி, துலா,தனு, மீன லக்கினங்களில் பிறந்தவர்களுக்கு சனி லக்கினத்தில் இருப்பின் ராஜயோக பலனைச் செய்வதாகவும் கூறுகிறார்கள். எப்படியும் சுக்கிரன் பாரதூரமான கெடுதியைச் செய்யார் என்பதைத் தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியது. ஆனால், ஆறுதிபதி சூரியன்.நல்ல பலனைச் செய்வது சந்தேகம்.

ராஜயோகம் : மீன லக்கினத்திற்கு ஒன்பதாதிபதி செவ்வாயும் பத்தாதிபதி வியாழனும் சேர்ந்தால் முதல்தரமான ராஜயோகம் ஏற்படும்.செவ்வாயும் வியாழனும் தத்தம் வீடுகளில் 9ல்,10ல் இருந்தாலும்,ஒருவரை ஒருவர் பார்த்தாலும், பரிவர்த்தனமாக வீடுமாறி இருந்தாலும், இருவரும் சேர்ந்து 9ல் அல்லது 10ல் இருந்தாலும் ராஜயோகம் உண்டாகும். 1,4,7,10ல் இருந்தாலும் ராஜயோகம் ஏற்படும். அதேவிதம் வியாழனும் சந்திரனும் (ஐந்து, பத்தாதிபதிகள்) கூடினாலும், ஒருவரை ஒருவர் பார்த்தாலும், பரிவர்த்தனமாக வீடுமாறி இருந்தாலும் ராஜயோகம் உண்டாகும்.இவ்வித ராஜயோகம் ஏற்பட்டிருக்கும் போது ஒன்பதாம் வீட்டிற்கு 9,10ம் அதிபதியாகிய சூரியன்,சந்திரன் மீன லக்கினத்திற்கு 10ம் வீடாகிய தனுவுக்கு 9,10ம் வீட்டாதிபதிகளாகிய சூரியனும் புதனும் சேர்ந்து இருந்தால் இவ்விரு யோகங்களும் முன் கூறிய யோகத்திற்கு வலுவூட்டும்.ஐந்து, பத்தாதிபதிகளாகிய சந்திரனும் வியாழனும் 5ல் அல்லது 10ல் சேர்ந்தால் முதல்தரமான குரு சந்திர யோகமேற்படும்.இவை சாமானிய யோகங்கள் அல்ல. சிரேஷ்டர்களுக்குரிய யோகங்களான சனியும்சந்திரனும் கூடினாலும்,ஒருவரை ஒருவர் பார்த்தாலும், பரிவர்த்தனமாக வீடுமாறி இருந்தாலும் தனயோகம் உண்டாகும்.

அதேவிதம் செவ்வாய் சனியுடன் சேர்ந்தாலும், ஒருவரை ஒருவர் பார்த்தாலும், வீடுமாறி பரிவர்த்தனமானாலும் தனயோகம் உண்டாகும்.சந்திரனும் செவ்வாயும் கூடி சசிமங்கள யோகம் எனும் தனயோகத்தை உண்டாக்கும்.செவ்வாய்,சனி, சந்திரன் இவை 2,9,11ல் இருந்தாலும் முதல்தர தனயோகம் உண்டாகும்.

மீன லக்கினத்திற்கு 6,8,12ம் வீடுகளுக்கு அதிபதியாகிய சூரியன், சுக்கிரன்,சனி ஆகியவை 6,8,12ல் இருந்தாலும், வீடுமாறி இருந்தாலும்,6ம் அதிபதி 8ல், எட்டாதிபதி 6ல் இருந்தாலும் அல்லது சனியும் சூரியனும் பரிவர்த்தனமாக இருந்தாலும் சுக்கிரன் 12இலும் சூரியன் 6இலும் இருந்தாலும் விபரீத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜயோகம் எனும் யோகம் உண்டாகும். புதன் 7ல் இருந்தால் முதல்தரமான மகாபுருஷ யோகமேற்படும். மேலும் வியாழன் லக்கினத்தில் புதன் 4ல், அல்லது 7ல், வியாழன் பத்தில் இருந்தாலும் யோகம் உண்டாகும்.

திசைகள்: மீன லக்கின சாதகருக்கு சந்திரனும் செவ்வாயும் யோக திசைகளை உண்டாக்குவர். இவர்கள் திசைகளை அனுபவிக்க மீன லக்கின சாதகர் எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. விசேஷமாக செவ்வாய் திசை மிகமிக சோபனமான பலனைச் செய்யும். மீன லக்கின சாதகருக்கு சூரியன் ஆறுதிபதி என்பதால் இவர் திசை தீய பலனையே செய்யும். சூரியன் 8ல் நீசமடைந்தால் பலன் நன்மையாக இருக்கும். சாதகர் ஒருபடி ஏறுவார். அப்படி அல்லாவிடில் பலவித இடைஞ்சல்களும் துன்பமும் துயரமும் சாதகருக்கு ஏற்படும். சூரிய திசையில் அரசபயமும் கடன் உபத்திரவமும் நோய் பீடையும் உண்டாகும். இவ்விதம் கஷ்டத்தை அனுபவித்த சாதகருக்கு சந்திர திசை துவங்கவும் அதிர்ஷ்டம் துவங்குகிறது.

இவர் உயர் நிலைமையை அடைகின்றார். சாரமில்லாத சுக்கிர திசையையும் சூரிய திசையையும் நீண்ட காலமாக அனுபவித்து அலுத்துப்போன சாதகருக்கு சந்திரன் திசை ஒரு வரப்பிரசாதம். சாதகரின் மறைந்திருந்த சகல ஆக்கபூர்வமான புத்தி யுக்தியும் திறமையும் வெளியாகின்றது. இவர் தன்னை உயர் நிலைக்குக் கொண்டுவரவேண்டிய யுக்திகளைக் கையாள்கின்றார். அதிர்ஷ்டமும் இவர் பக்கம் இருப்பதால் எல்லோருடைய மனதையும் வென்று உயர் இடத்தைப் பிடித்துக்கொள்கின்றார். பணம் தேட வழி வகைகளும் பிறக்கின்றன. சந்திர திசையில் செவ்வாய் புத்தியில் எதிர்பாராத வாய்ப்புத் தோன்றி நிரந்தரமான பதவியைப் பெற்றுக்கொள்கின்றார். இவருக்குப் படிப்படியாகப் பொருளும் காணி பூமியும் வந்தடைகின்றன.

சந்திர திசையில் சாதகர் சாந்தமும் சந்தோஷமும் நிறைந்தவராயும் எல்லோருடனும் வாஞ்சையுடன் பழகுபவராகவுமிருப்பதால் எல்லோரும் இவரை மதிக்கிறார்கள். இவர் மனதும் தூய்மையானது. இவர் வளமான வாழ்க்கை வாழ்கின்றார். சகலவித சுகபோகங்களும் இஷ்ட சித்தியும் இவருக்குக் கிடைக்கின்றன. இச்சந்திரன் 6, 8, 12ல் போனால் பலன் கெட்டுவிடும். வியாழனுடனோ செவ்வாயுடனோ சேர்ந்தால் குரு சந்திர யோகம், சசி மங்கள யோகம் என்று கூறப்படும் உயர்ந்த யோகங்களுண்டாகும்.

சாதகரும் எவ்வித கீழ்நிலையிலிருந்தவராயினும் இப்போது மதிக்கத்தக்கவராகத் திகழ்கின்றார். இவ்விதம் உயர் நிலைக்கு வந்த மீன லக்கின சாதகர் 10 வருட சந்திர திசையை முடிக்கவும், ஒன்பதாதிபதி பாக்கியநாதனாகிய செவ்வாயின் திசை துவங்குகின்றது. இது 7 வருடத்திற்கு மிக சோபனமான பலனையும் பொருளையும் வாரி வழங்கும். இவர் இக்காலத்தில் சாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரை உன்னத ஸ்தானத்தில் ஏற்றிவைப்பார். இச்செவ்வாய் 2,9,10ல் இருந்தாலும் வியாழனுடன் சேர்ந்து இருந்தாலும் சாதகர் வேகமாக முன்னேறுவார். குறுகிய காலத்தில் பெரிய பொருளைத் தேடிவிடுவார். செவ்வாய் திசையில் சாதகரின் முன்னேற்றத்தைத் தடைசெய்ய யாரும் முன்னுக்கு வரார். தனயோகமுள்ள சாதகமாகில் செவ்வாய் தன் திசையிலேயே சாதகரைத் தனவானுக்கிவிடும். இவ்வித நிலையில் உள்ள மீன லக்கின சாதகர் பின்னுக்கு வரும் திசைகளைப் பற்றிக் கிலேசப்பட வேண்டியதில்லை. இவரின் தேட்டம் அழிந்துவிடாது. செவ்வாய் திசையை அடுத்து இராகு திசை வரும். மீன லக்கின சாதகருக்கு இராகு திசை அவ்வளவுக்குத் தீங்கு செய்வதில்லை. ஏனெனில் ஒன்பதாதிபதி செவ்வாயின் திசைக்கும் பத்தாதிபதி வியாழனுடைய திசைக்கும் இடையே இராகு திசை வருவதால் இவ்விராகு திசை நல்ல பலனையே செய்யும் என்பது சோதிட வித்துவான்களின் அபிப்பிராயம். ராஜயோகமுள்ள சாதகத்தில் வியாழன், செவ்வாயின் அல்லது சந்திரனின் சம்பந்தம் பெற்றிருக்கும். அப்படியாயின் வியாழ திசையும் மிகமிக சோபனமாகவே இருக்கும். ஆகவே, சாதகர் சந்திர திசையில் ஆரம்பமாகிய யோகத்தை வியாழ திசை வரை அனுபவிப்பார். சனி திசை மந்தமான காலம். ஆனுல், புதன் திசை யோககாரகர்களால் பார்க்கப் பெற்ருல் பெரும் செல்வத்தைக் கொடுக்கும்.

மீன லக்கின சாதகர்கட்கு 3,6,8,11ம் வீட்டதிபதிகள் சுக்கிரன், சூரியன், சனி. இவர்கள் திசைகள் தீய பலனையே கொடுக்கும். இவர்களில் சுக்கிரன் மீன லக்கின சாதகருக்கும் பெரும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் கொடுப்பார். மீன லக்கின சாதகருக்கு சுக்கிரன் 3ம் 8ம் வீடுகளுக்கு அதிபன். இவர் கெட்டு 6,8,12ல் இருந்தால் அல்லது செவ்வாய் சந்திரனுடைய சேர்க்கை பெற்ருல் சாதகர் அதிர்ஷ்டசாலி. அப்படி இல்லாவிடில் இவர் திசை நடக்கும் காலத்தில் சாதகர் நிலைகுலைந்து நிற்க நேரிடும். இந்த சுக்கிரனுக்கு முன் உள்ள கேது திசையும் சுக்கிர திசைக்கு அடுத்துவரும் சூரிய திசையும் விரும்பத்தக்க திசைகளல்ல. மீன லக்கின சாதகர் புதன் திசையில் தேடிய தேட்டத்தை கேது திசை முடியும்வரை பாதுகாத்தாலும் சுக்கிரன் திசை அத்தேட்டத்தை முடித்துவிடும். ஆகையினுல் இந்த சுக்கிர திசையைப் பற்றி சாதகர் நன்கறிந்திருப்பது அவசியம். அத்துடன் இதன் தீயபலனை நன்குணர்ந்து தன் வாழ்க்கையை சீரிய முறையில் அமைத்துக் கொள்வது நல்லது. மற்றவருடன் போட்டி போடவும் தன் திறமையைப் பறை சாற்றி முன்னுக்கு நிற்கவும் உகந்த காலம் இது அல்ல. எவ்வளவுக்குத் தம்மை அடக்கி ஒடுக்கிக் கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு நல்லது. இத்திசை தன விரயத்தையும் முன்னேற்றத்திற்குத் தடையையும் பலவித இடைஞ்சல்களையும் உண்டாக்கி விடுவதுடன் சாதகருக்கு அவமானத்தையும் உண்டாக்கிவிடும்.

தொழில் முயற்சியை இவர் காப்பாற்றிக் கொண்டாலும் தொழில் ஸ்தாபனத்தில் மதிப்பு இவருக்கு இருக்காது. திருப்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக இவரை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். சாதகர் ஏதோ சுகமான வாழ்க்கை நடத்துபவர் போல் வேஷம் போடுவார். ஆனுல், உள்ளுக்கு ஒன்றும் இராது. பண வசதியோ திறமையோ இருக்கமுடியாது. இவரை நேர்மையும் உயர்ந்த லட்சியமும் நாடா. இவருக்கு ஐம்புலன்களுக்கும் இன்பம் கொடுக்கக் கூடிய சுகபோகங்களில் அங்கலாய்ப்பும் நாட்டமும் இருக்கும். ஆனுல், அனுபவிக்கக்கூடிய வசதி கிட்டாது தவிக்கின்ருர். அவமானம் தான். நல்ல சுக்கிரன் அழகிய பெண்களின் சகவாசத்தைக் கொடுக்கலாம். தீய சுக்கிரன் பெண்களால் துன்பமும் அபகீர்த்தியும் கெட்ட நோய்களும் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org